sky தமிழ் NEWS

ISSN 2792-1026

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்

skytamil.lk@gmail.com
www.news.skymediasl.com

மாதமிருமுறை | இதழ் - 8 | 16 -30 மே 2021 | @skytamil.lk





துணிந்தெழு கவிதைகள்




டிக்டொக்கும் வாலிபர்களின் கால வரையறையும்




இலங்கையை பூர்விகமாக கொண்ட 9 வயது மர்யம் ஜெஸீம், ஐக்கிய ராஜ்ஜியத்தின் "அதி சிறந்த அல்குர்ஆன் காரியாஹ்" வாக மகுடம் சூட்டப்பட்டார்



பாலஸ்தீனத்தின் விடுதலையும் உலகநாடுகளின் நிலைப்பாடும்

"சமூக மாற்றத்தில் பெண் ஒரு பங்காளியாக மாற வேண்டும். முதலில் மூடுண்ட போக்கிலிருந்து நாம் விடுபட வேண்டும்"

–Inner Wings கவிதைப் புத்தகத்தின் ஆசிரியை

## நுஹா ரிஸான்

# துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்

@skytamil.lk www.skymediasl.com

மாதமிருமுறை | இதழ் - 8 | 16-30 மே 2021






04 பக்கம்

14 பக்கம்

## டிக்டொக்கும் வாலிபர்களின் கால வரையறையும்






Inner Wings கவிதைப் புத்தகத்தின் ஆசிரியை நுஹா நிலான் அவர்களுடனான நேர்காணல்





22 பக்கம்

32 பக்கம்

இலங்கையை பூர்விகமாக கொண்ட 9 வயது **மர்யம் ஜெஸீம்,** ஐக்கிய ராஜ்ஜியத்தின் ”அதி சிறந்த அல்குர்ஆன் காரியாஹ்” வாக மகுடம் சூட்டப்பட்டார்








## பாலஸ்தீனத்தின் விடுதலையும் உலகநாடுகளின் நிலைப்பாடும்

41 பக்கம்

# துணிந்தெழு

வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்

**ஆசிரியர் , வெளியிடுபவர்**

ஜே.எம்.பாஸித்

**இணையாசிரியர்:**

நுஸைலா பதுர்தீன்

பாத்திமா ஷிப்னா ஆதம்

**நிர்வாக குழு:**

றொஸான் முஹம்மட்

அஸ்வர் ரிஸ்வி

**ஆசிரியர் குழு :**

எம்.நஸ்றீன் பானு

பாத்திமா சிரோணி

பஸீம் இப்னு ரஸுல்

பஹ்றியா பாயிஸ்

பாஷிரா ஜுனைடீன் - ஊடகவியலாளர்

முஹம்மட் ஹாசில் - ஊடகவியலாளர்

நியாஸ் பரீட் (சிராஜி) - கத்தார்

அகீப் நஸுர் - Graphic Designer

பாத்திமா ஸஹ்ரா - மாத்தளை

ஸஹ்பியா நஸார் - ஊடகவியலாளர்

ஷஹ்னா ஸப்வான்

எம்.ஜ.எம். முபீத்

எம்.பஹ்த் ஜுனைட் - ஊடகவியலாளர்

ஷகீனா ஷாகிர்

**ஆலோசகர்கள் :**

கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல்

கவிஞர் நஜ்முல் ஹுசைன்

ரஷீத் எம். பியாஸ் (நளீமி)

ரிம்ஸா முஹம்மத் - எழுத்தாளர்

அமின் மொஹமெட் (தமிழ்நெஞ்சம்)

பிஸ்ரின் முஹமத் - ஊடகவியலாளர்

ரினூசா நௌஷாட் - ஊடகவியலாளர்

ஜெஸீம் எ ஹமீது - UK

வாக்கிர் பாரிஸ் - Faby's Product

இறை ஆசியுடனும்,
வாசகர்கள்,
நண்பர்களின்
ஆத்மார்த்தமான
அன்பும், ஆதரவுடனும்
தொடர்ந்து பயணிப்போம்.
**ஸ்கை தமிழின்
சொந்தங்கள்
அனைவருக்கும்
நன்றிகள்!**



Basith jm
Director - Sky Tamil Media


**www.skymediasl.com**
**skytamil.lk@gmail.com**
**+94776391188**


தங்களது படைப்புகளும் எங்களது சஞ்சிகையில் இடம்பெற வேண்டும் எனில் மேலே குறிப்பிட்ட ஈமெயில் மற்றும் வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வையுங்கள்

@skytamil.lk



# இருக்கட்டும்

இருக்கட்டும் என்ற
ஒத்தி வைப்புக்கள் எல்லாம்
ஏதேதோ காரணங்கள் கொண்டு
இல்லாமல் போவது கணக்கில்லாக்
கணிப்பு தான்

சில நேரங்களில்
தேனுறுஞ்சப் பட்ட வதை போல்
வெந்தணல் காய்ச்சி
காற்றும் சுருட்டிக் கொண்டு
ஒதுக்கலாம்

இந்த இருக்கட்டும்
என்ற வார்த்தையின் பெரிதொரு
நம்பிக்கைப் பிரளயம்
இதயத்தை சுக்குநூறாகி
தணிந்து விடலாம்

எல்லாம் இருக்கட்டும்
என்ற போதிலும்
எதிலும் இல்லாமல் போதல்
என்பதில் நீறாகிப் போவது
வெறும் நம்பிக்கை மட்டுமே!



**க.ஷியா**



# புரியாத கவிதை நீ

புன்னகை சிந்தும் பூமுகம் காணப்
பூவிழி திறந்து பூத்திருந்தேன்..
கன்னம் முழுதும் கண்ணீர் வடியக்
கன்னி உன்னை தேடுகிறேன்...
எண்ணித் தினமும் ஏட்டில் எழுத
ஏனோ எனக்குத் தெரியவில்லை..
என்னில் வாழும் எந்தன் உயிரே
என்றும் என்றும் நான் மறவேன்...

கன்னல் மொழியில் கவிதை பாடிக்
கண்ணில் நீரை வரவழைத்தாய்..
அன்பை ஓதும் அமுத வரியில்
அடியேன் உயிரை எடுத்து விட்டாய்..
உன்னை யெண்ணி உயிரில் மேலாய்
உள்ளம் முழுதும் நிரப்பி விட்டேன்..
துன்பம் மறக்கத் துணிவாய் வந்து
துணையா யென்னில் தங்கிடு நீ!

**ஷிபானியா பௌசுல்**
**நேகம**



# சாயம் அல்லது நீலம்

கடலளவு வானளவு
என்றெல்லாம் குறுக்க முடியாது
நீ என் மனதளவு
அது பெருவெளி பேரண்டம்
இன்னும் அளவிட முடியாத
அடர்வனம்

அந்த நீல நயனங்களில்
நிறைந்து ததும்பும்
கனாக்கள் ஒவ்வொன்றிலும்
நான் கறுப்பு மொழி
நீ வெள்ளைப் பாகு

நாம் காற்று வாங்கிய சாளரத்தின்
சாயம் அல்லது நீலம்
வெளுத்தும் போயிற்று
எனது மழித்த தலை
உன் குழலில் மின்னும் வெள்ளி
சாட்சியாயிற்று

ஆயுள் பறவையொன்று
கண்ணாடியை வெறித்து வெறித்து
கொத்துகிறது
அதன் மழுங்கிய அலகில்
உடைந்து கலைகிறது பிம்பம்

பௌர்ணமிகள் புன்னகைக்கும்
இரவுகளை கண்டடைவோம்
கடைசி தருணங்களிலேனும்
இனி..கைகோர்க்கலாம்
காத்திருத்தல்தானே
நமக்கு வாழ்வானது!



**ரோஷான் ஏ.ஜிப்ரி**
**கத்தார்**



# அஜீரண மன்னிப்பு

குத்திக் காட்டப்பட்டு பேசித்தீர்க்கப்பட்ட
வார்த்தைகளை எளிதாக மறந்து விட
முடிவதில்லை
மன்னித்து விடவும் முடிவதில்லை

அதிலும் ஒரு தவறு
நம்மிடமில்லாத விடத்து
அந்த ஈரமில்லா வார்த்தைகள்
இன்னும் ஆழமான வலியைக் கொடுக்கும்.

"ஏதோ தெரியாம சொல்லிட்டேன்
மன்னிச்சிக்க, அதெல்லாம் மனசுல வச்சுக்காம
மறந்துடு ப்ளீஸ்"

என்று கேட்கப்படும் மன்னிப்புகளெல்லாம்
திரும்பத் திரும்ப மீட்டப்படுவதால்
எனக்கென்றால் அவை
பெறுமதியற்றவை,
சில நேரம் கடமைக்காக கேட்கப்படுபவை.

"அதெல்லாம் நான் ஒண்ணும் நினைக்கல"


என்று மட்டும் தான் சொல்லிட முடிகிறது
மன்னித்து விட்டாலும்
மறந்து விட்டேன் என்று கடந்து விட
முடிவதில்லை.

வார்த்தைகள் தெவிட்டத் தெவிட்டத்
தித்திக்கும்
சில நேரங்களில் குமட்டிக் குமட்டி அழவும்
வைக்கும்.

**-சப்னா நஸீர்-**
**கெலிஓயா**

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்

@skytamil.lk www.skymediasl.com
மாதமிருமுறை | இதழ் - 8 | 16-30 மே 2021



# கனவில் என் காதல்

என் வாழ்வே கனவு தானடா
உன்னை நினைத்து நினைத்து கனவில்
வாழ்கிறேனடா உயிரே....!

உன்னோடு சந்தோஷமாய் வாழும்
நாட்களை நினைத்து கனவு என்னும்
வலையில் சிக்கிக் கிடக்கிறேனடா...!

உன் கரம் பற்றிட வேண்டும்....!
உன் தோள் சாய்ந்திட
வேண்டும்....!
உன்னோடு செல்லச் சண்டைகள் போட
வேண்டும்...!
உன்னோடு கொஞ்சி பேசிட வேண்டும்...!
மழையில் நனைந்து
காதல் கதை பேச வேண்டும்...!
உன்னோடு கை கோர்த்து
ஊர் வலம் செல்ல
வேண்டும்...!
இப்படி விசித்திரமான கனவுகளோடு
கனவு எனும் வாழ்வில் ஏங்கித்
தவிக்கிறேனடா....!

இந்த கனவு எப்போது நிஜமாகும் என்று
பெரிய எதிர்பார்ப்புடன்
என் கனவு வாழ்க்கை
நகர்கிறதடா....!

வந்து விடு உயிரே வந்து விடு....!
என் கனவை நிஜமாக்க வந்து விடு....!

**உன் வருகைக்காக**
**என்றும் உன் ப்ரியமானவள்**
**பாத்திமா ஷப்னா**



# எது கவிதை...

மலர்ப்பொழில் எழிலினில்
எனை மறந்தேன்..
மலர்களே கவிதையென நான் இருந்தேன்.

காற்றின் தழுவலில் எனை மறந்தேன்...
காற்றுதான் கவிதையென நான் இருந்தேன்.

வானில் பல நிறம் பார்த்து எனை மறந்தேன் ..
வானமே கவிதையென நான் இருந்தேன்.

வெண்ணிலவின் ஒளியிலே எனை மறந்தேன்..
நிலவுதான் கவிதையென நான் இருந்தேன்.

குயிலின் மொழியிலே எனை மறந்தேன் ..
குயில் மொழி கவிதையென நான் இருந்தேன்.


நதிகளைக் காண்கையில் எனை மறந்தேன்..
நதிகளே கவிதையென நான் இருந்தேன்.

கடலினில் கால் நனைக்கையில் எனை
மறந்தேன்...
கடல் தான் கவிதையென நான் இருந்தேன்.

மழையினில் நனைகையில் எனை மறந்தேன்...
மழைத்துளி கவிதையென நான் இருந்தேன்.

குழந்தையின் அழைப்பினில் இவை
அத்தனையும் மறந்தேன்..
குழந்தையே கவிதையென நான்
உணர்ந்தேன்.

**மக்கொனையூராள்**



துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்

@skytamil.lk www.skymediasl.com
மாதமிருமுறை | இதழ் - 8 | 16-30 மே 2021



# திருமணம்

திருமணம் என்பது மங்கையின் கழுத்தில்
தூக்கு கயிறு கட்டுவது அல்ல
திருமணம் என்பது அடகு வைக்கும்
பொருளும் அல்ல
திருமணம் என்பது விலை போகாத
பொருளினை விற்பனை செய்யும்
இடமும் அல்ல

அது ஒரு காலத்தால் அழியாத பந்தம்
அது ஒரு பூர்வ ஜென்ம பந்தம்
அது ஒரு இறைவனின் அருட்கொடை
அது ஒரு இரு உறவுகளுக்கிடையில் உள்ள
உன்னத காதல்
அது ஒரு இணைபிரியாத அன்பான கூடல்

ஆணின் பையில் உள்ள பணத்தினை
பார்த்தும் அவனது அந்தஸ்து,தகுதியினை
பார்த்தும் செய்வது திருமணம் அல்ல
மாறாக அவனது நல் உள்ளத்திற்கு
பெறுமதியினை அவனது ஆண்மையின்
உண்மையினை அறிந்து மங்கையின்
கையினை பற்றி கொள்ள செய்தலே
உண்மையான திருமணம்

ஆண்மை என்பது பெண்ணை அடக்கு முறை
செய்வது அல்ல ஆண்மை என்பது
பெண்ணானவள் தன் மீது கோபப்படும்
போது
தனது பொறுமையினால் அவளின்
கோவத்தை சாந்தப்படுத்துவது
தன்னிடம் உள்ள அன்பினை சரியான
முறையில் வெளிக்காட்டுவது
தன்னை நம்பி வந்த பெண்ணின் கண்ணில்
இருந்து நீர் வடியாமல் பார்த்துக் கொள்வது
போன்றவை ஆகும்

இறுதியில் திருமணம் என்பது நாம்
வாழ்க்கையை எவ்வாறு வாழ்ந்தோம்
என்பதற்குரிய ஒரு வெற்றி சான்றிதழ் ஆகும்.



**முபீத்**
**சாய்ந்தமருது**

# என் ஆசிரியைக்கு ஒரு மடல்

அறிவைத் தேடி
பயணித்த பாதையில்
கண்டு கொண்டேன்
உங்கள் உறவே

உயர்தரம் கற்க
கலைப் பிரிவை தேர்ந்தெடுத்து
சாஹிரா வளாகத்தில் கைகோர்த்தேன்
மாணவனாய் உங்கள் பணியோடு

அறிவை சுமந்தவளே
பண்பாட்டில் மிளிர்ந்தவளே
ஆன்மீகத்தில் உயர்ந்தவளே
உங்கள் ஆசிரியைப் பணியில்
நான் நனைந்தேன்
கற்றேன் அறிவை
பெற்றேன் பண்பாட்டை

தேடி வந்த மாணவர்களை
சேர்த்துக் கொண்டீர்
உங்கள் பிள்ளை போன்று
கைகோர்த்தோம் உங்கள் கற்பித்தலில்
நிலைத்திருக்கவில்லை உங்கள் உறவு

கல்லறை சென்றவளே
ஓர் உயிரை கருவில் சுமந்தவளே
உன் உயிர் பிரிந்த அந்த நொடியில்
கருவில் சுமந்த உயிரே
உன்னோடு கல்லறைக்கு
எடுத்துச் சென்றவளே
உன் தாய்மைக்கு
எங்கு ஈடில்லை

அண்மையில் மறைந்த
என் ஆசிரியை திருமதி.
ஹாஜிமா அவர்களுக்கு
சமர்ப்பணம்



**தன்ஸீம் ரஹ்மத்துல்லாஹ்**



# வந்தியதேவன் காதலி

வாசகசாலையின் வாசம்.....
சற்றே எனக்குள் போதையானது.....
போதைக்கு ஒரு புத்தகம் தேவைப்பட்டது.
திண்ணைகள் இருக்கையாய் மாறின.........
சில திட்டுக்கள் வீட்டில் இலவசமாகின......
காதல் காவியங்கள் என் கைகளில் புரள
ஆரம்பித்தன.........
என் கண்கள் பல சாகச வீரர்களை தேட
ஆரம்பித்தன.......
அன்றுதான் நூலகராக்கை உன்னை
அறிமுப்படுத்தியது எனக்கு பொன்னியின்
செல்வனாய்..........
அன்று புதுவெள்ளத்தில் விழுந்தவள்
இன்னும் எழும்பல....... என் இதயத்தில்
கடிவாளமற்ற நாயகனாய் என்னுள்
நுழைந்தாய்......நீ.....
வாள்களோடு வித்தைகள் புரிந்தாய்.......
பிறப்பால் சத்திரியரானாலும்
செயலால் சாணக்கியனாய்......
காதல் லீலையிலும் நீ மன்னன் தான்
இருந்தும் என் மனம் பொறாமை கொள்கிறது
நீ குந்தவை பிராட்டிக்கு
நாயகனாகும் போது............
என் தூக்கத்திற்கும் துணைக்கும்
உன்னையே அழைக்கின்றேன்.....என்
பேதமையை...
என்னவென்று சொல்வது.......????
உன்னை தான்டி பல வீரர்களை என்
கண்கள் பார்த்தன.......இருந்தும் நீயே என்
காதலாகிறாய்.
வந்தியதேவா.......!!!!!

**ர. தேவஷாலினி**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**



# கனவுகளோடு...

நீ தந்த முத்தங்களை
தனிமையிலே மீட்டிப்பார்த்து
கனவுகளில்
அரங்கேற்றம் செய்கிறேன்.

கரம் பிடித்து....
கட்டி அணைத்து
கட்டிலில் சண்டையிட்ட
நிஜங்களை இன்று
நிழல்களாய்த்தான் காண்கிறேன்.

முதல் இரவு....
படுக்கை அறை பகிர்வு.
பஞ்சி மெத்தை போர்க்களமானதும்
கெஞ்சலும்.....
கொஞ்சலும்....
தீண்டலால் என்னை தாக்கியதும்
முத்தத்தால் உன்னை நான்
முற்றுகை இட்டதும்
வெற்றி தோல்வி அற்று
இன்பமாய்
ஓர் உடலாய்
போர்வைக்குள் நிசப்தமான தருணங்கள்
போர் தொடுக்குதடா மனதில்.

நீ உறங்கிய தலையணை
இன்று நீ ஆகாதோ
என தவிக்கும்
என் மனதுக்கு
விடைதருவாயா..?

காதல் கணவனாய் நீ
காத்திருக்கும் மனைவியாய் நான்
தொலைபேசியில் கேக்கும்
உன் குரலில்தான் -என்
உயிர் காற்றே உள்ளது அறிவாயா...?

மெழுகாகி என் வாழ்வு ஒளியாக்கினாய்
நெறிதவறாமல் காத்திருப்பேன்....
நெருங்கிப் பேச
பாசமாய் தோள் சாய
மீசையை இழுத்து
உன் கோபத்தை ரசிக்க....
காத்திருக்கிறேன் காதலுடன்..

வெளிநாட்டு வாழ்வுதனை
விடுவித்து வா
ஒருநேர உணவேனும்
ஒருமித்து உண்போமே.

**தங்க யுவன்**
**புதுக்குடியிருப்பு, மட்டக்களப்பு, இலங்கை**



# துணிந்தெழு பெண்ணே!

பெண்ணே துணிந்தெழு
பெட்டிப்பாம்பல்லவே
நீ அடங்கிட
அடக்கு முறைமைக்குள் நித்தம்
அடைபட்டிருப்பதை தவிர்

வெந்து வெட்கித்ததும் போதும் வெறுமையினை
ஏற்காதே ..
நொந்து நொந்து மனம் நொந்து நாவடைத்து
நயவஞ்சகர் முன் நில்லாதே!

அழுதழுதே அறிவை இழக்காதே
அறியாமையிலிருந்து வெளியேறு உள்ளத்தை
உடைத்தெறியும் உதவாக்கரைகளை விரட்டியடி

காத்துக்கொள் உன்னை
காலம் கையசைக்கும் வரை பெண்மைக்கு
எல்லாமுண்டு பெருக்கிக் கொள் தேடலை ...

பாசம் காட்டி மோசம் செய்வோரை பாதத்துக்கு கீழ்
நசுக்கிடு! பயமென்றதை பிடுங்கி எறி பக்குவமாய்
உன்னை பாதுகாத்துக்கொள்

வெந்து மனம் நொந்துவிடாதே வேதனையும்
சோதனையும் வரலாம் காத்திருப்பில் காலம்
கனியும்
கற்றதைக் கொண்டு நிமிர்ந்து நில்

புறப்படு வீறுகொண்டெழுந்திடு
பெண்மை மென்மை மட்டுமல்ல
வையகம் பறந்து கிடக்கின்றது வாழும் வழிகளும்
காத்துக்கிடக்கின்றது

முன்னோர் சொன்னதை உடன் முத்தாய்
சொத்தெனவே
யாக்கிடு .
நீடித்த வாழ்வுக்கு வழிகள் நிரம்பியே கிடக்கிறது
அதனுள்ளே.....
எனவே
துணிந்தெழு
பெண்ணே!!
துணிந்தெழு!

**எஸ்.யூ. கமர்ஜான் பீபீ** (JP)
வத்தளை



# என் தாயானவள்

உன்னைப் பற்றி எழுதும் போது
என் பேனா கர்வம் கொள்கிறது
மை கூட மையல் கொள்கிறது
உனதான மரியாதை பிரவாகிக்கிறது...

உன் உதிரத்தில் நானிருந்தேன்
உணர்ந்தது பூவாசம்..
நிசப்தத்தின் மத்தியில்
என்னை தாலாட்டியது உன் நாடித்துடிப்பு...

மொழிகள் எல்லாம் அங்கிருக்கவில்லை என்
அசைவு மொழிகளுக்கெல்லாம்
பக்குவமாய் நீ பதில் சொன்னாய்...

குருநகை சிந்தும் மல்லிகை
சிரிக்கின்ற செந்தாமரை
ஆறுதல் தரும் அல்லிகள்
அனைத்தும் உன் மறுவடிவம் ...

அறிவுக் கடலில் அகழ்ந்தெடுத்த முத்து
அன்புப் பிணைப்பில் சிக்குண்ட இரத்தினம்
பாச நதியில் மூழ்கிய மாணிக்கம்
தாயின் மடியில் தலை வைத்தால்
வேதனைகள் கூட வெண்ணிலாவாக மாறும்,.

அவையகம் தாண்டி மனதாலும்
பாரிய வலி கண்டவள்..
நான் பிறக்க அவள் கண்டது
மரண வலி...

உயிரை தொலைத்து
வழிக்காய் உதைத்த போது
நான்
உயிருடன் பிறந்திருந்தேன்
என் தாயோ
இறந்து பிறந்திருந்தாள்...!

நான் முளைத்த போது
என் தாய் களைத்துப் போயிருந்தாள்...
அவள் செத்து கதறிய பின் தான்
நான் கத்தி பிறந்திருந்தேன் ...!

கோடி இன்பம் கொட்டி நின்றாலும்
"உம்மா"என்ற சொல்லுக்குள் அடங்கி விடும் !
என் உயிர் சுமந்த தாயே!!...

**ஹஸீமதா ஏ கப்பார்**
மாவனல்ல,உயன்வத்த

# தாய்க்கான என் ஏக்கம்

ஆராரோ ஆரிரரோ
யாரடித்து நீயழுதாய்
என்றுகேட்க நானுமில்லை
என் மகனே
ஏக்கம்விடு என் மகனே ....!

ஏகனவன் அழைப்பையேற்று
தரணிவிட்டு நானுஞ்சென்று
ஆண்டுபல ஆனாலும்
ஆராத்துயர் உன்னில் உண்டு
என் மகனே .....!
ஆராரோ ஆரிரரோ
யாரடித்து நீயழுதாய்
என்றுகேட்க நானுமில்லை
என்மகனே....!

உன் தூக்கம் கலையும்
என்றென்னியே
நிம்மதியாய் நீயுறங்க
சொப்பணத்திலும்
நான் வருவதில்லையே
என்மகனே
ஆராரோ ஆரிரரோ
யாரடித்து நீயழுதாய்
என்றுகேட்க நானுமில்லை
என்மகனே
நிம்மதியாய் நீயுறங்கு
என்மகனே ....!

கவலைவரும் வேளையதில்
தாய்மடிக்காய் நீயேங்க
உன் தலைகோதி
வேதனைகள் போக்கிவிட
நானுமில்லை
என் மகனே
ஆராரோ ஆரிரரோ
யாரடித்து நீயழுதாய்
என்றுகேட்க நானுமில்லை
என்மகனே
துயரம்விடு என் மகனே ....!

பேரன் பேத்தி காணவில்லை
பெயரும் வைக்க நானுமில்லை
பேறுபெற்று பல்லாண்டு
நீயும்வாழ பெரிதாய் நானும்
செய்யவில்லை
என்மகனே
ஆராரோ ஆரிரரோ
யாரடித்து நீயழுதாய்
என்றுகேட்க நானுமில்லை
என்மகனே
எழுந்து வா என்மகனே ....!

கண்ணியமான இருப்பிடத்தில்
காத்திருப்பேன் நானுமங்கு
கண்டவுடன் காவிக்கொள்வேன்
உன்னையங்கு
கவலைவிடு என்மகனே
ஆராரோ ஆரிரரோ
யாரடித்து நீயழுதாய்
என்றுகேட்க நானுமில்லை
என்மகனே ....!

ஆராரோ ஆரிரரோ
யாரடித்து நீயழுதாய்
என்றுகேட்க நானுமில்லை
என்மகனே ....!



**முஹம்மது நியாஸ்**
**ஏறாவூர்**

# தொலைப்பேசிக் காதல்

யாரென்றும்
தெரியாத புதிய
அறிமுகத்தில்
உன் புத்தி இழக்கிறாய் !

வயதுக் கோளாறில்
வசந்தங்களை வசமாக்குவதாய் எண்ணி
நாசங்களை பூசிக் கொள்கிறாய் !

பெற்றவர்களை குருடாக்கி விட்டு
நடிப்பால் உன் வாழ்க்கையை இருளாக்குகிறாய் !

வீணாக காலத்தை
கடத்தி
காற்றோடு மானத்தை அனுப்புகிறாய் !

இந்த சொற்ப இன்பங்களில்
இலட்சியங்களை
இல்லாமல் ஆக்குகிறாய் !

நாளை அவன்/ள் தான்
நிச்சயம் என முடிவாகமலே
வார்த்தைகளால் வாழ்ந்து முடிக்கிறாய் !

புகைப்பட பரிமாற்றங்களில்
நிமிடங்கள் ஒவ்வொன்றையும் தடுமாற்றம்
ஆக்குகின்றாய் !

உதிரத்தால் உருவான
உறவுகளை
உதறித்தள்ளி ஊமையாய்
உளறுகிறாய் !

இன்று ஒருத்திவன் /ள்
பிளாக் லிஸ்டில் வைத்து
நாளை மறு வார்த்தையில்
யாருடனோ வாழ்ந்து
காட்டுகிறாய் !

எத்தனை ஏமாற்றங்கள்
அத்தனை ஆன்மாக்களின்
திட்டுகளில் திளைத்து
நிற்கின்றாய் !

உன்னதமான ஒன்று
உனக்காக காத்திருக்க
எதற்கு இந்த
அருவருப்பான அரங்கேற்றங்கள்...

வசந்தம் என
எண்ணி உன்னையே
வஞ்சிக்காதே
அது வெறும் "நாசம்"

தொலைபேசியில்
தொடங்கிய
தொடர்பாடலில்
தொலைத்ததும்
தொலைந்ததும்
போதும்
திருந்திவிடு...!

**முபஸ்ஸரா பிர்தௌஸ்**
கலேவெல.

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்
@skytamil.lk www.skymediasl.com
மாதமிருமுறை | இதழ் - 8 | 16-30 மே 2021



# பயம்

மக்கள் என்ன சொல்லுவார்களோ என்ற பயம்.

வாழ்க்கையில் கீழே விழுந்தால் அடுத்த அடி எடுத்து வைக்க பயம்.

அது அப்படி நடந்து விடுமோ இப்படி நடந்து விடுமோ என்ற பயம்.

இப்படி பயந்து பயந்து வாழ்ந்தால் உன்னால் உன் இலக்கை அடைய முடியாது .

எனவே இந்த பயம் எல்லாம் தூக்கி எறிந்து விட்டு என்னால் இதெல்லாம் கடந்து முன் வரமுடியும் என்று நினை நிச்சயமாக உன்னால் உன் இலக்கை அடைய செய்ய முடியும்.

**BY JASOORA JALEEL**




# மன்னிப்பு கேட்டல்

மனிதர்களுக்கு இடையில் கருத்து வேறுபாடுகள் வருவது இயல்பு அவை தீர்க்கப்பட்டு சமாதானத்தில் முடிக்கப்பட வேண்டும் . ஆனால் இன்றைய காலத்தில் கருத்து வேறுபாடுகளால் சண்டையிட்டு ஒருவருக்கு ஏசி அவர்களை ஒரே நொடியில் நம் வாழ்வில் இருந்து விரட்டி விடுகின்றோம். ஒரு நல்ல உறவை நம் வாழ்வில் இருந்து விரட்டி விடுவது இலகுவானது .ஆனால் அதேபோல் ஒரு உறவை தேடுவது என்பது கடினமான ஒரு செயல் .பேசிக் கொண்டிருப்பதற்கு எத்தனை உறவுகளை வேண்டுமானாலும் தேடிக்கொள்ளலாம் ஆனால் உண்மையான நேசத்தை உடைய உறவுகள் தேடுவது கடினம் .

இரு தரப்பினருக்கு இடையே கருத்து வேறுபாடு வந்து இருந்தால் மன்னிப்பு கேட்டு விடுங்கள் .இன்று பலருக்கும் உள்ள பிரச்சினை ஈகோ. நான் அவர்களிடம் மன்னிப்பு கேட்கமாட்டேன் . அவர்கள் வேண்டுமென்றால் தேடி வரட்டும் என்பதே. கருத்து வேறுபாடுகளுக்காக மன்னிப்பு கேட்டு சமாதானமாகுங்கள். ஏனெனில் காலங்கள் கடந்து சென்றிருக்கலாம் ஆனால் வலிகள் நிச்சயம் மனதுக்குள் இருக்கும். அதேபோல் நாங்கள் இந்த உலகை விட்டு பிரிந்து சென்று அல்லாஹ் ஒருவரிடம் பதில் சொல்ல வேண்டியிருக்கின்றது.ஒருவரிடம் 3 நாட்களுக்கு மேல் கோபம் கொள்ளக் கூடாது.

நம்மிடம் எந்தத் தவறும் இல்லை .நான் ஏன் மன்னிப்பு கேட்க வேண்டும் என்ற மனநிலையை விட்டுவிடுங்கள். நிச்சயமாக உங்களிடம் ஒரு நியாயம் இருக்கும். எதிர்த்தரப்பிலும் ஒரு நியாயம் இருக்கும் எனவே எதிர்த்தரப்பிலுள்ள நியாயங்களையும் கொஞ்சம் காதுக்கு கொடுத்து கேளுங்கள்.

மன்னிப்பு கேட்பது என்பது எம்மை ஒருபோதும் தாழ்த்தாது அது நம் பண்பின் உயர்வை காட்டும். ஒருவரிடம் இன்று மன்னிப்பு கேட்க வாய்ப்பிருந்தும் நீங்கள் கேட்காமல் இருக்கலாம். ஆனால் நாளை நீங்கள் மன்னிப்பு கேட்க வேண்டிய நபர் இந்த உலகிலே இல்லாமல் இருக்கலாம். ஒருவரின் மனதை நோகடித்து விட்டு நாம் சந்தோஷமாக வாழ முடியாது ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் நிச்சயமாக அது நம் வாழ்விலும் தாக்கம் செலுத்தும் என்பதை எவராலும் ஏற்றுக் கொள்ளப்படாத நிதர்சனமான உண்மை. ஒரு உறவை நம் வாழ்வில் இருந்து தூக்கி வீச முன்பு அவர்கள் நம் வாழ்வில் எப்படியெல்லாம் இருந்தார்கள் நமக்காக என்ன என்ன செய்தார்கள் என்பதை சற்று யோசித்து பாருங்கள் ஒரு போதும் தூக்கி வீச மனம் வராது. நாம் அடுத்தவர்களை எதிர்த்து மனதை நோகடித்து குற்ற உணர்வு இல்லாமல் சந்தோசமாக வாழ முடியும் என்றால் மனிதனாக இருப்பதில் அர்த்தமே இல்லை.

**அம்ரா முஜாஹிட்**
**உளவியல் துறை மாணவி**



# போதைப் பொருள் பாவனையும், இன்றைய மாணவர்களின் நிலையும்...!

இன்றைய மாணவர் சமுதாயம் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் முக்கிய இடத்தில் போதைப் பொருட் பாவனையே முதலிடத்தில் இருக்கிறது. ஆரம்ப காலங்களில் ஒரு குறிப்பிட்ட வயதினர் மத்தியில் மட்டுமே காணப்பட்ட போதைப் பொருட் பாவனை இன்று விஷக் கிருமி போல் மாணவர்கள் மத்தியிலும் பரவி வருகிறது.

நாகரிகம் என்பதே இன்று போதையான பாதையாய் மாறிபோய் விட்டது. கணனி மயமான இன்றைய காலகட்டத்தில் முன்னேற்றத்தின் பாதையில் மாணவர்கள் வீறுநடை போட்டாலும் அவர்களின் பாதை ஏதோ ஒரு தருணத்தில் திசை மாற்றப்படுகிறது.

ஒரு குழந்தையின் முதல் பள்ளிக்கூடம் அதன் தாயின் மடிதான். தாயின் அன்பிலும், அரவணைப்பிலும் வளர்ந்த குழந்தை திடீரென வழி தவறி நடக்கிறது என்றால் அந்த தாயின் அன்பில் மாற்றமில்லை. குழந்தை வழிநடத்தப்பட்ட விதம் தான் தவறாக இருக்கிறது.

மாணவர்களை படி படியென்று நச்சரிக்கும் பெற்றோர்களும், தன் பிள்ளை டாக்டராக வேண்டும், இன்ஜினியராக வேண்டும் என்று கனவு காணும் பெற்றோர்களும் அவர்கள் மனதில் எதை ஆசைப்படுகிறார்கள் என்பதை அறிய மறந்து விடுகிறார்கள். அவர்களின் கனவுகளை மதிக்க தவறி விடுகிறார்கள். அவர்களின் சின்ன சின்ன ஆசைகளை புரிந்து கொள்ளவும் முயற்சிப்பதில்லை. பிள்ளைகள் படிப்பதற்காக வசதிகளை செய்து கொடுக்கும் பெற்றோர்கள் அவர்களின் நடவடிக்கைகளை கண்காணிக்க தவறி விடுகிறார்கள். அவர்கள் தேர்ந்தெடுக்கும் நண்பர்களை கூட தெரிந்து கொள்ளவும் முயற்சிப்பதில்லை. அவர்களிடம் ஏற்படும் திடீர் மாற்றங்களைப் பற்றியும் கவலைப்படுவதில்லை. இதனாலேயே தான் அவர்கள் பாதை மாறிய பயணங்களை தொடர்கிறார்கள். நாகரிகம் என்ற பெயரில் அவர்கள் செய்கின்றவற்றையெல்லாம் சகஜமென எண்ணி கைவிடப்பட்ட பிள்ளைகள் காலம் கடந்த பின்பு தான் பெற்றோர்களின் கவனத்திற்கு வருகிறார்கள்.
முடிவு - போதைக்கு அடிமையான பிள்ளைகளை காப்பாற்ற முடியாமல் அவர்களை இழந்துவிடும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

இன்றைய காலகட்டத்தில் பாடசாலை மாணவர்களே போதைப் பொருளுக்கு அடிமையாகி இருக்கிறார்கள். பாடசாலை நாட்களில் தான் போதைப் பொருள் பாவனையை சிறிது சிறிதாக அவர்களின் அறியாமையின் காரணமாக பழகிக் கொள்கிறார்கள்.இதுவே நாளடைவில் அவர்களின் வாழ்க்கையை கரையான் போல் அழித்து விடுகிறது.

இதற்கு கணனியின் வரவும், செல்போன்களின் ஆதிக்கமும் முக்கிய இடத்தை பிடிக்கிறது. கணனி எம்மிடம் இருந்தால் இந்த உலகத்தையே சுற்றி வரலாம். செல்போன்கள் இருந்தால் இந்த உலகமே நம் கைக்குள் அடக்கம் என்ற சிந்தனையிலே இன்றைய மாணவர்கள் வளர்கிறார்கள்.
தன் பிள்ளை எதை, எப்போது உபயோகிக்க வேண்டுமென்ற அறிவு முதல் பெற்றோருக்குத்தான் இருக்க வேண்டும். எதிலும் நன்மை, தீமை என்ற இரண்டும் உண்டு. எதுவாயினும் நாம் அதை உபயோகிக்கும் முறையில் தான் உள்ளது.

நம் குழந்தைகள் சிலந்தி வலையில் சிலந்தியாக இருக்க வேண்டுமா? அல்லது சிலந்தி வலையில் மாட்டிக் கொண்ட பூச்சிகளாக மாற வேண்டுமா? என்பதை ஒவ்வொரு பெற்றோர்களும் தான் முடிவு செய்ய வேண்டும்.

ஒரு குழந்தை நன்னெறிகளோடு வளர்க்கப்படுமானால் அக் குழந்தை உலகத்தின் நல்லது எது? கெட்டது எது? என்ற வித்தியாசங்களை உணர்ந்து வளரும் என்பதில் ஐயமில்லை.
சிறு வயதிலேயே மாணவர்கள் தம் மனதில் இலட்சியப் பாதைகளை வகுத்து அதன் பாதையில் தம் காலடித் தடங்களை பதிக்க வேண்டும்.

பெற்றோர்கள் எவ்வளவு தான் பிள்ளைகளை சரியான பாதையில் வழிநடத்தினாலும் அடுத்து பாடசாலைகளும் அவர்கள் வழிதவறி

நடக்கக்கூடிய இடமாக உருவாகி வருகிறது. மாணவர்களின் நலனில் பாடசாலைகளினதும், ஆசிரியர்களினதும் பங்கு அதிகமாகவே உள்ளது. அவர்களின் கல்வியில் அக்கறை செலுத்தும் அதே நேரம் அவர்களின் தனிப்பட்ட நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.
அதுமட்டுமன்றி எம் சமுதாயமும் அவர்களது நலனில் அக்கறை காட்ட வேண்டும்.
முதலில் மாணவர்களுக்கு போதைப் பொருள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

இவையனைத்தும் சரியான முறையில் பேணப்பட்டு மாணவர்கள் நேர்த்தியான வழியில் வழிநடத்தப்படுவார்களேயானால் நிச்சயம் அவர்களை காப்பாற்றி ஒரு சிறந்த மனிதனாக உருவாக்கலாம்.

ஒவ்வொரு மாணவர்களும் நாம் எங்கிருந்து வந்தோம்...?
நாம் பிறந்ததன் நோக்கமென்ன...?
நமது வாழ்க்கைப் பயணத்தின் முடிவு எங்கே...?
என்ற கேள்விகளுக்கு விடை தேடும் எண்ணத்தில் தங்களின் இலட்சியப் பாதையில் தங்களின் பயணத்தை தொடர வேண்டும்.

**வாழ்க்கை என்பது ஒருமுறை தான்!**
**வரமாய் வந்த வாழ்விது**
**வளமாய் வாழ வழி காண்பாய்!**
**பட்டாம் பூச்சியாய் பறந்து திரியும்**
**பசுமையான காலமிது!**
**தவறிப் போன காலமதை தள்ளிவிட்டு**
**நாளைய விடியலுக்காக வீறுநடை போடு!**
**கனவுகளில் விழித்து கனவுகளில் வாழ்ந்து**
**கனவாகிப் போவதா உன் வாழ்வு..!**
**வெற்றிப் பாதையில் விடியலைத் தேடும்**
**வெண்புறாக்கள் நீங்கள்...!**
**கண்டதே காட்சி! கொண்டதே கோலமென**
**மாயையாத் தோன்றும் காகிதப் பூக்கள் அல்ல நீங்கள்!**
**தினம் தினம் புதிதாய் பூக்கும்**
**வண்ண மலர்கள் நீங்கள்...!**
**ஒடிந்து போனது உங்கள் சிறகுகள் மட்டும் தான்!**
**உறுதி கொண்ட மனமெனும் சிறகை விரித்து**
**இலட்சிய வானில் உயர உயரப் பறந்திட துணிந்திடு...!!**
**உனக்கென ஓர் எதிர்காலம் காத்துக் கிடக்கிறது...!**
**நாளைய உலகம் உன் கையில்...!!!**

**பேனா முனையில் ஆளுமைகளைத் தேடும் இவள்:**
**“கவித் தாரகை ”**
**நிப்ரா நிஜாம்**
**( நீர்கொழும்பு )**



# அம்மா

கோடி வார்த்தைகள் கொட்டினாலும்,-
தாய்மையின் தியாகம் வார்க்கும் வார்த்தைகள்
என்னுள் இல்லை

வலியை கூட பரிசாக நினைத்து
உலகை காண வா மகளே என அழைத்தவள்
தாய்

ஆசையை துறந்தவள்
அன்பால் என்னை வென்றவள்
பட்டினியை புதைத்தவள்
பாசத்தை பங்கு போட்டவள்
நடைப்பழகி தந்தவள் நிலாச்சோறு
ஊட்டியவள்
அவள் நிச்சய பாத்திரம்
இல்லை இல்லை அற்ச்சய பாத்திரம்

அளவிள்ளா தாயின் அன்பிற்கு
அகிலமும் அடங்கும்...

தலைமுறைகள் பலதானாலும்,
தாய்மை என்றும் பழையதாகாது....

அம்மா!!
உன் அரவணைப்பிலே
எனக்கேது கவலை.....
ஆற்றி தேற்றும் உன் அன்புக்கே
ஈடு இணை ஏது....
என் கனவுக்கு துணையாய்
நீயே அம்மா....
என் அறிவுக்கு துனணயாய் நீயே அம்மா....
உன் அன்பு ஒன்றே நான்
வெற்றி வாகை சூடும்
தன்னம்பிக்கை........



**பாத்திமா ஸஹ்ரா**




# டிக்டொக்கும் வாலிபர்களின் கால வரையறையும்

இந்தக் காலத்தில் நவீனம் என்பது, பெரும் நாகரீகமாகவே மாறி விட்டது நாகரீகம் என்ற பெயருக்கும் இவர்கள் கொடுக்கும் ஒற்றை விளக்கம் 'Fashion' என்றும் 'Getthu' என்றும் 'Trend' என்றுமாகும்.

அதாவது, சமகாலத்தில் எவையெல்லாம் Trending ஆக உட்புகுத்தப்படுகின்றதோ, அவற்றை மேற்கொண்டால், இவர் 'Fashion Man / Genuine Man/Hero' என்றெல்லாம் புகழப்படுகின்றனர்.
உண்மை யாதெனில், இவ்வாறு சொல்வதால் அந்தப் பெயருக்குரிய மதிப்பு தான் இல்லாமல் போய் விடுகின்றது.

இங்கு விரிவாக பேசப்பட வேண்டியதொன்றை சுருக்கமாகப் பேச இருக்கிறேன். அது தான், ஒரு முக்கியமான செயலியாக செயற்படுத்தப்பட்டு கொண்டிக்கும் 'TikTok'ஐப் பற்றியே ஆகும்.

சிலர் இதனைக் கொண்டு சாகசங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கின்ற போதிலும், பலர் சாரை சாரையாக இதனுள் சென்று தன் மீது தானே மண்ணை வாரிப் போட்டுக் கொள்கின்றனர். "இவன் ஆணாக இருக்கும் பெண்" என்ற ஓர் வார்த்தை பேச்சு வழக்கில் மிகக் கேவலமாக வர்ணித்து கூறப்படுகின்றது.

ஒன்று- அவர்களிடம் ஏன்
**இப்படி ஒரு பெண்ணைப் போல் நடிக்கிறீர்கள்?** என்ற வினாவைத் தொடுத்த போது அவர்களின் பதிலானது சற்று அபூர்வமானதாகவே இருந்தது. "எனக்கு Followers ஐக் கூட்ட வேண்டும்" என்ற நோக்கத்தைத் தவிர வேறு எதுவுமில்லை என்று கூறினர். நல்லதைப் பதிவிட்டு எதிர்பார்த்தால், கொஞ்சமாவது சிந்திக்கலாம். இது மட்டும் காரணமாக இருக்காது என்றெண்ணி, விடாமல் வேறு காரணமும் இருக்கிறதா? என்று கேட்க "பெண்ணைத் தேடுவதும் ஒரு நோக்கம்" எனத் தயக்கத்துடன் பதில் பெறப்பட்டது.

ஆண்களுக்கு கூறும் விடயம் என்னவென்றால், "நாம் பெண்ணைத் தேட வேண்டிய அவசியமில்லை. அவர்கள் எம்மை தேடி வருமளவுக்கு நாம் வளர வேண்டும். "வரதட்சணை" எனும் கொடிய நோயை ஏற்காமல், அப் பெண்ணை வரவேற்க வேண்டும்.
இது எவ்வளவு புனிதமான ஒன்று!!!
இதை மனதில் எண்ணி வாழ்ந்தால், இந்த நிகழக்கூடிய செயற்பாடுகளை விட்டொழிக்க முடியுமென்று, எம் நாளை தலைமையான தலைவர்களுக்கு அறிவிக்கிறேன்.

இரண்டு- ஆண்கள் மட்டும் தானா! என்று பார்த்தால், அங்கு "இல்லை" என்ற பதிலுடன், பெண்களும் தான், முஸ்லிம் பெண்களும் கூட என்ற கசப்பான உண்மையை காதினால் கேட்க வேண்டியே உள்ளது.
இவர்களுக்கு அதிகம் சொல்லத் தேவையில்லை. சமகாலத்தில் நடக்கும் சண்டைகள் மற்றும் சச்சரவுகளுக்குக் காரணம் எதுவென்பதைப் புரிந்து உணர்வுடன் இவர்கள் செயற்பட வேண்டும்.
"உண்மையான மாற்றத்தை நோக்கிய எண்ணத்துடன், பாத்திமா நாயகியின் வரலாற்றை எடுத்து படிப்பதை கொண்டு பத்தினித்தனமடைவீர்" என்ற உண்மைத்தன்மையையும் எங்கள் அரசிகளுக்கு அறிவிக்கிறேன்.

சுருக்கமாகக் கூறினால் "இது எமக்கென்று இறைவனால் தரப்பட்ட காலம் ஆகும். இதனை நாம் முடிந்தளவு இறைவனுக்குப் பொருத்தமான முறையில் வாழ வேண்டும். அதிகமான புத்தகங்களை வாசித்து புத்துணர்ச்சி பெற வேண்டும். நல்ல நண்பர்களுடன் நட்புறவாடி, நல்லதோர் இடத்தை அடைய வேண்டும். சிரிப்புக்கும் சந்தோஷத்திற்கும் சகபாடிகளுடனும் சமத்துவத்தைக் கையாள வேண்டும்" என்று சுருங்கக்கூறி முடித்து கொள்கிறேன்.

இறை நாட்டத்துடன், அடுத்த கட்டுரையுடன் உங்களனைவரையும் சந்திக்கும் வரை நான் உங்கள் அன்பு மாணவன்,




**றஜா முஹம்மத் அப்துல் றஸாக்**
(Little Writer. Founder and Community Lecture of Pena Thulihal)

**எழுத்தால் இணைவோம்**
வட்சப் குழுமத்தின் ஆக்கம்

sky தமிழ் TV CHANNEL

# துணிந்தெழு

# கட்டுரைப் போட்டி

## போட்டிக்கான தலைப்பு

இஸ்ரேல் பலஸ்தீன பிரச்சினையும்
உலக நாடுகளின் நிலைப்பாடும்

## நியந்தனைகள்

ஆண், பெண் இருபாலாரும் பங்கேற்கலாம்.
வயதுதெல்லை கிடையாது

முடிவுத் திகதி: 15 ஜூன் 2021

தேர்ந்தெடுக்கப்படும் கட்டுரைகள் துணிந்தெழு சஞ்சிகையில் பிரசுரிக்கப்படும்

1st Place RELOAD Rs.500/= with Certificate

சிறந்த கட்டுரையாக தெரிவு செய்யப்படும் 10 போட்டியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்

கட்டுரை அனுப்ப வேண்டிய முறைகள்: 0757000791 skytamil.lk@gmail.com


GIFTit Surprise your Loved ones

Gift your loved ones living in Qatar
From Sri Lanka or Qatar on their special days

All kinds of Customized Gifts and more




Delivery available in Qatar
+974-50938728

giftit_qatar



# நெறி தவறும் இளம்தலைமுறை

நண்பகல் நடுவானில் தோன்றும் சூரிய ஒளிக்கதிர் போன்ற புதுமையான சக்தியும் புத்தொளியும் புனையப்பெற்றவர்களே புகழ்பூத்த இளம் தலைமுறையினர்.

நாளைய எதிர்காலத் தலைவர்கள் நாணயமின்றி பாதை மாறிச் செல்வதேனோ? தடைகளைத் தாண்டி நாளைய சட்டத்தை வகுக்க வேண்டியவர்கள் தறிகெட்டுத் திரிவதேனோ?

நம்முன்னோரின் பிழையான வழிகாட்டலா? நட்புக்களின் கவர்ச்சியா? பல்லூடகப் பாவனையா? பன்னாட்டுக் கலாச்சாரமா?

போதையை மீதமாய் ஏற்றி பணத்தை வீண் செலவு செய்து பாதை மாறிச் செல்கிறார்கள் நாளைய பாதைகாட்டிகள்.

ஈமானின் பாதி நாணத்தையிழந்து ஒட்டுப் போட்ட ஆடையை பேருக்கணிந்து கோழிகொத்தின கொண்டையோடு நாரித்திரிகின்றார்கள் மின்னவேண்டிய தாரகைகள்.

எங்கோ பிறந்த உறவுக்காய் விழித்து இரவுத் தூக்கத்தை செல்போனில் தொலைத்து அந்நியநொருவனுக்காய் ஏங்குதே கவலைப்பட வேண்டிய கல்புகள்.

கைக்குள்ளே உலகத்தை வைத்து கண்காணக் கூசுவதை கணக்கின்றிப் பார்த்து களிப்புறுகுதே கண்ணீர் வடிக்க வேண்டிய கண்கள்.

யாரோ அனுப்பிய செய்தியை யதார்த்தமென எண்ணி இரசித்து உரைக்குதே இறை செய்தியை உரைக்க வேண்டிய நாவுகள்.

உலகுக்கு உண்மையான வழிகாட்டிகள் உத்தம ஸஹாபாக்களா? இல்லை நட்சத்திர நடிகைகளா? இந்தியாவைக் கைப்பற்றிய இளம்வீரர் முஹம்மத் பின் காஸிம் எங்கே? பலஸ்தீனை மீட்டெடுத்த ஸலாஹுத்தீன் ஐயூபி எங்கே? ஸ்பெய்ன் வெற்றிக்கு அடித்தளமிட்ட தாரிக் பின் ஸியாத் எங்கே?

சத்தியம் செய்யுங்கள் இனி அசத்திய வழியில் பயணிக்கமாட்டோமென்று சத்தியத்தூதர் வழி நின்று சரித்திரம் படைக்க முயல்வோம்.

**Faslul Farisa Asadh**
Second Year - SEUSL
Godapitiya - Akuressa.



# நிலவு தொடும் பயணத்தின் சாரல்கள்

எண்ணங்கள் எங்கே சென்றாலும் - நினைவுகள்
வேறு இடம் நின்றாலும் நெஞ்சின்
நினைவலைகளில் எல்லாம் நிறைந்து நிற்கின்றது
கடந்து வந்த பயணத்தின் சுவடுகள்.....

தவிர்க்க முடியாத சில தருணங்கள் - கடந்து தான்
ஆக வேண்டும் என்கிற நாட்கள்
இவற்றையெல்லாம் தாங்கும் தாண்டும்
வேலைகளில் மனதின் கற்பனைகளுக்கெல்லாம்
நிஜமான ஓர் உருவம் தோன்றி- அந்நாட்களை
அழகாக்கிய சந்தர்ப்பங்கள் ஏராளம்

ஆயிரம் கோடி கனவுகள்- பல ஆயிரம்
எதிர்பார்ப்புக்கள், எண்ணங்கள்
இவற்றிற்கெல்லாம் நடுவே சில கோட்பாடுகளும்
விதிமுறைகளும் பல எழுதப்படாத சட்டங்களும் -
பயணப்பட வேண்டிய பாதையின் தடைக்கற்களாய்
-சில வேலைகளில் அவை தேவை - சில
வேலைகளில் அவை முட்டுக்கட்டை

விருப்பத்திற்கும் தேவைக்கும் இடையே இருக்கும்
திரையிற்குத் தெரியும் பல பொறுமையின்
உச்சமும், பெறுமதியும்
சில சமயங்களில் தன்னிலைக் கைதியாய் பல
சமயங்களில் சூழ்நிலைக் கைதியாய் "வாழ்க்கை
ஒன்றும் ஒத்திகை அல்லவே" எனும் வாழ்வின்
யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு வாழப்பழகிய
நாட்கள் அவை

நிலவை அழகாக்கத் தானே வானம் இருளைப்
பூசிக்கொண்டது என்பதை உணர்ந்த பொழுதுதான்
வாழ்வில் ஏற்பட்ட சில இருள்களையும் இலகுவாய்
கடக்க முடிந்தது - இதயம் கூட இடைவெளி
விட்டுத்தான் துடிக்கிறது என்பதை உணர்ந்த
பொழுதுதான் விழுந்த சில இடைவெளிகளையும்
தாண்டி முன்னேற முடிந்தது

இந்தப் பயணத்தில் மறக்க முடியாத நிமிடங்கள்
பல- நினைவுகளுக்குத் தானே மறதி என்பது
மாறாக உணர்வுகளுக்கு அல்லவே...!

நாளை ஏதோ ஓர் இடத்தில் சந்தர்ப்பத்தில்
நிமிடத்தில்- இன்றைய வினாக்கள் தேடல்கள்
பயணங்களுக்கெல்லாம் பதில் கிடைக்கும்- அவை
புனிதம் பொக்கிஷம்.....

**ஜாஸிரா ஜுனைடீன்**
**மதவாச்சி.**




எழுத்தால் இணைவோம்
வட்சப் குழுமத்தின் ஆக்கம்



# பெற்றோர்களும் சமகாலப் பிரச்சினைகளும்

## சமகால நிகழ்வுகள் யாவரும் அறிந்தவையே.

கொரோனாவால் கொடூரமாக உயிர்கள் காவுகொள்ளப் படுகின்றமை வெளிப்படையாக மறுக்கமுடியாத உண்மை. இருப்பினும் நாட்டின் வருங்காலத் தலைமுறை தலைகுனியும் நிலைக்குப்போய்விடுமோ என்பது மறைமுகமான பீதி.

ஆம் இன்றைய இளம் சமுதாயம் முகம் கொடுக்கும் விபரீதமான நிலை மிகவும் கவலைக்கிடமாகவுள்ளது. உடல், உள, சமூக ரீதியாக இன்றைய இளசுகள் பாதிப்பை எதிர்நோக்கி வருகின்றன.

பாதிப்பு எனும் பொழுது, நம் கண் முன் நிதர்சனம் ஆவது குழந்தையும் தொலைத்தொடர்பு சாதனங்களுமே. உண்மை தான். பாடசாலை, பின்நேர வகுப்பு, மாலை நேர சமவயதுக்குழுவினரோடான விளையாட்டு என குதூகளமாய் நாட்களை நகர்த்திய பிள்ளைகள் வீட்டுக்குள் முடக்கப்பட்டு விட்டார்கள்... பொழுதுகள் கழிவதில் சிரமத்தை எதிர்னோக்கும் வேளைகளில் தன் மனவெழுச்சிளை வெளிப்படுத்தும் விதமானது பெற்றோருக்கும் மற்றோரக்கும் தொல்லையாகும் தருனங்களில் அவர்கள் தொலைக்காட்சிக்கும் தொலைபேசிக்கும் அடிமைப்படுத்தப்படுகிறார்கள்.

இதனால் கண்சார் பிரச்சினைகளுக்கு வெகுசீக்கிரம் ஆளாவது மற்றுமன்றி. பல்வேருவிதமான உடலியல் கோளாறுகளுக்கும் ஆளாவார்கள். உளவியல் ரீதியாக நோக்குவோமேயாயின், வீட்டுக்குள் குழந்தைகள் இருந்தும் பெற்றோருக்கும் குழந்தைகளுக்கும் இடையிலான ஆளிடைத் தொடர்பு குறைவடையும். மேலும் கையடக்கத்தொலைபேசியோடு சிறுவர்களும் பெரியவர்களும் தனிமைப்படுதலின் விபரீதம் மிகவும் பாரதூரமானது. பிள்ளைகளின் வரம்பு மீறல் செயற்பாட்டிற்கும் முழுமுதல் காரணமே தொலைத்தொடர்புசாதனங்கள் தான் என்றால் அதை மறுக்க முடியாது.

மேலும், உளப் பீதி, தாழ்வுமனப்பாங்கு, அடம்பிடிக்கும் குணம் போன்றவற்றுக்கும் பிள்ளைகள் ஆளாவார்கள். சமூகரீதியாக நோக்குவோமேயாயின், சம

## நிலவின் கீறல்

வட்சப் குழுமத்தின் ஆக்கம்

வயதுக்குழுவினரோடான ஆளிடைத்தொடர்பு இல்லாம் போகும் இத்தகைய நிலைமையானது ஒரு பிள்ளையை போட்டியிட்டு முன் வரும் தன்மையை இழக்கச் செய்வதோடு திறமைகளைவெளிக்கொண்டுவரும் தன்மையையும் இழக்கச் செய்கின்றது. இத்தகைய நிலைப்பாடுகள் வெகுவாக நீடிக்குமேயானால் பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்படுவதனூடாக ஆரோக்கியமற்ற ஓர் சமுதாயம் உருவாக நேரிடும்.

எனவே பெற்றோர்கள் உசாராக இருந்தால் மாத்திரமே நம் சந்ததியினரின் எதிர்காலத்தை வளப்படுத்த முடியும்.

தொலைதொடர்புசாதனங்களை தொலைதூரம் நகர்த்திவிட்டு காலங்களை கவர்ச்சிகரமாகமாற்றி தகுந்த சூழலை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். பெற்றோர்தான் பிள்ளைகளின் முதல் ஆசிரியர் என்பதை மறந்துவிடக்கூடாது. கல்வி நடவடிக்கைகளில் தன்னால் முடிந்த அளவிற்கு ஒத்துழைக்க வேண்டும். காலத்தின் கோலத்தால் பிள்ளைகள் பீதி அடைதல் நியாயம்தான் இருப்பினும் அவர்களுக்கு தைரியமூட்டப்படவேண்டியது பெற்றோர்களின் பொறுப்பு வீண் வேடிக்கை வீணானபொழுது போக்குகளிலிருந்து தவிர்ந்து மார்க்க விடயங்களில் ஈடுபாட்டோடு இருப்பதனூடாக தம் பிள்ளைகளையும் அழகாக வழி நடத்திக்கொள்ளலாம்.

**வெலிப்பன்னை ரம்ளா**



# நம்பிக்கையுடன் இவள்..!

காலத்தை நினைக்கிறேன்
நிம்மதியை யாசிக்கிறேன்....
நேரத்தை நேசிக்கிறேன்...
நெடுநேரம் தூங்குகிறேன்
உண்மை தூக்கம் ஏதுமில்லை...
தயவு செய்து - என்னை தொந்தரவு செய்யாதீர்கள்...

உணர்வுகளின் மனுக்கள்
சொட்டுச் சொட்டாய் - என்னுயிரை சிதைக்கிறது...
நினைவுகளின் மீட்டல்கள்
கழுத்தை நெருக்குகிறது...
அவைகளை கவிகளால் கொட்டித் தீர்க்கிறேன்...
என் வரிகள் எனக்கே ஆறுதல் என்று...

சில நினைவுகள்
காற்றைப் போல் வருகின்றன,
பூகம்பமாய் மாறுகின்றன...
மழலை போல் சிரிக்கின்றேன்...
முகத்தை புதைந்து அழுகின்றேன்...
ஒன்றும் புரியாமல் தடு(டம்)மாறுகிறேன்...

போர்க்களமும் இல்லை...
பகைவர்களும் இல்லை...
ஆனால், - என்னை மட்டும்
துப்பாக்கிகள் சுடுகிறது...
கூர் கொண்ட வாளால் கூர் கூராக
தாக்கப்படுகின்றேன்...

பட்டாம் பூச்சிகள் வாழ்ந்த
என்னிதயமும் - இன்று ஏனோ...
விட்டில் பூச்சிகளுக்கு இடம் கொடுத்து விட்டது...

மனதிற்குள்,
வேதனைகள் பல்லாயிரம்...
தொல்லைகள் தொள்ளாயிரம்....
சோதனைகள் எக்கச்சக்கமாய்...
காயங்கள் கணக்கிலில்லை...
இருந்தும்,
யாகம் செய்கிறேன்...
இ(எ)துவும் ஒரு நாள் கடந்து போகும் என்ற ஒற்றை
நம்பிக்கையில்...

நம்பிக்கையுடன் இவள்...

இளம் தாரகை
**ஷஹ்னா ஸப்வான்**
தர்ஹா நகர்



# பெண்

பெண் பலவீனமானவள் இல்லை, பலமானவள் அதனால் தான் நீயும் நானும் இன்று உலகில்......

தாயவள் எம்மை பிரசவிக்கும் போது உணர்ந்த வலியை எம்மால் கனவினில் கூட தாங்கிட முடியாது தோழா, 20 எலும்புகள் ஒரே நேரத்தில் உடைந்து ஏற்படும் வலிக்கு சமனான வலியை அவள் எமக்காக பொறுத்திருக்கிறாள்.
( ஒரு மனிதன் 45 டெல் யூனிட் அளவிற்குத்தான் வலி பொறுக்க முடியும், ஆனால் பிரசவத்தின் போது 57 டெல் யூனிட் அளவிற்கு வலியை நம் தாய் நமக்காக பொறுத்துக் கொள்கிறாள். இது 20 எலும்புகள் ஒரே நேரத்தில் உடைந்து ஏற்படும் வலிக்கு சமம்....)

ஒரு பெண் மாதமொருமுறை உடலளவில் மட்டுமல்ல, உடலளவில் அவளுக்கு ஏற்படக்கூடிய வேதனையை உள்ளத்தளவிலும் அனுபவிக்கிறாள். சாதாரண தலை வலியோடு எம்மால் ஒரு நிமிடம் கூட இருந்திட முடியாது. ஆனால், ஒரு பெண் மாதமொரு முறை 3 தொடக்கம் 7 நாட்கள் வரை தசைப் பிடிப்பு, மார்பக வலி, மார்பக வீக்கம், தலை வலி, தோள்மூட்டு வலி, மனச் சோர்வு, எரிச்சல் போன்றவற்றை அனுபவிக்கிறாள். ஒவ்வொரு மாதமும் தோழா.....

பெண்ணாய்ப் பிறந்த யாவருமே என்றோ ஒரு நாள் தாயாகத் தான் போகிறார்கள். அவள் உன்னில் வயதில் குறைந்தவளாக இருந்தாலென்ன, வயதில் கூடியவளாக இருந்தாலென்ன, கருப்பாய் இருந்தாலென்ன, வெள்ளையாய் இருந்தாலென்ன, பெண் பெண் தான் தோழா....

ஓரிரு விடயங்களில் அவள் எம்மை விட பலவீனமானவளாக இருக்கலாம், ஆனால், எல்லா விடயங்களிலும் ஒரு பெண்ணுக்கு பலமாய் இருப்பதே ஆண்மைக்கு அழகு, அதுவே ஆண்மையும் கூட.....

எம்மைப் பெற்றவளும், எம்மோடு பிறந்தவளும் மட்டுமல்ல பெண், யார் பெற்றாலும் பெண் என்றால் அவள் பெண் தான்.

எம் தாய்க்கும், எம் சகோதரிகளுக்கும் இருக்கும் அதே உணர்வு தானே அவர்களுக்கும் இருக்கும்.

பெண்ணின் உணர்வுகளை எம்மால் உணரத் தான் முடியாது, புரிந்து கொள்ளவாவது முயன்றிடு தோழா.....

தாய் என்ற அந்த உயர்ந்த அந்தஸ்து பெண்களுக்கு மட்டுமே உரித்தானது தோழா...

தாயின் பாதத்திற்கடியில் உன் சுவனத்தை தேடிக் கொள் என்று அன்பு நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்களே....

இந்த வார்த்தையின் மகிமையை அளவிட்டிட முடியாது தோழா....



பெண் மதிக்கப்பட வேண்டியவள், பெண் போற்றப்பட வேண்டியவள், பெண் பாதுகாக்கப்பட வேண்டியவள்.....

பெண் பொக்கிஷம்

**முஸ்னி முர்ஷித்**
எஹலியகொட



# அறுவடைக்கு

## நானெங்கே கதிரறுப்பேன்..?

சினமுற்ற சூரியன் கருவுற்று
செம்பாலை யொன்றைப் பிரசவிக்க
அக்னித் தென்றல் வீசுதடி
ஏர்பிடித்து நானெங்கே நிலமுழுவேன்...?

சூட்டிலே வயல்மேனி வெடித்து
வியர்வைக் குருதி கசிய
நிலமடியில் துமிகூட இல்லையடி
சேனைக்கு நானெங்கே நீர்பாய்ச்சுவேன்...?

விதைநெல் முளை முடங்கி
விதைக்குள்ளே மலடியாக
வேறெவளோ உண்டானால்
அறுவடைக்கு நானெங்கே கதிரறுப்பேன்...?

அனலெல்லாம் சுகத் தென்றலாய்
ஆறுதலுக்கு அள்ளிவீசி நகர
ஒரு மரநிழலும் இல்லையடி
உடல் போர்த்தி நானெங்கே ஓய்வெடுப்பேன்...?

ரீங்கார இசையருவி பாடியதில்
மீனினங்கள் துள்ளிக்குதித்து ஓடி
இற்றைக்கு வெகுநாளானதடி
தாகத்திற்கு நானெங்கே நா நனைப்பேன்...?

உழவன் உழுவதெல்லாம்
ஒருபிடி வயிற்றுக்குத்தானடி
நிலத்தாயே நீயோ விளையாமல் போனால்
இனியெங்கே நானிரை எடுப்பேன்...?

கண்குளிர கருமுகிழ் வானை
காலசகாயன் சுழன்றினி
காண்பிக்க மாட்டானடி
கையெடுத்து கும்பிட நானெங்கே கல்லெடுப்பேன்...?

இந்நிலையோ நீடித்தால் இறைவா
இவன் விதியை நீயோ தண்டித்தால்
இக்கணமே மாண்டுபோவேன்
பிறகெங்கே நானுயிர் வாழ்வேன்...?



**அலியார் முஹம்மட் அஹ்ஸன்**
(ஓடைக்கவிஞன்)
காங்கேயனோடை,



# பெண் எனும் பொன்

அவனி அவா விளக்கி
அவதூறுகள் பல கேட்டு
அல்லல்கள் சில ஏற்ற
அவதாரம் நீ பெண்ணே!

அகம் வருத்தி
ஆற்றாமை கடந்து
ஆரோக்கியம் இழந்து
ஆவேசமின்றி சேய்க்குயிர்க்கொடுக்கும்
ஆற்றல் நீயே!....

இறையருள் ஏற்று
இறைவன் சொல் கேட்டு
இரணியம் அணிந்த
இலக்குமி நீயே!

உயிர்க் கொடுத்து
உயில் வரை
உதிரம் சிந்தி
உபகாரஞ்செய்யும்
உத்தண்டம் நீயே!

கோபத்தில்
முறைப்பவள்!

மோகத்தில்
சிரிப்பவள்!

பாசத்தில்
அணைப்பவள்!

அனைத்தும் நீ பெண்ணே!

**சிங்கப்பெண் நான்:**
**நஹ்லா பாரிக்**
**நாம்புளுவ பஸ்யால**

**நிலவின் கீறல்**
வட்சப் குழுமத்தின் ஆக்கம்

# தொலைத்த நாட்கள்

நெடுந்தூரப் பயணம் அதில் நான் திரும்பிப் பார்க்கையில் மீண்டும் கிடைத்திராத சில நீங்காத நினைவுகளில் நான் நிலைகுலைந்தேன்.

குழந்தையாய் தாய் அவள் அன்போடு அரவணைக்க மடியினில் மழலை கொஞ்சிய மணித்துளிகளுடன் என் நலன் காணவரும் எம்மவர்களில் அரவணைப்பும் அன்பான முத்த மழையாய்.

**மீண்டும் வராதா அந்த நாட்கள்.**

சிறு பிள்ளை என பலர் அழைத்திடவே வேகமாய் ஓடியது சில காலம்.

நினைப்பவைகளை கூட பலவந்தமாய் பெற்றதும் அடம்பிடித்த அழியாத நினைவலைகள் என்னுள்.

வண்ணம் வண்ணமாய் ஆடைகளும் அனைவரது அன்புடனும் நடமாடிய நினைவுகள்.

**மீண்டும் வராதா அந்த நாட்கள்.**

காலங்கள் உருண்டோட கட்டிளமை என்றெரு காலம் இதில் கல்லும் கரையும் என்பார்கள்.

எதிர்பால் கவர்ச்சி என் எதிர் முனையில்.

நண்பர்கள் வட்டமும், பாடசாலை நினைவுகளும் நினைத்ததை துணிவுடன் அரங்கேற்றிய வலிமையும் இவை வாழ்வின் பொற்க்காலம்.

**மீண்டும் வராதா அந்த நாட்கள்.**

காலங்கள் சில கடக்கவே இளமை என்னுள் ஊஞ்சல் ஆடியது. மன்மதனாய் சில காலம் கன்னியர் மனங்களில் உலா வந்த பொளுதுகள்.

**மீண்டும் வராதா அந்த நாட்கள்.**

வாழ்நாள் வளம் பெறவென பெற்றவர் கை திறக்கவே இன்னோரவள் கரம்பிடித்து மண மேடையில் விழாக் காண பலரது அகம் புறம் ஆனந்த தாண்டவம்.

வாழ்கைப் பயணம் சற்று புரண்டது தன் உயிர் தன் நலம் காத்த நான். தாரத்தோடும் அவள் விருப்பு வெறுப்பில் பங்காழியானேன்.

**மீண்டும் வராதா அந்த நாட்கள்.**

ஈர் உயிர் ஓர் உயிராய் இணைந்திடவே அவர் தந்தை நாமம் சூட்டினாள்.

என் வாரிசுக்காய் சில காலம் காலங்கள் கடக்கவே வந்தேறியது வயோதிபம்.

மீண்டும் வராதா அந்த நாட்கள்.

அழியாத நினைவுகளுடன் என்றும் நான்.



**தென்கிழக்கு வாசல் மருதூர்.**
**ஜவ்சன் அஹமட்**

# இன்றே எழுந்திடு மனிதா !

இலட்சியம் நோக்கி
செல்லும் உலகம்
கச்சிதமாய் முன்னேர
நீ மட்டும் ஏனோ இன்னும்
உறங்குகிறாய் மனிதா!

உன்னிடம் ஏதும்
இல்லை என
என்னுகிறாயா
மனிதா
அவ்வாறில்லை
உன்னுடன் சேர்ந்து
உறங்கும் உந்தன்
அறிவுக்கதவை
திற நீ - அதற்குள்
திறமைகள் எனும்
பல பாதைகள்
பல திசைகளில்
படர்ந்திருப்பதை
பார்ப்பாய் மனிதா!

உன்னிடம் உள்ள
திறமைகள் எல்லாம்
வெறும் வெற்றிடங்கள்
என என்னிடாதே
உலகின் வெற்றிடங்களை
நிரப்ப உன் திறமைகளே
வேண்டும்மங்கே!

சிறு ஆல் விதையை
விதைத்துத் பார்
மண்மீதே - அது
விருட்சகமாய்
உருவெடுக்கும்
விண் கீழே
உன் திறமையின்
ஒரு துளி சிந்திவிடு
இப்பூமியிலே - அது
பெரும் புரட்சியை
தோற்றுவிக்கும்
இப்பாரினிலே!

உலகில் உதித்த
உன் வாழ்வு
ஓர் போர்க்களம்
அதில் நீ ஒரு
போர்வீரன்
போர்களத்தில் போராடி
ஜெய்ப்பதே - உன்
உயர்ந்த உன்னதமான
குறிக்கோள்
அதில் நீ ஜெய்க்க
உன் அறிவுக்குக் கேடயம்
ஏந்தி - உன் திறமை
வாள் கொண்டு போராட
வேண்டும்!

இன்றே இப்போதே
விழித்திடு மனிதா
உறங்கும் உன் திறமையை
தட்டி எழுப்பிக்கொண்டு
உன் போர்க்களத்தில்
உன் வெற்றிக்கொடியை
தேடி பெற்றிட இன்றே
எழுந்திடு மனிதா!

**அகீலா ஜவுபர்**
**புத்தளம் ஏத்தாளை .**

நிலவின் கீறல்
வட்சப் குழுமத்தின் ஆக்கம்



# ஏழையவள் நினைவுகள்

ஓலைக் குடிசையில் ஓரமெல்லாம் ஒழுக்கெடுக்க
நடுங்கியபடியே. பச்சை மிளகாயும், பழைய சோறும்
பத்திரப் படுத்திய நினைவுகளில் ஒன்று.

கைகளே பந்தூரிகை.
கால்களே நடைவண்டி.
காகிதங்கள் இல்லாமலேயே நட்புக்கள் .
கடைத்தெருவையே எட்டாத ஆசைகள்.

தீபாவளிக்கு வாங்கிய ஆடையை தினந்தோரும்
பத்திரப்படுத்துவதுண்டு.. பக்கத்து வீட்டு திருமணங்களை
அரங்கேற்றம் செய்ய வேண்டுமே?

படுக்கை விரிப்பில் இருந்த ஆயிரம் ஓட்டையும்,
வருடங்கள் பல தாண்டியும் மறைவதாய் இல்லை.
கணிதப் பிழையோ?? மீண்டும் எண்ணலாம் "ஆயிரத்து
இருபது"

சந்தனமும் குங்குமமும் குழைத்துப் பூசி பௌர்ணமி
நிலவாய் பிரகாசிக்கும் - என் முகத்தை தடவியபடியே!!
பெற்றவளின் செப்பனிட்ட வார்த்தை "நாளையாவது
உனக்காக விடியும்""

வார்த்தை வெறும் கனவாகிப் போனது.கனவோ
கலைந்தே போனது.வாழ்க்கை சிறையிலிருந்து
மீட்டெடுக்க மணவாளன் வருவான் (வருகிறான்)
என்றார்கள்.

விதியின் இரண்டாம் பாகம் போல? வந்த து மணமகன்
அல்ல "வனமகன்"

அப்போதெல்லாம் கண்ணைச் சுற்றி கருவலையங்கள்...
இப்போதெல்லாம் கன்னத்தைச் சுற்றி காயங்கள்..

கடைசியாய் இறைவனுக்கோர் மடல் இன்னுமொரு
ஜென்ம ம் இருந்தால் - என்னை கற்களாய் படைத்துவிடு
கடைசிவரை கண்ணீர் வர வாய்ப்பில்லையே!!!!!!!

**சனூசியா**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**



# தனித்துவம்

மனிதன் தனிமை படுத்தப்படும் காலம்
தனித்துவம் தானாக வெளிப்படும் வாழ்வில்..

தனித்து இருக்கும் சூரியன் பகலிலும்
விழித்து இருக்கும் சந்திரன் இரவிலும்
தனிமையே என்று உணர்ந்தால் -இங்கு
ஒழுங்காய் உலகம் இயங்குவது எப்படி ?

மண்ணில் வாழ்க்கையை வென்று வந்தவர்கள்
ஒரு நாள் வாழ்வில் யாராலோ எங்கோ
தனிமைப் படுத்தப் பட்டவர்களாகத் தான்
நிச்சயம் இங்கு இருக்க முடியும்.....

பிறந்த வீட்டில் இருந்து மணப்பெண்ணாக
புகுந்த வீட்டில் தனித்துவத்தைக் கொண்டு
மகத்துவத்தை வெளிப்படுத்துகின்றாள்
தானாக...

தனிமையை பாரம் என்று சொல்லுபவர்கள்
திறமையைத் தேடி வளர்த்துக்கொண்டால்
தனித்துவம் தானாக வெளிப்படும் அழகாக...

தேவைகள் சிறக்க தரம் பார்க்கின்றோமே,
வாழ்க்கை தரமாக இருக்கின்றதா
பார்க்கின்றோமா?

தரமான மனிதனாக மாற்றுவதற்கே காலம்
தனிமை படுத்துகின்றது தனித்துவத்திற்காக ...

பாடசாலையை அழகாக்கும் ஆசானின்
தனித்துவமே
ஆயிரம் தலைவர்களை உருவாக்கும்
மகத்துவமாக. .

சிந்தனையின் பிறப்பிடம் தனிமை என்றால்
தனித்துவத்தின் மகத்துவம் இனிமை தானே....



**சா.நாகூர் பிச்சை**
**திண்டுக்கல்**

# “சமூக மாற்றத்தில் பெண் ஒரு பங்காளியாக மாற வேண்டும். முதலில் மூடுண்ட போக்கிலிருந்து நாம் விடுபட வேண்டும்”

## -Inner Wings கவிதைப் புத்தகத்தின் ஆசிரியை

## நுஹா நிலான்



சஞ்சிகை நேர்காணல்
சஞ்சிகை பிரதம ஆசிரியர்
**ஜே.எம். பாஸித்**

காணொளி நேர்காணல்
**நுஸைலா பதுர்தீன்**

**கேள்வி - 1**

### உங்களது பூர்வீகம் குறித்தும் கல்லூரி வாழ்க்கை பற்றியும் கூறுங்கள்.

நான் ஊவா மாகாணத்தின் பதுளை நகரத்தில் பிறந்தேன். தற்போது எனக்கு இருபது வயதாகிறது. எனது ஊர் ஓர் அழகான இயற்கை வளம் கொண்ட பிரதேசமாகும். நான் ஆரம்பக் கல்வி முதல் படித்தது பதுளை ஒக்ஸ்பெர்ட் சர்வதேசப் பாடசாலையில். அது எனது பெற்றோரால் நடாத்தப்படும் ஒரு பாடசாலையாகும்.

நான் பிறந்தது முதலே அந்தப் பாடசாலைச் சூழலில் வளர்ந்ததால் எனக்கு பாடசாலை என்பது இன்னொரு வீடாகவே அமைந்திருந்தது.

சில காலம் கொழும்பில் lead the way girls' Intetnational இலும் கல்வி கற்றேன். தற்போது NIBM (Coventry UK) நிறுவனதில் உளவியல் மற்றும் உளவளத்துணைத் துறையில் என் இளமாணிக் (Bsc-Hons) கற்கையின் இறுதி வருடத்தில் கற்றுக் கொண்டிருக்கிறேன்.

**கேள்வி - 2**

### உங்கள் குடும்பப் பின்னணி பற்றிக் குறிப்பிடுங்கள்.

எனது தாய் மற்றும் தந்தை இருவரும் பதுளை ஒக்ஸ்பெர்ட் சர்வதேசப் பாடசாலையின் பணிப்பாளர்கள். எனது பெற்றோர் தான் எனது முதல் ஆசிரியர்கள். எனது பாடசாலை எனது இன்னொரு வீடு என்று கூறினேன். அது போல் எனது வீடு தான் எனது முதல் பாடசாலை.

எனது குடும்பத்தில் நான் மூத்த பிள்ளை. எனக்குக் கீழ் நான்கு தங்கைகளும் ஒரு குட்டித் தம்பியும் இருக்கிறார்கள். எனது வாழ்வின் எனக்கு கிடைத்த முதல் முக்கியமான வரமாக, அருளாக எனது குடும்பம் உள்ளது. எனது தாய் மிகவும் திறமையானவர் அத்தோடு உறுதியானவர்


## கேள்வி - 3

## உங்களது தொழில் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடியுமா?

நான் தொழில் செய்வதில்லை. இன்னும் நான் படித்துக் கொண்டிருக்கிறேன். நான் படிக்கும் போது இப்போது படிப்போம் பின் வேலை செய்வோம் என்று இருக்கும் ஆள் இல்லை. நான் படிப்போடு மட்டும் இருக்காமல் என் துறைசார்ந்த அறிவையும் அனுபவத்தையும் வளர்ப்பதற்காகப் பல சந்தர்ப்பங்களைத் தேடினேன். துறைசார்ந்த மேம்பாட்டிற்காக வாய்ப்புகளைத் தேடிப் பல நேர்முகப் பரீட்சைகளுக்கும் சென்றேன். அதன் மூலம் இரண்டு பொறுமதியான வாய்ப்புகள் எனக்கு கிடைத்தன.



ஊதியம் எதுவும் கிடைக்காவிட்டாலும் அவற்றின் மூலம் பெறும் அனுபவம் அளப்பறியது.
Lady Ridgeway Hospital இல் psychology & counselling internship ஐ நிறைவு செய்தேன். அதனைத் தொடர்ந்து அங்கு மேலதிகமாக அனுபவங்களைத் தொடரவும் கொழும்பிலுள்ள பல வைத்தியசாலைகளில் Research Data Analyst ஆகப் பணியாற்றவும் வாய்ப்புகள் எனக்கு கிடைத்தன. தொழில்வாண்மையான, கள ரீதியான அனுபவங்களைப் பெற இவற்றை நல்ல சந்தர்ப்பமாகக் கருதி செயற்படுகின்றேன்.



## கேள்வி - 4

## எழுத்துத் துறைக்கு உங்களை வரத் தூண்டிய விஷேடக் காரணிகள் ஏதும் உள்ளனவா?

நான் சிறுவயது முதல் வளர்ந்த பாடசாலைச் சூழலும் ஒரு காரணம். அக்காலத்தில் நான் தாயுடன் பாடசாலையில் இருக்க நேர்ந்தது. கல்வி , வாசிப்புச் சூழல் என் வளர்ச்சியில் அதிகம் தாக்கம் செலுத்தின. என் வீட்டில் நூலகம் ஒன்றுள்ளது. அதில் எனது தந்தை வாங்கிச் சேர்த்த பல்துறைசார்ந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் உள்ளன. எங்களது விருப்பங்களுக்கும் தேர்வுகளுக்கு அமையவும் பல நூல்களை தந்தை வாங்கித் தருவார். அவற்றில் எனக்கு மிகவும் பிடித்த சுய முன்னேற்ற நூல்கள் ( self help ) ஏராளம் உள்ளன.

சிறு வயது முதல் என்னிடம் இருந்த வாசிப்புப் பழக்கமே என்னை எழுதத் தூண்டியது எனலாம். அத்துடன் எனது தந்தை எங்களை நேசிப்பது போல் புத்தகங்களையும் நேசிக்கக் கூடியவர். அவர் ஒரு சிறந்த எழுத்தாளர். அவரின் எழுத்துக்களால் கவரப்பட்ட பலர் கூறுகின்ற பின்னூட்டங்களும் என்னை அதிகம் உற்சாகப்படுத்தின.



## கேள்வி - 5

### எப்போது, எந்த வயதிலிருந்து எழுத்துத் துறையில் ஈடுபட ஆரம்பித்தீர்கள்?

எனது முதல் கவிதை 'Life' எனும் தலைப்பில் 2010 ஆம் ஆண்டில் (எனது 10 ஆவது வயதில்) 'funday times' பத்திரிகையில் வெளியானது. அதை எனது பாட்டி ( உம்மம்மா) பத்திரமாக எடுத்து வைத்து, சமீபத்தில் என்னிடம் காட்டினார். அதைப் பார்க்கும் போது எத்தனை கவிதைகள் அதன்பின் என்னால் எழுப்பட்டாலும் நான் பாராட்டப்பட்டாலும் அந்த மகிழ்ச்சி வித்தியாசமாகவே உள்ளது.

2010 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக எழுத ஆரம்பித்தேன். பல கவிதைகள் முகநூலிலும் வேறு ஊடகங்களிலும் எழுதினேன். முகநூல் எனது எழுத்துத் துறைக்கு சிறந்த களத்தை, தளத்தை ஏற்படுத்தித் தந்தது. சுய முன்னேற்றம் சார் நூல்களை அதிகம் வாசிக்கப் பழக்கப்பட்டதால் என்னவோ எனது கவிதைகளின் மையக் கருத்துக்களும் அது சார்பாகவே அநேகமாக இருக்கின்றன.

## கேள்வி - 6

### நீங்கள் வெளியிட்ட புத்தகம் பற்றிச் சொல்லுங்கள்?

எனது 18 ஆவது வயதிற்குள் ஒரு புத்தகம் வெளியிட வேண்டும் என்ற வேட்கை என்னில் துளிர் விட்டிருந்தது. ஆனால் அதற்கு எடுத்த முயற்சி போதாமல் இருந்தது. நான் சமூக வலைத்தளங்களுக்கு எழுதிய கவிதைகளையும் ஆக்கங்களையும் பார்த்த பலர், காத்திரமான பின்னூட்டங்களை வழங்கி, என்னை உற்சாகப்படுத்தினார்கள். எல்லாவற்றிக்கும் மேலாக என் திறமைகளைக் கண்டு, புத்தகம் வெளியிடும் என் கனவை நிஜப்படுத்த எனது அருமைத் தந்தை என்னை ஊக்கபடுத்தினார். எனது தந்தையின் வழிகாட்டலும் ஊக்குவிப்பும் தான் எனது ஒவ்வொரு வெற்றிக்கும் முக்கிய காரணங்கள். அத்தோடு தாயின் பங்களிப்பும் என்னை மேலும் பலப்படுத்தியது.

'Inner wings' எனும் ஆங்கில மொழி மூலமான எனது முதல் புத்தகக் கவிதைகளை எழுத எனக்கு கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் சென்றன. இதில் அனைத்தும் ஊக்குவிப்பு கவிதைகளாகவே உள்ளன. ஒரு மனிதன் வாழ்வில் விழும் போது எழுந்து நிற்க மட்டுமன்றி உயரப் பறக்க அவனுக்குள்ளே உள்ள சிறகுகளை விரிக்கச் செய்ய உந்துதல் வழங்கும் முகமாகவே இக் கவிதைகளை நான் எழுதினேன். நான் வாழ்வில் கண்ட அனுபவங்கள், உணர்ந்த விடயங்கள் மற்றும் சவால்களை இதற்கு கருவாக எடுத்துக் கொண்டேன். கவிதை எனும் போதே அதன் மொழி நடை நிறையப் பேருக்கு புரியாது. எளிய நடையில் எல்லோரும் விளங்கிக் கொள்ளும் வண்ணம் ஒரு கவிதைத் தொகுதி எழுதுவது எனது முதல் நோக்கமாக இருந்தது.

புத்தகத்திற்கான பல கவிதைகளை எழுதியிருந்தாலும் அவற்றை மீண்டும் மீண்டும் பதப்படுத்தி, மெருகூற்றினேன். எனக்கு பல்வேறு வகையிலும் எனது ஆசிரியை திருமதி கலா அவர்களும் மலேசியாவில் வசிக்கும் எமது மாமி (தந்தையின் சகோதரி) திருமதி ரவ்ஷான் ஸெய்ன் அவர்களும் பெரிதும் உதவினார்கள். தட்டச்சு வேலைகளில் திருமதி முனவ்வரா அவர்கள் கைகொடுத்தார்கள். அத்தோடு கவிதைகளுக்கான பொருத்தமான ஓவியத்தையும் அட்டைப்படத்தையும் சிறப்பாக வடிவமைத்து தந்த ஆசிரியை ஷிபா பர்வீன் அவர்களது ஒத்துழைப்பு நன்றிக்குரியது.




கேள்வி - 7

## புத்தக வெளியீட்டு விழா பற்றிய ஞாபகங்களை பகிர்ந்து கொள்ள முடியுமா..?

18 ஆவது வயது முடிவடையவிருந்த குறுகிய காலத்திற்குள்ளேயே அனைத்தையும் நாம் செய்தோம். விழா ஏற்பாடுகள் கூட ஒரு கிழமைக்குள் செய்யப்பட்டன. இருப்பினும் ஏற்பாடுகள் சிறப்பாகவும் ஒழுங்காகவும் அமைந்தன. கொழும்பு சபாயா ஹோட்டலில் 16.07.2019 இல் வெளியீட்டு விழா நடந்தது. புத்தக வெளியீடுகளுக்கு மிகவும் குறைவாகவே மக்கள் வருகின்ற சூழ்நிலை இருந்த போதிலும் கூட 200 க்கும் மேற்பட்டவர்கள் அதில் கலந்து சிறப்பித்தார்கள். இதனை கௌரவமாக நினைக்கின்றேன். புத்தக வெளியீடு நடந்த ஒழுங்கை பலரும் பாராட்டிப் பேசினார்கள். பதுளையிலிருந்து வந்து தலைநகரத்தில் இப்படி ஒரு விழாவை சிறப்பாக செய்தது எமக்கு வியப்பைத் தந்ததாக பலரும் கூறினர். இதற்கு பின்னணியில் எனது தந்தையே மூலகர்த்தாவாக இருந்து செயற்பட்டார்.

எனது சகோதரிகள் மற்றும் எமது கல்லூரி நண்பர்களாலேயே பல நிகழ்ச்சிகள் செய்யப்பட்டன. பிரபல அறிவிப்பாளர் பய்ஸல் பொன்ஸோ நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். பிரதம அதிதியாக தேசிய மொழிகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் எஸ். சந்திரசேகரன் அவர்கள் கலந்து கொண்டார்கள். நூல் ஆய்வை பிரபல சினிமா விமர்சகரும் எழுத்தாளருமான கே.எஸ்.சிவகுமாரன் அவர்கள் நடாத்தினார்கள். இந்நிகழ்வில் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் சமூக மொழிகள் பிரிவின் பீடாதிபதி மனோஜ் ஆரியரத்ன பிரதம பேச்சாளராவும் தற்போதைய முஸ்லிம் சமய கலாசார திணைக்களப் பணிப்பாளர் அஷ்ஷெய்ஹ் ஏ. பி. எம் அஷ்ரப், பன்னூலாசிரியர் அஷ்ஷெய்ஹ் ரவுப் ஸெய்ன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் விழாவை அலங்கரித்தார்கள். குடும்ப உறுப்பினர்கள், எனது நண்பிகள், எனது தந்தையின் நண்பர்கள், சமூக வலைத்தள நண்பர்கள், இலக்கியவாதிகள், ஊடகவாதிகள், நலன் விரும்பிகள் என்று பலரும் கலந்து கொண்டு விழாவை சிப்பித்தது மட்டுமல்ல என்னை உற்சாகப்படுத்தி வாழ்தினார்கள்.

கொழும்பில் நடந்த வெளியீட்டு விழா போன்று ஒன்றை எனது பிறந்த ஊரான பதுளையிலும் அதே மாதம் 31 ஆம் திகதி பதுளை ரிவ சைட் ஹோட்டலில் நடாத்தினோம். கொழும்பில் கிடைத்தது போன்ற அதே ஆதரவும் ஒத்துழைப்பும் ஊரிலும் கிடைத்தன. இதில் எனது முதலாவதும் இரண்டாவதும் தங்கைகளான நய்ஹா, நதா நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியது விஷேட அம்சமாகும். அத்துடன் எமது கல்லூரி ஆசிரிய, ஆசிரியர்களால் 'தங்க பிரேஸ்லட்' ஒன்றை அணிவித்து என்னை கௌரவப்படுத்தியமையை சிறப்பு நிகழ்வாக குறிப்பிட விரும்புகிறேன்.

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்
@skytamil.lk www.skymediasl.com
மாதமிருமுறை | இதழ் - 8 | 16-30 மே 2021




**கேள்வி - 8**

## புத்தக வெளியீட்டுக்குப் பின்னர் அதற்கு கிடைத்த ஆதரவு பற்றியும் புத்தகம் கிடைக்கும் இடங்கள் குறித்தும் ஏதேனும் குறிப்பிட விரும்புகிறீர்களா..?

இந்தியா, லண்டன், மலேசியா, அமெரிக்கா, ஜப்பான், பொஸ்வானா, டுபாய் போன்ற நாடுகளைச் சேர்ந்த பலர் எனது புத்தகத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர். இன்னும் பலர் தொடர்பு கொண்டு அதனை பெற்று வருகின்றனர். அத்தோடு குறிப்பாக கொழும்பிலுள்ள முன்னணி புத்தக நிலையங்களிலும் எனது புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளலாம். சிலர் தனிப்பட்ட முறையிலும் அதனைப் பெறுகின்றனர். அத்தோடு கொழும்பிற்கு வெளியேயும் பல புத்தகசாலைகளிலும் எனது புத்தகம் கிடைக்கப் பெறுகின்றது.



**கேள்வி - 9**

## உங்களது புத்தகத்திற்கான வாசகர்களது பின்னூட்டங்கள் திருப்திகரமாக உள்ளதா...?

உண்மையில் இளம் வயதிலுள்ள பல படைப்பாளிகள் என்னை முன்னுதாரணமாகக் கொண்டு, செயற்படத் தொடங்கியுள்ளனர் எழுத ஆரம்பித்துமுள்ளனர். அவர்கள் தங்களது Role Model என்று என்னைக் குறிப்பிடுவது மகிழ்ச்சியை எனக்கு அளிக்கின்றது.

அத்தோடு பல தாய்மார்கள் தங்களது சிறிய குழந்தைகளது படைப்புகளை எனக்கு அனுப்பி அவர்களும் எழுதத் தொடங்கியுள்ளதாகவும் அதற்கு எனது புத்தகம் ஒரு காரணமானதாவும் குறிப்பிடுவது சந்தோஷத்தைத் தருகின்றது. பல இளம் சிறார்கள் எனது கவிதைகளை வாசித்து ஒளி, ஒலிப்பதிவு செய்து அனுப்பியும் உள்ளனர். கொழும்பில் Elocution Centre ஒன்று எனது புத்தகத்தை ஒரு பாடப் புத்தகமாகப் பாவிக்கின்றது.

மனதளவில் வீழ்ந்த, இலக்கற்றிருந்த பலர் எனது புத்தக உள்ளடக்கத்தினூடாக நம்பிக்கை பெற்றதாகவும் விழிப்புணர்வு அடைந்ததாகவும் குறிப்பிடுவது எனக்கு ஓர் ஆத்ம திருப்தியைத் தருகின்றது. இவ்வாறு பார்க்கும் போது எனது புத்தகத்தை வெளியிட்டதன் நோக்கம் நிறைவேறுவது குறித்து அளவில்லா மகிழ்ச்சி எனக்கு ஏற்படுகின்றது. அல்ஹம்துலில்லாஹ்.



## கேள்வி - 10

### உங்களின் சேவைகளைப் பாராட்டி விருதுகள் கிடைத்துள்ளனவா? அது பற்றிக் குறிப்பிடுங்கள்.

*NLP Practitioner Program* எனும் ஒரு நிகழ்ச்சிக்கு இந்தியா சென்றிருந்தேன். எனது இலட்சியத்தையும் வேட்கையையும் புரிந்து கொண்ட பயிற்றுவிப்பாளர் அவர்கள், பயிற்சியின் முடிவில் ஒரு Appreciation note இல் International Motivational Speaker எனும் வாசகத்தை எழுதி, பலர் முன்னிலையில் எனக்கு தந்து, அனைவரையும் கைதட்டப் பணித்து என்னை உற்சாகப்படுத்தினார்கள். அது எனக்கொரு நல்ல தூண்டுதலைத் தந்தது எனலாம். அல்ஹம்துலில்லாஹ்.

அத்தோடு பெங்களூரில் 2019 ஆம் ஆண்டு நடந்த *International Conference On Life Skills Education* இல் எனது புத்தகத்தை அறிமுப்படுத்திப் பேசவும் எனக்கு சர்வதேச மேடையொன்று கிடைத்தது. அங்கு எனது உரைக்கு பல பாராட்டுக்கள் கிடைத்தன. பல கலாநிதிகளும் வாழ்க்கைத் திறன் நிகழ்ச்சித் திட்டங்களை பயிற்றுவிக்கும் பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் நான் மிக இளம்வயதான ஆளாக இருந்த போதிலும் கூட என்னை மதித்து, உற்சாப்படுத்தி வாழ்த்தியமை நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இதுவரை நடந்த அவர்களது சர்வதேச மாநாட்டில் நானே மிக இளம் வயதுடைய பேச்சாளராக கலந்து கொண்டிருக்கிறேன். அது மறக்க முடியாத சம்பவமாக உள்ளது.

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல் புத்தகங்களுக்கு கிடைத்த நேர்மறையான பின்னூட்டங்களையே பெரிய விருதாகக் கருதுகிறேன். அதிலும் குறிப்பாக பல இளம் வாசகர்களது மனதை எனது புத்தகம் கவர்ந்துள்ளதை ஒரு நல்ல விளைவின் சமிக்ஞையாகக் காணுகின்றேன்.

## கேள்வி - 11

### உங்களுக்கு வேறு துறைகளிலும் ஏதாவது ஈடுபாடு உண்டா..?

2014 ஆம் ஆண்டில் எமது பாடசாலை மாணவர்களுக்கு சுய முன்னேற்றச் செயலமர்வை முதன் முதலாக செய்தேன். நான் 8 ஆம் ஆண்டில் அப்போது கற்றுக் கொண்டிருந்தேன். அது மிக்க மகிழ்ச்சியான தருணம். 2018 ஆம் ஆண்டில் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைகழக மாணவிகளுக்கு வலுவூட்டல் நிகழ்ச்சி ஒன்றை செய்தேன். கொழும்பிலுள்ள Modern Learning Studio நிறுவனத்தினால் ஏற்பாடு செய்த சிறுவர்களுக்கு இலகுவில் கற்கும் முறைகள் பற்றிய செயலமர்வோடு, வேறு சில தலைப்புகளிலும் சில நிகழ்ச்சிகளையும் நடாத்தினேன்.

கிழக்கு மாகாணத்தில் இரு பெண்கள் மத்ரஸாக்களிலும் சில அரசாங்கப் பாடசாலைகளிலும் மாணவ, மாணவிகளுக்கான கற்றல் மற்றும் ஆளுமை விருத்திற்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை நடாத்தியுள்ளேன். அத்தோடு கொவிட் 19 அசாதாரண சூழ்நிலை ஏற்பட்ட ஆரம்ப காலத்தில் சில இணைய வழி செயலமர்வுகளையும் செய்துள்ளேன். குவைத் IPC நிறுவனத்தின் விஷேட அழைப்பில் வெளிநாட்டு வாழ் மாணவ மாணவிகளுக்கு ஒரு நிகழ்ச்சியையும் கடந்த வருடம் நடாத்தினேன். பாதிஹ் கல்வி நிறுவனம் O/ L எழுதிய மாணவிகளுக்கு நடாத்திய செயலமர்விலும் ஒரு வளவாளராக கலந்து கொண்டுமுள்ளேன். இவ்வாறு பணி தொடர்கிறது.

இந்தியா மற்றும் மலேசியாவில் நான் கற்றுக் கொண்ட பல விடயங்களைப் பகிர்ந்து கொள்ள இந் நிகழ்ச்சிகளின் மூலம் எனக்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்தது. அத்தோடு என்னை இற்றைப்படுத்திக் கொள்ள கொழும்பில் நடைபெறும் பல தலைப்புகளில் அமைந்த செயலமர்வுகளிலும் இணையவழி வகுப்புகளிலும் கலந்து கொள்வது எனது வழக்கம். கற்ற அறிவை, பெற்ற அனுபவத்தை என்னுடன் மட்டும் வைக்காமல் அவற்றை மற்றவர்களோடு பகிர்ந்து உதவும் மனப்பான்மையை எனது பெற்றோர் எங்களுக்கு ஊட்டியே வளர்த்துள்ளார்கள்.

## கேள்வி - 12

## உங்கள் வாழ்வில் மறக்க முடியாத சம்பவங்கள் இருக்கும். அவற்றில் முக்கியமானதைக் குறிப்பிட முடியுமா...?

நான் தாய் வயிற்றில் இருந்த ஆரம்ப கட்டத்தில் என்னைச் சுமந்து கொண்டு கஃபாவை ( மக்கா-உம்ரா பயணம்) வலம் வந்த வண்ணம் எனக்காக எனது பெற்றோர் பல பிரார்த்தனைகளில் ஈடுபட்டுள்ளார்கள். அவற்றின் அருள்களை நான் வாழ்வில் தொடர்ந்தும் காணுகின்றேன்.

உண்மையில் இன்று வரை நான் ஓர் அருள்பாலிக்கப்பட்ட குழந்தையாக *(blessed child)* என்னைக் கருத, கூறப்பட்ட இந்த நிகழ்வு முதல் காரணியாக உள்ளது. அல்ஹம்துலில்லாஹ்.

எனக்கு இந்த நிகழ்வு நினைவில் இல்லை. எனது பெற்றோர் கூறிய போதே நான் தெரிந்து கொண்டேன். எனது பெற்றோரின் பாடசாலை மாணவர்கள் ஒரு Elocution போட்டிக்குத் தயாராகிக் கொண்டு இருந்த சமயம் எனக்கு 2 1/2 வயதிருக்கும். அதன் பயிற்சிகளின் போது நானும் அங்கு இருந்ததால் கவிதையொன்றை எனக்கு பாடமாக்கிக் கொள்ள முடிந்தது.

அதனால் குறித்த அந்தப் போட்டியின் விழாவில் எனக்கும் கவிதை கூறும் வாய்ப்புத் தரப்பட்டது. கவிதையை முழுக்க பாடம் செய்த போதிலும் மேடைக்குக் கீழுள்ள பார்வையாளர்களைக் கண்டதும் நான் ஒன்றும் பேசாமல் அப்படியே இருந்து விட்டேன். எனது தந்தை மேடையேறி வந்து, எனக்குப் பின்னால் முழந்தாழிட்டுக் கொண்டு, ஒவ்வொரு வரியாக எனக்கு ஞாபகப்படுத்த, நான் அதை முறையாக ஒவ்வொன்றாகக் கூறியுள்ளேன். அதனால் எனக்கு எந்தப் பரிசும் சான்றிதழும் கிடைக்கா விட்டாலும் எனது தந்தையின் அந்தச் செயல் என் வாழ்க்கையில் முக்கியமானதாக நினைக்க வைத்தது.

அன்று முதல் இன்று வரை எனது தந்தை ஒரு நல்ல தோழனாக எனக்கு பின்னாலிருந்து வழிகாட்டுகிறார்நெறிப்படுத்துகிறார். அத்துடன் எனது தாயும் எனக்கு பல்வகையிலும் பக்கபலமாகவே உள்ளார்.கூறப்பட்ட இந்த ஆரம்பகால நிகழ்வுகள் மறக்க முடியாத ஞாபகங்களாக என்னில் பதிந்துள்ளன.












**கேள்வி - 13**

## இந்த நேர்காணலினூடாக விஷேடமாகக் கூற விரும்பும் செய்திகள் என்ன?

பெண் என்பவள் ஓர் ஆளுமை. அல்லாஹ் எல்லோரையும் ஒரு நோக்கத்திற்காகவே படைத்துள்ளான். எல்லோருக்கும் தனிப்பட்ட வாழ்வோடு ஒரு சமூகப் பொறுப்பும் உள்ளது. பெண் என்பவள் குடும்பத்தைப் பராமரிப்பவளாக மட்டும் இல்லாமல் அவளது திறனை சமூகத்திற்கும் பயனுள்ள விதத்தில் பிரயோகித்து, சமூக மாற்றத்திலும் ஒரு பங்காளியாக அவள் மாற வேண்டும். அதற்காகப் பல்வேறு வகையிலும் எமது திறமைகளையும் திறன்களையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

அதற்காகக் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் முதலில் இருண்ட, மூடுண்ட போக்கிலிருந்து விடுபட வேண்டும். எம்மை கூர்மைப்படுத்திக் கொண்டு பல்துறையிலும் நாமும் முன்னேறுவதோடு பலருக்கும் கைகொடுக்க வேண்டும். மறுமையின் விளைநிலமே இவ்வுலகு. அதற்காக நாம் நன்மையைப் பெற்றுத் தரக்கூடிய செயல்களில் தொடர்ந்தும் ஈடு படவேண்டும். அத்தோடு நாங்கள் மாறாத வரை நினைக்கும் மாற்றம் சமூகத்தில் வராது.

**கேள்வி - 14**

## இறுதியாக நீங்கள் வாசகர்களுக்கு ஏதாவது பகிர இருப்பின் குறிப்பிடலாம்.

உங்கள் முயற்சி மற்றும் நோக்கம் தூய்மையானதாக இருந்தால் நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்வான். ஆகவே காரணங்கள் கூறி, பின்தங்கி விடாமல் பெற்றோர் தரும் சந்தர்ப்பங்களைப் பிழையாகப் பயன்படுத்தாமல் வாழ்வில் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் முறையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

குறிப்பாக கட்டிளமைப் பருவத்திலுள்ள பலர் அநாவசியமாகக் காலங்களைக் கழித்து வீணடிக்கிறார்கள். அதை விடுத்து இலட்சிய வேட்கையோடு இக் காலத்தை எதிர்காலத்திற்குரிய மூலதனமாகப் பயன்படுத்த வேண்டும்.

அதற்காக அர்ப்பணத்தோடும் பொறுப்புணர்வோடும் வாழத் துணிய வேண்டும். இக்காலத்தைத் தவற விட்டால் எதிர்கால எமது இருப்புநிலை ஆட்டங்காணும் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்.

## கேள்வி - 15

## நீங்கள் துணிந்தெழு நிகழ்ச்சியை எவ்வாறு பார்க்கிறீர்கள்.?

இது வளர்ந்து வரும் பெண்களுக்கும் ஒரு சிறந்த களம் மட்டுமல்ல அரிய வாய்ப்புமாகும். இது இலைமறை காய்களாகவுள்ள ஆளுமைகளை வெளிக்கொண்டு வரவும் உதவுகிறது. ஏனைய பெண்களுக்கும் ஒரு மோட்டிவேஷன் ஆகவும் இருக்கிறது. திறமையான, அனுபவத்தில் மூத்த பெண் ஆளுமைகளும் இங்கு கலந்து சிறப்பிப்பதால் பல காத்திரமான அனுபவப் பகிர்வு நடைபெறுகிறது. சாதனைப் பெண்களுக்கு ஓர் அங்கீகாரமாகவும் இது அமைகிறது. பெண்களை துணிந்தெழச் செய்ய ஓர் உந்துதலை இந்நிகழ்ச்சி தொடர்ச்சியாக வழங்குவது பாராட்டத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொள்ள எனக்கும் சந்தர்ப்பம் அளித்த துணிந்தெழு நிகழ்ச்சியின் தயாரிப்பாளர் சகோதரி நுஸைலா பதுர்தீன் மற்றும் சகோதரர் ஜே.எம்.பாஸித் அவர்களுக்கும் ஸ்கை தமிழ் எனது ஆழமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

உங்களது காத்திரமான சமூகப் பணி தொடரவும் அது பெண்களது எழுச்சிக்கு வித்திடவும் எனது வாழ்த்துகளைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.








Ceremony















WE RISE BY LIFTING OTHERS!
The Young Muslim Women Writer's Forum - Event Organizers
Shafeeka Hafeez
Writer, Business Undergraduate at University of Colombo
Nuha Rizan
Author of Inner Wings, NLP Practitioner (Bangalore,India) Psychology and Counselling Undergraduate - Coventry, UK (NIBM)
Afna Fairoos
Founder of SpeakUp Organisation, Reading Degree in Multifaceted Journalism
#wehopetoinspire




# இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட 9 வயது மர்யம் ஜெஸீம் ஐக்கிய ராஜ்ஜியத்தின் ”அதி சிறந்த அல்குர்ஆன் காரியாஹ்” வாக மகுடம் சூட்டப்பட்டார்




ஐக்கிய ராஜ்ஜியத்தில் உள்ள பழமை வாய்ந்ததும் பிரபலமுமான இஸ்லாமிய தொலைக்காட்சி சேவைகளில் ஒன்றான ”இஸ்லாம் சணல் டீவி ” கடந்த 15 வருடங்களாக தொடராக நடாத்தி வரும் தேசிய ரீதியிலான ”அல் குர்ஆன் கிராஅத் போட்டி ” நிகழ்ச்சி தொடரில் முதல் தடவையாக கலந்து கொண்டு முதலிடத்தைப் பெற்று 2021 ஆம் ஆண்டின் ஐக்கிய ராஜ்ஜியத்தின் ”அதி சிறந்த அல் குர்ஆன் காரியாவாக ” மகுடம் சூட்டப்பட்டார் . அல் ஹம்துலில்லாஹ்

ஐக்கிய ராஜ்ஜியத்தில் பிரபலமான இப்போட்டி நிகழ்ச்சியில் 6-14வயதுடைய நூற்றுக் கணக்கான போட்டியாளர்கள் ஐக்கிய ராஜ்ஜியத்தின் பல பாகங்களிலிருந்தும் கலந்து கொண்டிருந்தனர்

ஒவ்வொரு சுற்றும் இறுதி சுற்றை நெருங்கும் தருவாயில் கடினமான நிபந்தனைகளை கொண்டிருந்தது . இறுதிச்சுற்றுக்கு நான்கு போட்டியாளர்கள் மட்டுமே தெரிவாவர் . இறுதிச்சுற்றுக்கு தெரிவாகும் போட்டியாளர்கள் போட்டி ஒழுங்கமைப்பாளர்கள் வழங்கும் இரண்டு ஜூசுக்களை மனனம் செய்வதுடன் அச் சூராக்களின் ஆங்கில மொழிபெயர்ப்பையும் வழங்க வேண்டும் . அத்துடன் நடுவர்களால் வழங்கப்படும் தஜ்வீத் கேள்விகளுக்கும் பதில் வழங்க வேண்டும். இந் நிபந்தனைகளுடன் போட்டியாளர்களின் திறமைகள் சவாலுக்குட்படுத்தப்பட்டு போட்டியாளர்களுக்கு நடுவர்களால் புள்ளிகள் வழங்கப்படும்.

மர்யம் ஜெஸீம் முதல் தடவையாக கலந்து கொண்டு பல சுற்றுக்களில் நடை பெற்ற பலப் பரீட்சைகளில் வென்று இறுதி ச்சுற்றுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார். இறுதிச் சுற்றுப் போட்டியில் 3 திறமை மிகு சக போட்டியாளர்களை எதிர்கொள்ள வேண்டி இருந்தது .

மர்யம் ஜெஸீம் , இறுதிச்சுற்றில் நடுவார்களால் வேண்டப்பட்ட ஜூஸ் உக்குறிய சூரா நபாவை எவ்வித தஜ்வீத் பிழைகளுமின்றி இனிய ராகத்துடன் ஓதி அதற்கான மொழிபெயர்ப்பை சரியாக வழங்கியதுடன் , நடுவார்களால் வினவப்பட்ட அத்தனை தஜ்வீத் வினாக்களுக்கும் சரியான பதில்களை அளித்து ஐக்கிய ராஜ்ஜியத்தின் 2021 ஆம் ஆண்டின் அதி சிறந்த அல் குர் ஆன் காரியாஹ் ( அல் குர்ஆன் ஓதுனராக) என்ற மகுடத்தை வென்றார் . அல்ஹம்துலில்லாஹ் . இறுதிச்சுற்றில் கலந்து கொண்டிருந்த அஸ் ஷெய்க் சுஐப் அலி அவர்கள் மர்யம் ஜெஸீம் இவ் வெற்றி மகுடத்தை பெற தகுதியான குறிப்புக்களை கூறுகையில் , ”தன்னால் வேண்டப்பட்ட சூராவை அழகிய ராகத்துடன் எவ்வித தஜ்வீத் பிழைகளோ , அரபு எழுத்துக்களின் உச்சரிப்புகளில் பிழைகளோ இன்றி ஓதிக் காண்பித்ததுடன் மொழிபெயர்ப்பில் சிறந்த ஆளுமையை வெளிப்படுத்தி இருந்ததுடன் , வினவப்பட்ட அத்தனை தஜ்வீத் வினாக்களுக்கும் தெளிவான பதிலை அளித்திருந்தார் ” எனக் குறிப்பிட்டிருந்தார்.

ஒன்பது வயதுடைய மர்யம் ஜெஸீம் இங்கிலாந்தின் இஸ்லாம் சணல் தொலைக்காட்சி வழங்கும் இச் சிறப்பு மகுடத்தை அதி குறைந்த வயதில் வென்ற, இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட முதலாவது சிறுமியாகவும் திகழ்கிறார் .

சிறுவயதில் இருந்து சர்வதேச அல் குர் ஆன் போட்டிகளில் கலந்து கொண்டு சாதனை படைத்து வரும் இவர், கடந்த ரமழானில் இங்கிலாந்தில் ஈமான் டீவி நடாத்திய தேசிய ரீதியிலான ”ஜூஸ் அம்மாஹ் ”. அல் குர்ஆன் மனனப் போட்டியில் கலந்து கொண்டு ஜூஸ் அம்மாஹ் 2020 வெற்றியாளர் பட்டத்தை வென்று முதல் பரிசான இரண்டு இலவச உம்ராஹ் பயண டிக்கட்டை பெற்றுக் கொண்டதுடன் சர்வதேச புகழ் பெற்ற சன்மார்க்க



## எமது துணிந்தெழு சஞ்சிகையின் ஆலோசகரின் மகள்

போதகரான முப்தி மென்க் அவர்களின்பிரத்தியேக பாராட்டையும் பெற்றுக் கொண்டார் .

இங்கிலாந்து மற்றும் எகிப்தில் உள்ள இஸ்லாமிய தொலைக்காட்சி சேவைகளில் தொடர்ச்சியாக அழைப்பு ஓதுனராக பங்கு கொண்டு தஜ்வீத் முறைப்படி ,அழகிய முறையில் அல்குர்ஆன் ஓதி பாராட்டுக்களை பெற்று வரும் மர்யம் ஜெஸீம் தனது யூ டிட்யூப் தளம் (www.youtube.com/maryamjazeem) மூலம் நாளாந்தம், இளம் மற்றும் முதியோரை கவரும் வண்ணம் பல்வேறு படைப்புக்களை வழங்கி வருகிறார் . அத்துடன் மைமூன் அல் குர் ஆன் தளத்தில் சிறுவர்களுக்கான அல்குர்ஆன் மற்றும் தப்சீர் ஆசிரியராகவும் பங்களிப்பு செய்து வருகிறார் .

பன்முக ஆளுமை மற்றும் ஆற்றல்களைக் கொண்ட சிறுமியாக திகழும் மர்யம் ஜெஸீம் , சந்தர்ப்பங்களை சூசகமாக பயன்படுத்தி தனது பூர்விக மண்ணில் நடக்கும் அநீதிகளுக்கும் இளம் வயதிலிருந்தே குரல் கொடுத்தும் வருகிறார். இலங்கையில் நடைபெற்ற ஜனாஸா எரிப்புக்கு எதிராக இங்கிலாந்து ஊடகத்தில் வழங்கிய உணர்வுப்பூர்வமான அழைப்பு சர்வதேச கவனத்தை ஈர்த்தும் இருந்தது . அத்துடன் , ஐரோப்பிய ஒன்றியத்தின் விலகல் சம்பந்தமான தனது ஆதங்கத்தை தெரிவித்து எழுதிய கடிதம் மூலம் இங்கிலாந்து பிரதமரின் விசேட பதில் அறிக்கையையும் பாராட்டையும் பெற்றவராவார் .

மர்யம் ஜெஸீம் தனது எதிர்காலத்தில் அல் குர்ஆனை மனனமிட்டு ஹாபிழாவாக பரிணமிக்க முயற்சி எடுத்து வருகிறார் . இலங்கையில் கிழக்கு மண்ணில் உள்ள சாய்ந்த மருதை பூர்விகமாக கொண்ட பெற்றோருக்கு இங்கிலாந்தில் பிறந்த மர்யம் ஜெஸீம் கடந்த 5 ஆண்டுகளுக்கும் அதிகமாக தனது தந்தையின் அரவணைப்பில் வாழ்ந்து கொண்டு பல சாதனைகளை புரிந்து பிறந்த நாட்டுக்கும் , தனது பூர்விக மண்ணுக்கும் புகழ் சேர்த்து வரும் பன்முக ஆளுமை கொண்ட மர்யம் ஜெஸீம் அவர்களை ஸ்கை தமிழ் சார்பாகவும் வாழ்த்தி பிரார்த்திக்கிறோம் .

# ஹைக்கூ கவிதைகள்
## ஹைக்கூத் தூரிகை கவிஞர்கள் இணையம்



கோழியின் பார்வை
அங்கும் மிங்குமாக ...
மலரைச் சுற்றிடும் வண்டு /

கவிதா சீனிவாசன்



மரக்கதிரையில் கோழிகள்
ஆஹா...எத்தனை அழகு ..
வண்ண நிற பூக்கள் !/

எஸ். செல்வி
இலங்கை கலஹா



பலகையில் கோழிகள்
பயமின்றி உட்கார்ந்திருக்கின்றன
பூக்களில் வண்டுகள்

கிருஷ்ணலதா வசீகரன்
ஜெனீவா- சுவிஸ்



வரிசையில் கோழிகள்
பார்வையில் அழகாக இருக்கின்றன
மஞ்சள் நிறப் பூக்கள் !/

நழீம் ஹனிபா
ஒலுவில்



வரிசையில் கோழிகள்
மலரை நோக்கியே இருக்கின்றன
புகைப்படக் கருவிகள் !/

வன்னித் தமிழ் மறவன்



காற்றில் இலைகள்
மேலெழும்பி கீழே விழுகிறது ..
துரத்தும் சிங்கம் !

ஜெ.ராபி புத்தளம்



இயற்கையின் அழகு
ரசிக்க மகிழ்ச்சியாக இருக்கிறது
தூக்கத்தில் கனவு !/

அப்துல் றசீத்
பொத்துவில் இலங்கை



உதிர்ந்த இலைகள்
இன்னும் தரை தொடவில்லை ...
தாமதப்படுத்துகிறது காற்று !/

கவிஞர்
தட்சணா மூர்த்தி
தமிழ்நாடு இந்தியா



ஊர்ந்தோடும் பச்சோந்தி/
கருப்பு நிறத்தில் உள்ளது/
கூடவரும் நிழல்!

ரேணுகா ஸ்டாலின்



விடிந்தால் தீபாவளி
கடை, கடையாக ஏறி இறங்குகிறார்
நெசவுத் தொழிலாளி !/

பொத்துவில்
மீராசாகிபு சமூன்



மூன்று காலில் மாடு
எழுந்து நிற்கிறது
நம்பிக்கை .!/

கவி ரகுமான்
ஒலுவில்



கலைத்து விடாதீர்கள்
கனவோடு தூங்குகிறான்
கலாமின் சீடன்

கவிஞர் த. யாசகன்
யாழ்ப்பாணம்



மின்னும் நட்சத்திரங்கள்/
கைகளை நீட்டிப்பிடிக்கிறாள் /
மின்மினிப் பூச்சிகள்/

கரு.கிருஷ்ணமூர்த்தி
தமிழ் நாடு
இந்தியா



# இதயம் பேசிய இரவுகளில் இருந்து

## “அன்பு வையுங்கள் ஆனால் வைத்தியமாகி விடாதீர்கள்”

எங்கள் நேசம் தவறிப்போயிருக்கலாம் அல்லது நாங்கள் தெரிவுசெய்த நபர் தவறானவராக இருக்கலாம். அவருக்கு எங்களை சரிவரப் புரிந்துகொள்வதற்கான வாய்ப்பு கிடைக்காமல் கூட இருந்திருக்கலாம். அல்லது அந்த வாய்ப்பை அவர்கள் தட்டிக் கழித்திருக்கலாம். எது எப்படியாயினும் , நாங்கள் அவர்கள் மீது வைத்த நேசத்தின் , அன்பின் உன்னதத்தை எங்களை விட வேறு யாரும் அறிந்திருக்க முடியுமா ?

பிடிக்கவில்லை , சரிவராது , ஒத்துப்போகாது என நிராகரிக்கவென்று சொல்லப்படும் இந்த ஒற்றை வார்த்தைகளால் அவர்களுடனான எங்கள் அத்தனை நிகழ்வுகளையும் மறக்கடிக்கச் செய்துவிட முடியுமா ?

" தயவு செய்து என்னை விட்டு விடுங்கள் , என்னை தொந்தரவு செய்யாதீர்கள் " என நாங்கள் உருகி நேசித்தவர்கள் எங்களைப் பார்த்து சொல்லும் ஒரு நொடியை உங்களில் யாரேனும் அனுபவித்திருக்கின்றீர்களா ? வேடன் வலையில் சிக்கி உயிருக்காகப் போராடும் உயிர் ஜீவன்களைப் போல அவர்கள் எங்களிடம் அவர்களின் சுதந்திரம் பற்றிப் பேசும் போது நேசித்த குற்றத்திற்காகவாவது அவர்களுக்கு வழிவிட்டு ஒதுங்கிக்கொள்ள வேண்டாமா ?
உண்மை நேசத்திற்கு தொந்தரவு என்றும் ஒரு பெயருள்ளது என இங்கிருக்கும் அத்தனை எழுத்தாளர்களும் குறித்து வைத்துக்கொள்ளுங்கள்.

போகட்டும்... எட்டிய தூரம் வரை மனம் போன போக்கில் போகட்டும் ... சுதந்திரக் காற்றில் அலைமோதுவதை விட , என் அன்புக் கூண்டில் களைப்பின்றி உட்காரலாமே.. சுதந்திரம் தேடிப் போனவர்களை வேண்டுமானால் அப்படியே விட்டுவிடலாம் ஆனால் அவர்கள் எண்ணங்களை என்னதான் செய்ய இயலும்..

அவர்கள் அறியாமலேயே அவர்கள் சார்ந்தோரிடம் அவர்களின் சுதந்திரத்திற்குப் பின்னரான வாழ்வைப் பற்றி தயக்கத்தோடு விசாரித்துக் கொள்வதில் இன்றும் எனக்கு அவ்வளவு இன்பம்..

பதிலுக்கு அவர்களோ " இன்னுமே அவளை மறக்கவில்லையா ? " எனக் கேட்பார்கள். எப்படி மறக்க இயலும் ? அவர்களுடன் பகிரப்பட்ட ஒவ்வொரு நொடியும் ஆழ்மனதில் கொட்டிக்கிடக்கும் நினைவுகளை எப்படித்தான் மறப்பது ?

இல்லை.. மறந்தாக வேண்டும் .. கூடிய விரைவில் மறந்தாக வேண்டும் ..

நானும் அந்த நினைவுகளை மறக்க தனித்திருந்து பார்த்து விட்டேன் , எல்லாவற்றிலும் இருந்து ஒதுங்கியும் பார்த்துவிட்டேன்..
வேலைப்பழுக்களில் என்னை மூழ்கடித்தும் பார்த்துவிட்டேன் .. நாட்கணக்காக பயணித்தும் பார்த்துவிட்டேன்.. இவை எதுவுமே சாத்தியப்படவில்லை. ஆக ஒரே ஒருமுறை மரணித்துப் பார்க்கலாம் என நினைத்திருக்கிறேன் .. அதோடு எல்லாமுமே அழகாக முடிந்துவிடும்.

இந்த உலகில் ஆகப் பெரிய தண்டனை எதுவென என்னிடம் கேட்டால் நான் உன்னையும் , உன் நினைவுகளையும்தான் சுட்டிக்காட்டுவேன்..

"அன்பு வையுங்கள் ஆனால் வைத்தியமாகிவிடாதீர்கள் "

**இன்ஷாம் அலியார்**
**நிந்தவூர் .**



# தேடற்கல்வி



**எம்.ஏ.எப்.முபஸ்ஸிரா**
**கொழும்பு பல்கலைக்கழகம்**

கற்றல் என்பது அனுபவங்கள் மூலம் நடத்தையில் ஏற்படும் நீண்டு நிலைக்கும் மாற்றம் ஆகும். மாணாக்களும், ஆசிரியர்களும் பல்வேறு கற்றல், கற்பித்தல் முறைகளை கையாள்வார்கள். அவை மாணவர்களின் அறிவாற்றலை மற்றுமல்லாது ஆசிரியர்களின் திறனையும் விருத்தி செய்யக்கூடியதாக இருக்கும்.


பாலர் வகுப்பு தொடக்கம், பல்கலைகழகம் வரை மாணவர்கள் ஆசிரியர்களிடமும், விரிவுரையாளர்களிடமும் பல்வேறு சந்தேகங்கள், கேள்விகளை எழுப்புவர். அதற்கு அவர்களும் பதிலளிப்பர். சில வேளைகளில் நம் கேள்விகளுக்கு சரியான விளக்கம் கொடுக்க முடியாத பட்சத்தில் ஆசிரியர்கள் “எனக்கு சந்தேகமாக உள்ளது. தேடிப்பார்த்து விளக்கம் தருகிறேன்“ எனக் கூறக்கேட்டுள்ளோம். நாம் கேள்வி கேட்பதற்கு விடை பகருவதும் சரியான முறையா? என்பதை பற்றியே அக்கட்டுரை அமைந்துள்ளது.

ஆரம்பம் நீதானே என்ற புத்தகத்தில் ஓஷோ ஒரு விடயத்தை பதிவிடுகின்றார். ஒருமுறை பிரேம் நிசி ஓஷோவிடம் ஒரு வினா எழுப்பி அதற்கு விடை கூறுமாறு கேட்டார் அதற்கு ஓஷோவின் பதில் இக்கட்டுரைக்கு மிகப் பொருத்தமாக இருக்கும். ஓஷோ கூறுகின்றார். “என் வேலை உனக்கு பதில் சொல்வதல்ல. நீயே உன் விடையை கண்டு கொள்ள உதவுவது தான். இது மிகவும் வித்தியாசமான பாணி. முன்கூட்டியே தயாரித்து வைக்கப்பட்ட விடைகளின் அடித்தளத்தின் மீது தான் நமது முழு கல்வித்துறையே நின்று கொண்டிருக்கின்றது. இவ்வகை விடைகளைக் கொண்டு உங்கள் புத்திசாலித்தனத்தை வளர்த்துக் கொள்ளவே முடியாது. அதற்கான தேவையும் இருக்காது. நீங்கள் வினா எழுப்பியவுடனேயே ஒரு கம்யூட்டர் ஆசிரியர் பதில் சொல்லிவிடுவார். உங்கள் புத்திசாலித்தனத்திற்கு எதிராக எவ்வளவு பெரிய கெடுதலை செய்ய என்னால் முடியாது. பல்வேறு வழிகளிலும் பல்வேறு விடைகளை பார்க்க வேண்டியிருக்கிறது.

நான் அதற்கான பின்புலத்தை உருவாக்கிக் கொடுத்துவிடுவேன். சம்பந்தங்களை காட்டிவிடுவேன். அப்புறம் நீங்களே பதில் கண்டுபிடித்து விடுவீர்கள். நான் எந்த பதிலும் சொல்வதே இல்லை. பதில் உங்களால் கண்டுபிடிக்கப்படாத வரை உங்கள் புத்தி கூர்மை அடைவதே இல்லை. உங்கள் பிரஞ்சை தயார் நிலையை அடைவதே இல்லை. ரெடிமேட் விடைகளை உங்கள் மூலையில் மனதில் சேர்த்துக்கொண்டே போவீர்கள். அவை வெறும் சுமை .பயனற்ற பாரம். புதிய சூழல்கள் எதிர்படும் போது என்ன செய்வதென்று தெரியாமல் திண்டாட வேண்டிவரும். காரணம், அந்த புதிய சிக்கலுக்கான ரெடிமேட் விடை அப்போது இருக்காது. நான் முற்றிலும் புதிய கோணத்தில் செயற்படுகிறேன். புதிய பிரச்சினைகள் எதிர்படும் போது நீங்கள் திறமை கொண்டவராக பிரஞ்சையுள்ளவராக தயார் நிலையில் புத்திசாலித்தனத்துடன் சுயமாக செயல்படுபவராக இருக்க வேண்டுமென்று நான் விரும்புகின்றேன். எந்த வினாவிற்கும் நீங்களே விடை கண்டுகொள்வது ஓர் ஆனந்தம். எல்லா கல்வி முறைகளின் அடிப்படையாக இது அமைந்திருக்க வேண்டும்.

ஆனால் நிலைமை அப்படியில்லை. அவர்கள் மலிவான வழியை குறுக்கு வழியை தேர்ந்தெத்துக்கொண்டு விட்டார்கள். நீங்கள் கேள்வி கேட்க வேண்டியது, அவர்கள் பதில் சொல்ல வேண்டியது. அவ்வளவு தான். வெளியிலிருந்து வழங்கப்படும் விடைகளை நீங்கள் நம்பலாம். ஆனால் நிச்சயமாக நம்பகத்தன்மை கொண்டதாக கொள்ள முடியாது. அதை ஏற்கலாம். சொன்னவர் சரியான மனிதர் என்பதால் நம்பிக்கை கொள்ள முயற்சி செய்யலாம். ஆனால் இவையெல்லாம் யூகங்களே சாதாரண நம்பிக்கை, நம்பகம் ஆகாது. ஆகவே உங்களுடைய கேள்விகளுக்கு நீங்களே விடை தேட முயற்சி செய்யுங்கள்.“ என்கின்றார் ஓஷோ. ஓஷோவின் இப்பதிவு எவ்வளவு தூரம் உண்மையானது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நாம் ஒரு வினாவுக்கான பதிலைத் தேடும் போது பல வினாக்களுக்கான விடை கிடைக்கப்பெறுவதுடன், எமது அறிவு மென்மேலும் மேம்படும். எந்த சூழ்நிலையையும் சமாளிக்கக்கூடிய ஒரு வலுவும், திறமையும் எங்களிடம் தோன்றும்.

ஒரு புதிய மாற்றம் எம்முள் நிகழ்வதைக் காணலாம். வினா எழுப்புதல் அதற்கு விடை பகருவதன் மூலம் எமது சிந்தனை ஆற்றல் மழுங்கடிக்கப்படுவதாக ஓஷோ பதிவிடுகின்றார். எம்முள் எழும் வினாக்களுக்கு நாங்களே பதில். எம்முள் அவ்வினாவுக்கான விடையைத் தேட முயல வேண்டும், விடை கிடைக்காவிட்டால் வெளியில் தேட வேண்டும். அப்பொழுதும் கிடைக்காவிட்டால் ஆசிரியர்களின் உதவியை நாடலாம் ஆனால் அவர்களிடம் நேரடியாக விடையை எதிர்பார்க்காமல் விடை பெறுவதற்கான வழியை ஏற்படுத்திக்கேட்கலாம். ஆகவே மாணவர்களாகிய நாங்கள் வினாக்களுக்கான விடையைத் தேட முயற்ச்சிப்போம். எம் அறிவுத்திறனை மேம்படுத்திக் கொள்வோம்.



# ஆளுமை



ஏ.எல். இம்தாத் அஹமட்,
சாய்ந்தமருது

ஒவ்வொரு மனிதனிடத்திலும் இயற்கையாக காணப்படும் உடலியல், உளவியல் சார்ந்த பலமே ஆளுமை எனப்படுகிறது. இதனை சிலர் அவர்களுடைய பரம்பரையில் இருந்துதான் வருகிறது என்று சொன்னாலும் நவீன உலகம் அவர் வாழும் சூழலினுடைய தாக்கத்தினாலேயே ஏற்படுவது என்று கூறுகிறது. பொதுவாக ஒவ்வொரு மனிதனுடைய மனதிலும் காணப்படுகின்ற பலமே ஆளுமையாக வெளிப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஒருவரது தோற்றம், உடல்வாகு, மொழித்தேர்ச்சி, கல்வி, அரசியல், பொருளாதாரம் என்பன ஆளுமைகளை கொண்டுவரும் என நினைக்கிறோம். சில நிறுவன தலைவர்களை நாம் புகழ்வதுண்டு.

அடக்கமான நிர்வாகம், யாருக்கும் பயமில்லாத தன்மை போன்ற நடவடிக்கைகளைக் கொண்டு அவர் ஆளுமையான தலைவர் என்கிறோம். இன்னும் சிலர், மற்றையவர்கள் மீதான பயம், கவர்ச்சியற்ற தோற்றம் என்பவற்றையெல்லாம் கொண்டு இவர் ஆளுமையற்ற தலைவர் என்கிறோம். இன்னும் பலர் தமது உடல் தோற்றம், செல்வ நிலை, கல்வித்தரம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு தம்மைத்தாமே தாழ்த்திக்கொண்டு நொந்துகொள்வர். இவைதான் ஆளுமைக்கான விளக்கமா என்று பார்த்தால், இல்லவேயில்லை. ஆளுமை எனப்படுவது தனி உடலோடு சம்பந்தப்படாமல் உடல்,உளம் என்பவற்றோடு இணைந்துதான் காணப்படுகிறது. உடல்வாகு, கல்வி, மொழித்தேர்ச்சி, பொருளாதாரம், சிந்தனை, தீர்க்கமான நடவடிக்கை, ஏனையவருடனான அணுகல் முறை போன்றவை தான் ஒரு தனிமனிதனின் ஆளுமையை தீர்மானிக்கக்கூடிய சக்திகளாக
இருக்கின்றன.

எவ்வித பொருளாதார வசதியுமின்றி ரயில் வண்டிகளில் பத்திரிகை விற்றுத்திரிந்த ஒரு பையனான அப்துல் கலாமால் நாட்டை ஆள முடிகிறது என்றால் அவரிடமிருந்த ஆளுமை என்ன? சாதாரண மனிதனாகவிருந்து வீதி வெளிச்சங்களில் படித்த ஆபிரகாம் லிங்கன் அமெரிக்காவையே ஆண்டார் என்றால், அவரிடமிருந்த ஆளுமை தான் என்ன? நாமும் நமக்குள் தேடிப் பார்ப்போம். என்னிடம் அழகில்லை, அந்தஸ்து இல்லை, பணம் இல்லை, கல்வி இல்லை, குடும்பப் பின்னணி இல்லை என நம்மிடம் ஆளுமையே இல்லை என ஒதுங்கிவிடக்கூடாது. எம்மிடம் உள்ளதைக்கொண்டு உயர்வாக நோக்க வேண்டும். எம்மிடமுள்ள தாழ்வு என மனப்பான்மையே ஆளுமையை அழிக்கும் விஷக்கிருமிகளாகும்.

அவைகள்தான் காலப்போக்கில், கல்வி, பொருளாதாரம் உட்பட அனைத்து விடயங்களையும் சிதைத்து மனிதனை அழிவுக்கு கொண்டு சேர்ப்பவை. ஆகவே, அக்குணத்தை தூர தள்ளிவிட்டு ஆளுமையின் உயர்நிலையை அடைய நாம் முயற்சிக்க வேண்டும். பொதுவாக இறைவன் மனிதனை படைக்கும்போதே அவனுக்கு திறனையும் படைத்திருக்கிறான். அவை மறைந்திருந்து, தகுந்த சந்தர்ப்பத்தின் போது வெளிப்படுத்தப்படுகின்றன. சிலருக்கு அடிக்கடி கவிதை ஊற்றெடுக் கும். அப்படி அவர் உணரும்போது கவிதை எழுத வேண்டும். அது நிச்சயமாக பிற்காலத்தில் வளர்ந்து உயிர்பெற்றுச் செல்லும். இப்படியாகத்தான் கவிக்கோ அப்துல் ரஹ்மான், கவியரசர் கண்ண தாசன், கவிப்பேரரசு வைரமுத்து போன்றோர் கவித்துவத்தில் இன்று உயர்ந்து விளங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

எம்மிடம் எவ்வித திறமைகளும் இல்லை என முடிவெடுத்து மூலையில் முடங்கிக் கிடப்பது கோழைத்தனம். எம்மை நாமே அடிக்கடி விசாரித்துக்கொள்ள வேண்டும். சிலர் திறமைகள் இருந்தும் வெளிக்கொண்டு வர கூச்சப்படுவார்கள். இப்படியானவர்களுக்கே பாடசாலைகள் மாணவர் மன்றம், கலைவிழா என ஏராளமான களங்களை உருவாக்கி கொடுக்கிறது. அதனை நாம் முறையாக பயன்படுத்தி, எம் திறமைகள் வெளிக்கொண்டுவரப்பட்டு, சமூகத்தின் முன் கொண்டு வரப்படுமாயின், தாழ்வு மனப்பாங்கு என்ற எண்ணமே அடியோடு அழிந்துவிடும். “யாரிடமும் தைரியமாக, தலை நிமிர்ந்து பேசலாம்” என்ற தைரியம் பிறக்கும். வாழ்வில் ஒரு பிடிப்பு ஏற்படும். சிலர் உயர்ந்த அந்தஸ்துள்ளவர்கள் சபையில் கூடுவதற்கு கூச்சப்படுவார்கள். சபையில் உள்ளோர் எம்மை ஏற்றுக் கொள்வார்களா?
தமது கருத்து பிழையாக விடுமோ என்ற பயம் அவர்களுக்கு வரும். தான் வசதியற்றவர், குறைவாகப் படித்தவர் என எண்ணி அவ்விடத்தை விட்டு நகர்ந்து சென்றுவிடுவர். இது ஆளுமையின் முக்கிய எதிரிகளிலொன்றாகும். நல்ல கருத்துகள், நல்ல சிந்தனைகள், அன்பு, பேச்சு, கருத்து பரிமாற்ற முறை போன்றவை நம்மை ஆளுமையுடையோராக வெளிக்காட்டுகிறது. உங்கள் பாடசாலை நாட்களை நினைவுகூர்ந்து பாருங்கள்.

மாணவர்கள் இன்றும் கூட பேசப்படுவார்கள். அவர்களின் பரீட்சை பெறுபேறுகள், கல்வி நிலை, அந்தஸ்து என எதுவும் சொல்லுமளவுக்கு இருக்காது. ஆனால், அவர்களிடம் இருக்கின்ற ஆற்றல்களினால் பாடசாலை மத்தியில்,பிரபல்யமாக இருப்பார்கள். ஆசிரியர்கள், அதிபர்கள் கூட அவர்களை ஞாபகம் வைத்திருப்பார்கள். சிறந்த கவிஞன், நல்ல பாடகன், சிறந்த விளையாட்டு வீரன் என அவர்களது அடையாளங்கள் காணப்படும். இவர்கள் விவேகமான மாணவர்களை விடவும் உயர் அந்தஸ்துடைய சில மாணவர்களை விடவும் அதிகம் மதிக்கப்படுபவர்களாக இருப்பார்கள்.

மாணவர்களை பொறுத்தவரையில், பாடசாலைகளில் அவர்களின் ஆளுமை விருத்திக்கான களங்கள் அமைத்து கொடுக்கப்பட்டு சிறந்த பயிற்சிகளும் வழங்கப்பட வேண்டும். ஒவ்வொரு பிள்ளைக்கும் வெவ்வேறான ஆளுமைத்திறன்கள் இயற்கையாகவே இருக்கும்.
அதை வெளிக்கொண்டுவர அவன் சந்தர்ப்பத்தை தேடிக்கொண்டு இருப்பான். அதனை பாடசாலை உருவாக்கிக் கொடுக்கும்போது மகிழ்ச்சி யுடனும் ஆர்வத்துடனும் தனது ஆளுமை திறன்களை வெளிக்கொண்டுவர முயற்சிப்பான். அவ்வாறானவர்கள் மாணவர்கள் மத்தியில் பிரபல்யமடைவார்கள். இதனால் மேலும் ஆர்வத்துடன் செயற்பட முயற்சிப்பார்கள். இவை எக்காலத்திலும் சமூகத்தில் முதன்மை நிலையை அடைய வழியமைத்துக் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.



# ஓர் ஆசிரியர் எப்படி இருக்க வேண்டும்?

உலகில் இரண்டு புனிதமான இடங்கள் உள்ளன. ஒன்று தாயின் கருவறை. இன்னொன்று ஆசிரியரின் வகுப்பறை. தாயின் கருவறையில் ஒருவன் உயிரைப்பெறுகிறான். ஆசிரியரின் வகுப்பறையில் அவன் அறிவினைப் பெறுகிறான்.

**1. கதிரவனைப் போல்...**

காலைக் கதிரவனைப் போல் காலம் தவறாமல் பள்ளிக்குச் செல்லுங்கள். காலைப் பனித்துளியைப் போல் புத்துணர்வுடன் செல்லுங்கள். மழையைச் சுமந்து வரும் மேகத்தைப் போல் பாடத்தை நன்கு தயார் செய்துகொண்டு வகுப்புக்குள் நுழையுங்கள். அழகிய சோலையில் நுழைவது போல் வகுப்பினுள் நுழையும்போது மகிழ்ச்சியுடன் நுழையுங்கள்.

**2. புன்னகை அவசியம்**

முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக்கொள்ள வேண்டாம். உங்கள் கோபத்தினால் அழகிய மலர் வாடிவிடுவது போன்று மாணவர்களின் முகமும் வாடிவிடும். வகுப்பில் பாடத்தைத் தொடங்கும் முன் மாணவர்களைப் பார்த்து சிறு புன்னகை செய்யுங்கள். உங்கள் முகத்தில் தவழும் புன்னகையால், மாணவர்களிடம் புன்முறுவல் பூக்கச் செய்யுங்கள்.

**3. நடிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்**

பாடத்தில் உள்ள கவிதையை கவிஞனைப் போல் வாசியுங்கள். கட்டபொம்மனைப் பற்றிப் பாடம் நடத்தப் போகின்றீர்கள் என்றால் கட்டபொம்மனைப் போல் மாணவர்களிடத்தில் பேசிக் காட்டுங்கள். நாடக வடிவில் உள்ள பாடங்களை நடத்தினால் நாடகக் கலைஞனாகி விடுங்கள். இதுபோன்ற செயல்கள், மாணவர்கள் பாடத்தை எளிதாகப் புரிந்துகொள்வதற்கு உதவும்.

**4. பாடம் வேண்டாம்...**

ஆசிரியர் என்பவர் வெறும் பாடத்தை மட்டும் நடத்திக்கொண்டே இருந்தால் போதாது. ஆகவே வாரத்தில் ஒரு பாடவேளையில் பாடத்தை நடத்தாமல் மாணவர்களிடத்தில் உள்ள தனித்திறமைகளை வெளிக்கொண்டு வர முயலலாம். உதாரணத்துக்குப் படம் வரைவது, கட்டுரை எழுதுவது, நாடகம் நடிப்பது, மேடைப் பேச்ச, விளையாடுதல், நடனம் ஆடுவது, இசைக்கருவிகளை இசைப்பது, பாடுவது போன்றவை மூலம் பல திறமையான மாணவர்களை இந்த உலகிற்கு நீங்கள் வழங்கலாம்.

**5. கேள்வி கேளுங்கள்..!**

பாடம் நடத்தும்போது மாணவர்களிடம் அதிகமாகக் கேள்வி கேளுங்கள். மாணவர்கள் கேள்வி கேட்கவும் வாய்ப்புத் தாருங்கள். மாணவர்களின் சிந்திக்கும் ஆற்றலை வளர்க்கும் நோக்கத்துடன் கேள்விகளைக் கேளுங்கள். வகுப்பில் கூட்டமாகச் சேர்ந்து ஒரே குரலில் பதில் சொல்லும் பழக்கத்தைத் தவிர்க்கப் பாருங்கள்.

**6 . கடைசி ஐந்து நிமிடங்கள்..!**

புதிதாக நடத்தும் பாடத்துக்கும் மற்றும் முந்தைய பாடத்துக்கும் உள்ள தொடர்பை விளக்கிக் கூற, பாடவேளையின் கடைசி ஐந்து நிமிடங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் பாடம் நடத்தினால், அன்று வகுப்புக்கு வந்த மாணவர்கள் உங்கள் பாடத்தைக் கேட்டு இன்புற வேண்டும். அன்று வகுப்புக்கு வருகை தராத மாணவர்கள் அடுத்த நாள் உங்கள் பேச்சைக் கேட்க ஓடி வர வேண்டும் என்பதை நிலைநாட்டுங்கள்.

**7. நூலகத்தைப் பயன்படுத்துங்கள்**

மாணவர்கள் நூலகத்திலிருந்து சில நூல்களை எடுத்துப் படித்து, பயன்பெறக் கூடிய வகையில் நல்ல நூல்களின் பெயர்கள், நூலாசிரியர்களின் பெயர்கள், நூல்களின் சிறப்பு ஆகியன பற்றிச் சொல்லுங்கள். உண்ணுதல், உறங்குதல் போலவே நல்ல நூல்களை வாசிப்பதும் ஒருவரின் எதிர்கால வாழ்வை மகிழ்ச்சியாகக் கழிக்க அவசியம் என்பதை மாணவர்களுக்குக் கற்பியுங்கள்.

**8. பாடப்புத்தகத்தை தாண்டி..!**

வாழ்க்கை மிகப் பெரியது. இந்தப் பெரிய உலகத்தை சிறிய புத்தகங்களுக்குள் அடக்கிவிடாமல் மாணவர்களுக்கு விசாலமான பார்வையைப் பார்க்கக் கற்றுக் கொடுங்கள். பாடநூல்கள் தகவல்களைக் கற்க உதவுகின்றன. இவை ஞானத்தை வளர்த்திட உதவுவதில்லை. எனவே பாடநூலுக்குள் மட்டும் மாணவர்களை கட்டிப் போட்டுவிடாதீர்கள். பாடநூலுக்கும் அப்பாலும் கடல் போல் அறிவு விரிந்து பரந்து கிடக்கிறது என்ற உண்மையை மாணவர்களுக்கு உணர்த்திடுங்கள்.

**9. உங்கள் பிள்ளை அவர்கள்..!**

மாணவர்களிடம் ஒரு தாயைப் போல, ஒரு தந்தையைப் போல் நடந்துகொள்ளுங்கள். மாணவர்களின் நலனில் அக்கறை காட்டுங்கள். மாணவர்களிடம் அன்னையின் அன்பையும், தந்தையின் கண்டிப்பையும், நண்பனின் நட்பையும் கொடுங்கள். மாணவர்களின் முழுப் பெயரைச் சொல்லி அழையுங்கள். உங்கள் வகுப்பில் பயிலும் ஒவ்வொரு மாணவரின் முகத்தையும் பெயரையும் நன்றாக நினைவில் வைத்திருங்கள்.

**10. நம்பிக்கையைக் கொடுங்கள்..!**

உன்னால் முடியும், நிச்சயம் வெற்றி பெறுவாய், நம்பிக்கையுடன் இரு, வாழ்க்கையில் மிகப்பெரிய சாதனையாளராக வருவாய், நல்ல நிலையை அடைவாய் போன்ற நேர்மறையான வார்த்தைகளுக்கு மாணவர் மத்தியில் மிகப்பெரிய சக்தி உண்டு. இந்த வார்த்தைகளை அடிக்கடி மாணவர்களிடத்தில் கூறிக்கொண்டே இருங்கள். மறந்து போய்க்கூட முடியாது, நடக்காது போன்ற எதிர்மறையான சொற்களை மாணவர்களிடத்தில் பயன்படுத்தாதீர்கள். இந்த வார்த்தைகள் மாணவர்களின் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தும்.

**நல்லாசிரியராய்.. அன்பாசிரியராய்த் திகழ வாழ்த்துகள்**

**மஹ்ரூப் பௌமியா**
**(உளவியல் டிப்ளோமா கற்கை நெறி மாணவி).**
**ரைஹானியா பெண்கள் அரபுக் கல்லூரி விரிவுரையாளர்**



# நேரம்

பாணந்துறை ஹயர் முடிந்ததும் பாகிர் ஹாஜியாரிடம் ஏற்கனவே பேசியபடி இரண்டாயிரம் ரூபாய் பணத்தைப் பெற்றுக் கொண்டார் சித்தீக் நாநா.பாணந்துறை ஹயர் என்பதால் இடையிடையே வந்த சிறுசிறு ஹயர்கள் புறக்கணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அங்கிருந்து வீடு திரும்பும் போது ரிம்ஸானின் ஹோட்டலில் ப்ரய்ட் ரைசு பார்ஸலொன்றை வாங்கிக் கொண்டார் மிஸ்டர் சித்தீக் நாநா.

சூப்பிப் போட்ட மாங்காய் வித்தாய் தெரியும் இலங்கைப் படத்தில் சித்தீக் நாநாவின் ஆட்டோவின் டயர்கள் தடம் பதித்த இடங்களை குறிப்பதை விட தடம் பதிக்காத இடங்களை குறிப்பதே இலகுவானது.கொழும்பு, பாணந்துறை என சவாரிகள் அமையும் பட்சத்தில் அன்றைய இரா உணவு ப்ரய்ட் ரைசு என்பது சித்தீக் பாபாவின் வீட்டில் எழுதப்படாத விதி ஆகிவிட்டது. இத்தனைக்கும் இரவு வேளைகளில் நோன்பு பிடித்த நாட்களும் இருக்கத்தான் செய்கின்றன.வாசிப்பவர்கள் புரிந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கையில் அடுத்த நகர்வை மேற்கொள்கிறேன்.

பைதகரசு, தொடைகள், ஒழுக்கு என கணித சொற்பிரயோகங்களுடன் போன வருடம் ஓலெவல் எழுதிய ஆசிக்கின் பாஸ்பேபரில் மூழ்கியிருந்தான் ஹபீல். “ வாப்பா! நாளக்கி ஓலெவல்ட கணக்கு பாடம், கொஞ்சம் தெரியாத கேள்விகள கேட்டுக்கொள்ள என்ன மாஸ்டர்ஸ் ஊட்டுல உட்டுட்டு வாங்கே“ என்றான் அவன். மகனின் தாகத்தை புரிந்து கொண்ட சித்தீக் நாநா இரண்டாயிரம் களைப்பிற்கு மத்தியிலும் ஆட்டோவை மிஸ்பா மாஸ்டரின் வீட்டை நோக்கி நகத்தினார் மகன் ஹபீலுடன்.

“அஸ்ஸலாமு அலைக்கும் மாஸ்டர்“என்று தன் பணிவான குரலில் கதைத்து மாஸ்டரின் முகத்தை எதிர்பார்த்திருந்தவனுக்கு “அவர் எங்கயோ போய்ட்டாரு“ என்ற பதிலே அவரின் மனைவி மர்யத்திடமிருந்து கிடைக்கப்பெற்றது.“நாளக்கி எக்ஸேம்! மாஸ்டர்ட டவுட் கேக்க வந்தன்.ஹபீல் என்றால் அவருக்குத் தெரியும்.“ அவனின் ஆர்வத்தை உணர்ந்த மர்யம் வீட்டுத் தொலைபேசி மூலம் தன் கணவருக்கு அழைப்பு விடுத்தாள்.“சாரி,நான் முக்கியமான வேல விஷயமா களுத்துறக்கு வந்தன்.வீட்டுக்கு வர லேட் ஆகும்“ என்ற பதில் மர்யத்தினூடாக ஹபீலுக்கு கடத்தப்பட்டது. மிகுந்த ஏமாற்றத்துடன் அங்கிருந்து வெளியேறி நடந்தான் அவன்.“அய்யோ அய்யோ! ஏன்ட புள்ள ஏன்ட புள்ள“ என்ற மர்யத்தின் திடீர் அலறலைக்கேட்ட ஆட்டோவிலிருந்த சித்தீக் நாநாவும் மகனும் விரைவாக வீட்டை நோக்கி விரைந்தனர். மிஸ்பா மாஸ்டரின் மூன்று வயது மகளோ வாயில் நுரை தள்ளிய நிலையில் நிலத்தில் விழுந்துக் கிடந்தாள். அதிர்ச்சி அடைந்த பிதா , மகன் இருவரும் குழந்தையை தூக்கிக் கொண்டு ஆட்டோவிற்கு ஓடி வந்தனர்.ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து மீளாதவளாய் அவளும் ஆட்டோவிற்குள் ஏறி பிள்ளையை அரவணைத்துக்கொண்டாள் தாய் மர்யம்.

டாக்டர் உஸ்மானின் வீட்டிற்குச் சென்றது சித்தீக் நாநாவின் ஆட்டோ.குழந்தையின் நிலையை அறிந்த டாக்டர் விரைவாக செயற்பட்டு தக்க சிகிச்சையை அளித்தார்.“ பயப்படுரதுக்கு ஒன்டுமில்ல! புட் அலர்ஜிக் ஆயிருக்கு.நல்ல வேளை லேட் ஆகாம கொண்டு வந்தீங்க“என்று டாக்டர் கூற மர்யம் இரண்டாயிரம் நன்றிகளோடு அவ்விருவரையும் பார்த்துக் கொண்டிருந்தாள்.

“டெடா! சேர் படிச்சித் தந்து முடிச்சிட்டாரு.பீஸ் தாங்க “ என்று டாக்டரின் மகன் ஆதில் அங்கு நடக்கும் நிகழ்வுகள் தெரியாது சாதாரணமாகவே வந்து கேட்டான். டாக்டரும் புன்னகைத்தபடியே இரண்டாயிரம் ரூபாய் பணத்தை எடுத்து தன் மகனிடம் கொடுத்தார்.சில நிமிடங்களில் ஆதிலுக்கு படித்துக் கொடுத்த சேர் மாடிப்படிக்கட்டிலிருந்து கீழே இறங்கி வருவதைக் கண்ட மர்யமோ “என்னங்க“ என்று அவரை நோக்கி ஓடிக்கொண்டிருந்தாள்.
தன் மகளுக்கு நிகழ்ந்த நிலமையை கேட்ட மிஸ்பா மாஸ்டருக்கு இருப்புக் கொள்ளவில்லை. உடனே அவர் “ யாரோட வந்தாய் “ என்று தன் மனைவியிடம் கேட்க மர்யமோ நன்றிக்கண்ணீருடன் ஸித்தீக் நாநாவை நோக்கி விரலை நீட்டினாள். மாணவன் ஹபீலோ கணிதக்கொப்பியுடன் அருகே நின்று கொண்டிருந்ததை கண்ட
மிஸ்பாஹ் மாஸ்டர் அவனை வீட்டிற்கு வரும்படி புன்னகைத்தார்.

**திக்ருல்லாஹ் நாளிர்**
**மஸ்ஸல, பேருவளை**



# பாலஸ்தீனத்தின் விடுதலையும் உலகநாடுகளின் நிலைப்பாடும்

நியாஸ் பரீட் (சிராஜி)
கத்தார்



பாலஸ்தீனர்கள் ஜெருசலேமில் அமைந்துள்ள அல் அக்ஸா மசூதியில் ரமழானை முன்னிட்டு மே 8-ம் தேதி இரவில் தொழுகையில் ஈடுபட்டனர். சுமார் 90,000 பாலஸ்தீனர்கள் அப்பகுதியில் கூடியிருந்தனர். அப்போது அங்கு வந்த இஸ்ரேல் போலீஸார் தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றினர். இதில் பாலஸ்தீனர்கள் பலர் காயமடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து பாலஸ்தீனர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில் இஸ்ரேல் மீது ஹமாஸ் இயக்கத்தினர் வான்வழித் தாக்குதல் நடத்தினர். இதற்கு பதிலடி அளிக்கும் வகையில் இஸ்ரேல் ராணுவம் காசா பகுதியில் தாக்குதல் நடத்தியது.
எல்லா அரேபியர்களும் இஸ்லாமியர்கள் இல்லை எல்லா இஸ்லாமியர்களும் அரேபியர்களும் இல்லை ,இஸ்லாமிய நாடுகள் 57 நாடுகள் உள்ளன ,இவைகள் அனைத்தும் சேர்ந்து பலஸ்தீனுக்காக போராடுமா ? எனும் கேள்வி எல்லோரது மனதிலும் எழுகின்றது.
இஸ்ரேலின் ஸ்தாபனத்தின் தொடக்கத்திலிருந்தே, அமெரிக்காவால் அது தொடர்ந்து ஆதரிக்கப்பட்டு வருகிறது, இது சியோனிச அரசை பாலஸ்தீனியர்களுக்கு எதிராக செயல்பட நீண்ட காலமாக அனுமதித்துள்ளது - இது போர்க்குற்றங்களுக்கு உட்பட்ட நடவடிக்கைகள்,என்றும் வக்காலத்து வாங்குகிறது.

“தன்னை தற்காத்துக் கொள்ள இஸ்ரேலுக்கு உரிமை உண்டு” என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் கூறினார்,ஒரு ஜனநாயகவாதி அப்பாவி பலஸ்தீன் மக்களை தாக்குவதை ஆதரிப்பது மட்டுமல்லாமல் இஸ்ரேலிய சர்வாதிகார பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவையும் அழைத்தார்,இது இஸ்ரேலின் பாதுகாப்பிற்கு அவர் அளிக்கும் உறுதியான ஆதரவு.
ஆனால் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பிற்கு எதிராக தங்களைத் தற்காத்துக் கொள்ள உரிமை உண்டு என்று எந்த அமெரிக்க அதிபர்களாலும் - ஜனநாயகவாதிகள் அல்லது குடியரசுக் கட்சியினர் - ஒருபோதும் சொல்லப்படாதது பாலஸ்தீனியர்களுக்கு ஆச்சரியமில்லை.
பாலஸ்தீனிய அதிகாரசபைக்கு அமெரிக்க உதவியை பிடென் மீண்டும் செயல்படுத்தினார், பாலஸ்தீனியர்களுக்கான நியாயமான ஒப்பந்தத்தை அவர் அதிகம் எதிர்பார்க்கிறார் என்ற தோற்றத்தை அளித்தார்.சில ஆய்வாளர்களும் பிடென் செய்வார் என்று நினைத்தார்கள் , ஆனால் நடந்தது அதற்க்கு முற்றிலும் மாற்றமானதே.
இது ஒன்றும் புதிதானதில்லை எப்போதும் உள்ள அமெரிக்காவின் நிலைப்பாடே ஆகும்.

2007 ஆம் ஆண்டில், இரண்டு முக்கிய அமெரிக்க பேராசிரியர்களான ஸ்டீபன் வால்ட் மற்றும் ஜான் மியர்ஷைமர் ஒரு வெடிக்கும் புத்தகத்தை எழுதினர் {The Israel Lobby and U.S. Foreign Policy} இதில் இஸ்ரேலுக்கு வாஷிங்டனின் ஆதரவை விளக்க முடியும் என்று அவர்கள் வாதிட்டனர்.
அமெரிக்க அரசியல் அமைப்பைக் கையாளும் லாபியின் திறமை இல்லாதிருந்தால், இஸ்ரேலுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவு இன்றைய நிலையை விட மிகக் குறைவானதாக இருக்கும் ”என்று பேராசிரியர்கள் புத்தகத்தில் கூறியுள்ளனர், இது உடனடியாக இஸ்ரேல் சார்பு குழுக்களால் குற்றம் சாட்டப்பட்டது.

அமெரிக்க பேராசிரியர்கள் இந்த லாபியை ”இஸ்ரேல் சார்பு திசையில் யு.எஸ். வெளியுறவுக் கொள்கையை வழிநடத்த தீவிரமாக செயல்படும் தனிநபர்கள் மற்றும் அமைப்புகளின் தளர்வான கூட்டணி” என்று விவரித்தனர். ”லாபியின் அடிப்படை அமெரிக்க யூதர்களால் ஆனது, அவர்கள் யு.எஸ். வெளியுறவுக் கொள்கையை வளைக்க தங்கள் அன்றாட வாழ்க்கையில் ஒரு குறிப்பிடத்தக்க முயற்சியை மேற்கொள்கிறார்கள், இதனால் அது இஸ்ரேலின் நலன்களை முன்னேற்றுகிறது” என்று புத்தகம் குறிப்பிட்டது.
“பாலஸ்தீனியர்களுக்கு எதிரான இஸ்ரேலின் கொள்கைகளுக்கு யு.எஸ் ஆதரவைப் பேணுவது லாபியின் முக்கிய குறிக்கோள், ஆனால் அதன் லட்சியங்கள் அங்கு நிற்காது. இஸ்ரேல் ஆதிக்கம் செலுத்தும் பிராந்திய சக்தியாக இருக்க அமெரிக்கா உதவ வேண்டும் என்றும் அது விரும்புகிறது, ”என்று பேராசிரியர்கள் எழுதினர்.

இஸ்ரேல் மிகப்பெரிய அமெரிக்க வாக்களிக்கும் தொகுதிகளில் ஒன்றான கிறிஸ்டியன் எவாஞ்சலிகல்களால் ஆதரிக்கப்பட்டுள்ளது, அதன் வரலாறு வட அமெரிக்காவின் காலனித்துவ வரலாற்றுக்கு செல்கிறது. 17 ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் கிழக்கு கடற்கரைக்கு முதன்முதலில் வந்தவர்கள் பியூரிட்டன் யாத்ரீகர்கள், புதிய கண்டம் தங்களது வாக்குறுதியளிக்கப்பட்ட நிலமான புதிய ஜெருசலேமாக இருக்கலாம் என்று நம்பினர்.
இதன் விளைவாக, பழைய பியூரிடன்கள் முதல் நவீன எவாஞ்சலிக்கல் குழுக்கள் வரை, பல அமெரிக்க கிறிஸ்தவ குழுக்கள் அமெரிக்காவின் தோற்றத்திற்கும் இஸ்ரேலின் ஸ்தாபனத்திற்கும் இடையே வலுவான தொடர்புகளைக் கண்டன. தற்போதைய சுவிசேஷக் குழுக்கள் இஸ்ரேலை பெருமளவில் ஆதரிக்கின்றன.
கருத்தியல் தொடர்புகளைப் பார்த்து, யூத லாபி இஸ்ரேலுக்கான எவாஞ்சலிக்கல் ஆதரவையும் கூட்டியுள்ளது. ”லாபி, கேரி ப நச ர், ஜெர்ரி ஃபால்வெல், ரால்ப் ரீட் மற்றும் பாட் ராபர்ட்சன் போன்ற முக்கிய கிறிஸ்தவ சுவிசேஷகர்களையும், பிரதிநிதிகள் சபையின் முன்னாள் பெரும்பான்மை தலைவர்களான டிக் ஆர்மி மற்றும் டாம் டிலே ஆகியோரையும் உள்ளடக்கியது” என்று வால்ட் மற்றும் மெர்ஷைமர் தங்கள் புத்தகத்தில் எழுதினர்.
”இஸ்ரேலின் மறுபிறப்பு விவிலிய தீர்க்கதரிசனத்தின் ஒரு

பகுதி என்று அவர்கள் நம்புகிறார்கள், அதன் விரிவாக்க நிகழ்ச்சி நிரலை ஆதரிக்கிறார்கள், இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுப்பது கடவுளின் விருப்பத்திற்கு முரணானது என்று அவர்கள் நினைக்கிறார்கள்," என்று பேராசிரியர்கள் மேலும் கூறினர்.
இஸ்ரேலுக்கான அமெரிக்க சுவிசேஷ ஆதரவு அமெரிக்காவோடு மட்டுமல்ல. ஆஸ்திரேலியா, பிரேசில், குவாத்தமாலா மற்றும் பிற நாடுகளில் உள்ள சுவிசேஷக் குழுக்களும் இஸ்ரேலை கடுமையாக ஆதரிக்கின்றன.

சர்வதேசத்தின் மௌனம் மௌனம் !
சட்டவிரோத குடியேற்றங்கள் மற்றும் ஜெருசலேமில் பாலஸ்தீனிய வீட்டு உரிமையாளர்கள் மீது சமீபத்தில் வெளியேற்றல் முயற்சிகள் தொடர்பான இஸ்ரேலிய கொள்கைகளை ஐரோப்பிய ஒன்றியம் விமர்சித்தாலும், பெரும்பாலான மேற்கத்திய தலைநகரங்கள் நல்ல நிலையில் உள்ளன. பாலஸ்தீனியர்களுக்கு எதிரான இஸ்ரேலின் சட்டவிரோத நடவடிக்கைகளை ஐ.நா மற்றும் பிற சர்வதேச அமைப்புகள் பெரும்பாலும் விமர்சித்தன, ஆனால் அவற்றின் நடவடிக்கைகள் அவ்வப்போது கண்டனங்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்டவை, இஸ்ரேலுக்கு எதிரான மேலும் சர்வதேச நடவடிக்கைகள் வாஷிங்டன் மற்றும் அதன் நட்பு நாடுகளால் தொடர்ந்து தடுக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் சக்திவாய்ந்த அரசியல் ஆதரவைப் பெற்றாலும், பாலஸ்தீனியர்களுக்கு பல சக்திவாய்ந்த நட்பு நாடுகள் இல்லை. துருக்கி மற்றும் ஈரான் (1979 புரட்சியின் படி), இரண்டு சக்திவாய்ந்த மத்திய கிழக்கு நாடுகள், பாலஸ்தீனிய உரிமைகள் மற்றும் அபிலாஷைகளுக்கு வலுவான ஆதரவாளர்களாக இருந்தன. ஆனால் இரு நாடுகளுக்கும் இஸ்ரேலுடனோ அல்லது ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன பிரதேசங்களுடனோ நேரடி எல்லைகள் இல்லை.

ஜனாதிபதி ரெசெப் தயிப் எர்டோகனின் கீழ், பாலஸ்தீனியர்களுக்கு துருக்கியின் ஆதரவு கணிசமாக அதிகரித்துள்ளது, ஏனெனில் எந்தவொரு தளங்களிலும் இஸ்ரேலின் தேசிய அல்லது சர்வதேச நடவடிக்கைகளை கண்டனம் செய்வதிலும், ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு மனிதாபிமான உதவிகளையும் பிற ஆதரவையும் அனுப்புவதிழும் துருக்கி ஓய்ந்துவிடவில்லை.
1979 முதல், தெஹ்ரான் ஹமாஸ் மற்றும் இஸ்லாமிய ஜிஹாத் போன்ற பாலஸ்தீனிய குழுக்களுக்கும் ஆதரவளித்து, எதிர்ப்புக் குழுக்களுக்கு ராக்கெட்டுகள் மற்றும் பிற இராணுவ உபகரணங்களை வழங்கியுள்ளது.

ஆனால் பல கொள்கையால் பிளவுபட்டு இருக்கும் அரேபிய நாடுகளின் மூலம் பலஸ்தீனுக்கு எந்த விதமான நிலவும் கிடையாது குறிப்பிட்ட சில அனுதாபங்களை தவிர. பாலஸ்தீனர்கள் மீது அரபு மக்கள் பரிவு கொண்டிருக்கிறார்கள். ஆனால், அதற்கு மேல் அவர்களிடம் எதையும் எதிர்பார்க்க முடியாது. பெரும்பாலான அரபு ஆட்சியாளர்கள் ஜனநாயகரீதியில் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை என்பதால், அவர்கள் மக்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள் இல்லை தங்கள் பிரதேசத்தின் சூழலை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் முடிவெடுப்பார்கள். அப்படித்தான் ஈரான் என்ற காரணி அவர்களை இஸ்ரேலை நோக்கித் தள்ளியது. யதேச்சாதிகார அரபு நாடுகளின் தலைவர்கள் பின்னால் பாலஸ்தீனர்கள் உட்கார்ந்துகொள்வது சிறுபிள்ளைத்தனமானது என்று யாஸர் அரஃபாத் நம்பியது சரிதான்




உலகத்தை ஸ்தம்பிதம் செய்து அவதிக்குள்ளாக்கி வல்லரசுக்களையும் ஆட்டிவைத்து இனம், மதம்,அந்தஸ்து, அதிகாரம் பார்க்காமல் மக்களின் உயிரைக்காவு கொண்டு சரித்திரத்தில் இரத்த வரலாறு கொண்ட COVID-19 கொரோனாவின் தாக்கம் இன்னும் முற்று முழுதாக முடிவுக்குவராத நிலையில் நமது இலங்கை நாட்டின் அரசாங்கம், சுகாதார அமைச்சு, பாதுகாப்பு பிரிவு போன்றவற்றின் தீவிரமான முயற்சியினால் இதுவரை காலமும் பாரிய ஆபத்துக்கள் ஏற்படாமல் செயற்திட்டங்களை மேற்கொண்டாலும் நாளுக்கு நாள் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்வதை நாம் அவதானிக்கிறோம்..

இவ்வாறான சந்தர்ப்பத்தில் இத்தனை நாட்களும் ஊரடங்கு உத்தரவுகளை முழுமையாகவோ, பகுதியாகவோ நடைமுறைப்படுத்தி பலதரப்பட்ட கட்டுப்பாடுகளை விதித்து மக்களை ஓரளவு கட்டுப்படுத்தி கொரோனா பரவலை தடுத்து வந்திருந்த போதிலும் ஊரடங்கு தளர்த்தப்பட்டு பொதுமக்களை சுதந்திரமாக நடமாடக்கூடிய சந்தர்ப்பத்தை அரசு பகுதியளவில் வழங்குகிறது.

பொதுமக்களுக்கு கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டிய விடயங்களை அரசு அறிவுரை வழங்கியும் அனேகமான பொதுமக்கள் எல்லோரும் கவனத்தில் கொள்ளாமல் வீம்பாக நடந்துகொள்வது பாரிய விளைவுகளை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது..

கொரோனா தொற்று அறிகுறிகள் தென்படும் தொற்றுக்குள்ளானவர்களை விட அறிகுறிகள் ஏதும் தென்படாது சாதாரணமாக இருக்கும் தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகம் என சுகாதார தரப்புகள் தெரிவிக்கின்றன.

எனவே இத்தனை நாட்கள் வீட்டில் இருந்து எங்களையும் எங்கள் குடும்பத்தையும் பாதுகாத்ததை விட ஊரடங்கு தளர்த்தப்படுகின்ற காலப் பகுதியில் மிக மிக பாதுகாப்பாகவும் அவதானமாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

1.அடிக்கடி கைகளை சவர்க்காரம் இட்டு கழுவிக்கொள்ளுதல்..
2.முகக்கவசம் (face mask) கட்டாயம் அணிந்து கொள்ளுதல்.
3.சமூக இடைவெளி பேணுதல்.
4.அவசியம் ஏற்பட்டால் மாத்திரமே வெளியில் செல்லுதல்.
5.வெளியில் சென்று வந்தால் குளித்து உடல் சுத்தம் பேணுதல்.

போன்ற பாதுகாப்பு முன்னேற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் . குறிப்பாக அவசியம் ஏற்பட்டால் மாத்திரம் மேற்கூறிய பாதுக்காப்புகளை கவனத்திற்கொண்டு வீட்டில் இருந்து ஒருவர் மாத்திரம் வெளியில் செல்வது சிறந்தது..

அன்பான உறவுகள் மேற்கூறிய விடயங்கள் நீங்கள் அடிக்கடி கேட்கும் விடயங்கள்தான் இருப்பினும் மீண்டும் மீண்டும் நினைவு படுத்துகிறோம். நீங்கள் உங்களை பாதுகாத்தால் சமூகமே பாதுகாக்கப்படும்..



எம்.பஹ்த் ஜுனைட்



துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்
@skytamil.lk www.skymediasl.com
மாதமிருமுறை | இதழ் - 8 | 16-30 மே 2021

# இன, மத புரிந்துணர்வுக்கு பல்லின பாடசாலைகளே சிறந்த தீர்வு!

என்.முகம்மது சப்னாஸ்

இன்றைய சூழலில் பன்மைத்துவம், மதங்களுக்கு இடையிலான பல்லினத்தன்மை பற்றி அதிகமாகப் பேசப்படுகின்றது. எனினும் வெறுமனே பேசுவதை விடுத்து குறித்த பன்மைத்தன்மையை அங்கீகரிப்பதற்கான மனப்பான்மையை இனங்களுக்கு இடையே ஏற்படுத்த தேவையான செயற்திட்டங்கள் உருவாக்கப்படுவதே மிக முக்கியமாகும்.

சமய, கலாச்சார, மொழி வேறுபாடு ஆரம்பமாகும் ஆதி இடம் பாடசாலையாகும். இலங்கையின் கல்விக் கொள்கையின்படி மாணவர்கள் மொழி, மதம், கலாச்சாரம் சார்ந்து அவர்களின் சிறு பராயத்திலேயே வேறுபடுத்தப் படுகின்றனர். இதுவே பின்நாளில் மாணவர்கள் பிற இன, சமயங்களை வேறு கண் கொண்டு பார்க்க வழியமைக்கிறது.

பொத்துவில் மெதடிஸ்ட் தமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மனோஜ் டிரோன் நிர்ஷன் எனும் மாணவர் இது பற்றிக் கூறுகையில், நான் தரம் 13 வரை எனது மதம் சார்ந்த பாடசாலையிலேயே கல்வி பயின்று வருகிறேன். எனக்கு இதுவரை எனது மதம் தவிர்ந்த வேறு நண்பர்கள் இல்லை. எனக்கு அவர்கள் கொண்டாடும் விழாக்கள் மற்றும் அவர்களது கலாச்சார விழுமியங்கள் பற்றிய எது வித முன்னறிவும் இல்லை. ஆனால் அவர்களுடன் ஒன்றாக பழக வாய்ப்புக் கிடைத்தால் அவர்களைப் பற்றி அறிய ஒரு வாய்ப்பு கிடைக்கும். ஆனால் எனக்கு இந்த 13 வருடத்தில் அவ்வாறான ஒரு வாய்ப்பு கூட கிடைக்கவில்லை" என்றார். இலங்கையின் பெரும்பாலான அரச பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களிடம் .கேட்டால் அவர்களது ஆதங்கமும் இதுவாகவே அமையும் என்பதில் சந்தேகமில்லை

இதனை மாற்ற ஒரு சிறந்த வழியாக அனைத்து இன மக்களும் இன, மத, மொழி பாகுபாடின்றி ஒன்று கூடுவதற்கான ஒரு தளத்தை உருவாக்குவது அவசியமாகும். இதற்கு பல்கலைக்கழகங்களின் கட்டமைப்பை உதாரணமாக குறிப்பிடலாம்.

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதியும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ரமீஸ் அபூபக்கர் கூறுகையில் " பொதுவாக பல்கலைக்கழகமானது பாடசாலைகளை போலல்லாது பல் இன, மத, மொழி பேசுகின்ற மாணவர்கள் இணைந்து காணப்படுகின்றனர். ஏனெனில் இங்கு பல இடங்களிலிருந்து பல வாழ்க்கை பின்னணிகளையுடைய, பல்வேறு மொழி பேசுகின்ற, ஒரே மொழியைக் கூட பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபாடான வழக்கங்களில் பேசுகின்ற மாணவர்கள் ஒரே இடத்தில் கல்வி கற்கக் கூடிய, சாப்பிடக்கூடிய, தூங்கக்கூடிய , கலந்துரையாடுவதற்கான வாய்ப்புகள் ஏற்படுகின்றன. அந்த வகையில் பல்கலைக்கழகங்கள் பன்மைத்துவத்தை கட்டியெழுப்புவதற்கான ஒரு நல்ல களமாகும் என குறிப்பிட்டார்.

ஆனால் இதில் உள்ள பெரிய சவால், பல்கலைக்கழகங்களில் பன்மைத்துவம் கட்டியெழுப்பப்படுகின்றதா?என்பதாகும். சில பல்கலைக்கழகங்களில் இது வெற்றியளித்தாலும் சில பல்கலைக்கழகங்களில் இது தோல்வியடைந்த விடயமாகவே உள்ளது.

" எமது தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் கூட கடந்த காலங்களில், பெரும்பான்மை இன மாணவர்கள் தங்கள் விழாக்களை, நிகழ்வுகளை பல்கலைக்கழகத்திற்கு வெளியில் தங்கள் இன மக்கள் வாழும் பிரதேசங்களில் நடத்திய சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இவர்களில் சிங்களம், முஸ்லிம், இந்து போன்ற எவ் இனத்தவர்களும் தங்கள் நிகழ்வுகளை பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரின் முன்னிலையிலும் நடத்த ஆயத்தமாக இருக்கவில்லை. இதனால் பன்மைத்துவத்திற்கு எதிரான சிந்தனையே அங்கு வளர்ந்ததை காணக்கூடியதாக இருந்தது.

தமது வட்டத்திற்குள் மாத்திரம் சுருங்கி வாழும் கலாசாரம் பல்கலைக்கழகங்களில் தொடர்வது நாட்டின் பன்மைத்துவத்திற்கு சவாலான செயற்பாடாகும்.

பல்கலைக்கழக மாணவர்கள் இவ்வாறு நடந்து கொள்வதற்கு காரணம் சிறு பராயத்திலிருந்தே பாடசாலையில் கிடைத்த அனுபவமாகும். பல்கலைக்கழகங்களை பார்க்கிலும் பாடசாலைகளிலேயே பன்மைத்துவ சூழல் கட்டியெழுப்பப்பட வேண்டும். பாடசாலைகளில் மும் மொழி மூலமாகவும் கற்பதற்கான வசதிகள் ஏற்பட வேண்டும். இதற்கு மாறாக முஸ்லீம் , இந்து , சிங்கள, கிறிஸ்துவ பாடசாலைகள் என மத ரீதியான பாகுபாட்டின் அடிப்படையிலான பாடசாலை முறையை நான் ஏற்றுக்கொள்ளவில்லை" என்றும் கலாநிதி ரமீஸ் அபூபக்கர் குறிப்பிடுகிறார் .

எமது நாட்டு மக்களிடையே இன, மத, கலாசார ரீதியில் பிரச்சினைகள் ஏற்படக் காரணமே புரிந்துணர்வு இன்மையாகும். இப் புரிந்துணர்வை புத்தகங்களில் வாசித்து பெற்றுக் கொள்ள முடியும் என எண்ணுவது மடைமையாகும். இரண்டு மதத்தவர்களிடையே, இரண்டு மொழி பேசுபவர்களிடயே புரிதல் ஏற்பட வேண்டின் அவ்விருவரும் ஒன்றாக இருப்பதற்கான, ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு உருவாக வேண்டும்.

இந்த அடிப்படையில் மூவினமும் கல்வி கற்கக்கூடிய பாடசாலையான கண்டி புனித அந்தோனியார் கல்லூரியில் கல்வி பயின்ற அபூ சாஹிர் முஹம்மத் அஸீம் என்னும் மாணவன் தனது அனுபவத்தை இவ்வாறு பகிர்ந்து கொண்டார் "எங்களது பாடசாலை ஒரு தேசிய பாடசாலை. இது கிறிஸ்தவ, தமிழ், சிங்களம், முஸ்லிம் அனைத்து இன மாணவர்களும் ஒன்றாக கல்வி பயிலும் பாடசாலையாகும். இதனால் எங்களுக்கு மொழி ஒரு பிரச்சினையாக இல்லை. மும் மொழிகளையும் சரளமாக பேச முடிகிறது.
இங்கு நான்கு சமூக மக்கள் ஒன்றாக கல்வி பயில்வதால் அவர்களின் விழாக்கள், கலாச்சாரம், மதம் தொடர்பான அறிவையும் மற்றும் அவர்களது மத குருமாருடன் தொடர்பாடும் விதத்தினையும் அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது. மேலும் அவர்களுக்கும் எங்களுக்கும் சிறப்பான நட்பு கட்டியெழுப்பப்படுகிறது.

இப் பாடசாலையில் இருந்து பெற்றுக் கொண்ட அனுபவமானது நாட்டின் எந்த இடத்துக்குச் சென்ற போதிலும் மாற்று இனத்தவர்களுடன் தொடர்பாடக் கூடிய, நட்பு கொள்ள கூடிய அறிவை, அனுபவத்தை பெற்றுத் தந்துள்ளது. சென்ற காலங்களில் முஸ்லிம்கள் சார்ந்த பிரைச்சினைகள் வரும் போதும் என்னுடன் கற்ற எனது அன்பு நண்பர்கள் என்னை அழைத்து நீங்கள் எவ்வாறு இருக்கின்றீர்கள் , உங்களுக்கு ஏதும் பிரச்சினையா என நலம் விசாரிப்பார்கள். அவர்களது விழாக்களில் நானும் அவர்களது கலாசார ஆடைகளை அணிந்து அவர்களைப் போல் கலந்து கொண்டு அவர்களின் வீடுகளில் உணவு உண்டு அவர்களது குடும்பத்துடன் நெருங்கிய உறவினர் போல் பழகுவேன். அவர்களும் எமது விழாக்களில் கலந்து கொள்வர். எங்களுக்குள் எது வித வேறுபடும் இன்றி பேசிப் பழகுவோம். எங்களுக்கு ஏதும் இன ரீதியான பிரச்சினை ஏற்பட்டால் அவர்கள் குரல் கொடுப்பார்கள். அவர்களுக்கு ஏதும் பிரச்னைகள் ஏற்பட்டால் நாங்கள் அவர்களுக்காக குரல் கொடுப்போம்.நாங்கள் எல்லோரும் ஒரு பாடசாலையில் கல்வி கற்றதனால் தான் இவ்வாறு ஒருவரை ஒருவர் புரிந்து நட்புறவு பேண முடிகிறது". என தெரிவித்தார்.

ஆகவே பல்லின மாணவர்களும் ஒரு சேர கற்கின்ற பாடசாலைகள் அதிகரித்தால் தான் மாணவர்கள் மாற்று இன மக்களுடன் பழக, பேச வாய்ப்புக் கிடைக்கும். இவ் வாய்ப்பினை பெற்றுத் தரும் களமாக பாடசாலையை மற்ற முடியும். இன்று வரை பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் வயது,பால், ஏழை பணக்காரன், உயர்ந்தவர் தாழ்ந்தவர், மேதை பேதை போன்ற எவ்வித வேறுபாடுகளையும் கருத்தில் கொள்ளாது ஒற்றுமையாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இனி வரும் காலங்களில் தமிழர், சிங்களவர், முஸ்லீம், கிறிஸ்தவர் என்ற வேறுபாடும் இல்லாது ஒரே குடையின் கீழ் ஒற்றுமையாக வாழ வசதியளிக்கும் இடமாக பாடசாலைகளை நாம் மாற்றி அமைக்க வேண்டும். இவ்வாறான நிலைக்கு பாடசாலைகள் மாற்றப்படுமானால் அனைத்து மதத்தவர்களையும் மரியாதை செய்யுமாறு பாடசாலையின் செயற்பாடுகள் ஒழுங்குபடுத்தப்படுமானால், அனைத்து மதத்தவர்களிற்குரிய விசேட தினம்களும் பாடசாலையில் கொண்டாடப்படுமானால் மாணவர்களிடம் மாற்று மதத்தவர் பற்றிய நல்லபிப்பிராயம் உருவாகும்.

எனினும் இதனை சாத்தியமாக்குவது சவால்கள் நிறைந்தது. ஒரே இரவில் இதனை சாதிக்கவும் முடியாது. இது குறித்து ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் உதுமா லெப்பை முஹம்மது ஹாசிம் குறிப்பிடுகையில், "இலங்கை போன்ற பல்லின சமூகம் வாழுகின்ற நாடுகளிலே நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப வேண்டுமானால் அது அடிமட்டமாகிய பாடசாலை மாணவர்கள் மத்தியில் இருந்து ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த அடிப்படையில் இன்று சமய, சமூக, இன ரீதியாக பிரிந்திருக்கின்ற பாடசாலை ஏதோ ஒரு குடையின் கீழ் எல்லா மாணவர்களும் பல்லினத்தவர்களுடன் கற்கின்ற ஒரு பாடசாலை எதிர்காலத்திலே அமைந்தால் அது நாட்டிற்கு சாதகமாக இருக்கும் என நான் நம்புகிறேன். எமது நாட்டை அமைவு ரீதியாகப் பார்க்கும் போது தமிழ் மாணவர்கள் வேறாகவும், முஸ்லிம் மாணவர்கள் வேறாகவும், சிங்கள மாணவர்கள் வேறாகவும் இருக்கின்றபடியினால் இவ்வாறான மாணவர்களை ஒரே இடத்திலே அமர்த்தி இக்கலைத் திட்டத்தினை அமுல்படுத்துவது என்பது மிகவும் பாரதூரமான ஒரு சவாலாகும். அதே வேளையில் இம் மாணவர்கள் பல சமூக, சமய பின்னணியைக் கொண்டவர்களாக இருக்கின்றனர். வெவ்வேறு சமய ரீதியான பின்னணியைக் கொண்ட இம் மாணவர்கள் ஒரே பாடசாலையில் கற்கின்ற போது அங்கு சமய விழுமியங்களை கைக்கொள்கின்ற ஒரு பொதுவான அமைப்பு வேறு ஒரு சவாலாக அமையும். ஆகவே, அதற்கேற்ப செயற்திட்டங்கள் வடிவமைக்கப்பட வேண்டும். அதே போல் மாணவர்களுக்கிடையே மொழி வேறுபடுகின்ற போது கல்விச் செயற்பாடுகளை எந்த மொழியில் மேற்கொள்வது எனும் குழப்ப நிலை உருவாகும். அந்த வகையில் பெரும்பாலும் நாம் ஆங்கில மொழியையே சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்ற அடிப்படையில் இணைப்பு மொழியாகவும் போதனா மொழியாகவும் கொண்டு கல்வித் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும்.இதற்காக நடைமுறைச் சாத்தியமான விடயங்களை எதிர்காலத்தில் கைக்கொள்ள வேண்டும்.

முன்னொரு காலத்தில் அவ்வாறான நிலை காணப்பட்டது. அக்கரைப்பற்றிலும் ஆங்கில மொழி மூல பாடசாலைகள் இருந்தன. அதிலே அந்த பிரதேசத்தை சேர்ந்த முஸ்லிம், தமிழ், சிங்களம் ஆகிய மாணவர்கள் ஒன்றாக கற்ற வரலாறுகள், அனுபவங்கள் நம் முன் உள்ளன. பின்னால் வந்த அரசியல், ஏனைய விடயங்கள் அடிப்படையிலேயே இன்றைய பாடசாலைகளும் சமூகங்களும் பிரிந்துள்ளன.

இந்நிலை எதிர்கால பன்மைத்துவ இலங்கைக்கு பொருத்தமானதல்ல. எதிர்காலத்தில் எல்லா சமூக மாணவர்களும் ஒன்றாக கற்கக்கூடிய பாடசாலைகளை உருவாக்குவதே இதற்கு தீர்வு என நம்புகிறேன்" என்றார்.

இன்று கல்வி அமைச்சின் கீழ் 10122 பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றுள் வெறும் 113 பாடசாலைகள் மாத்திரமே மும் மொழிப் பாடசாலைகளாகும். ஏனைய பாடசாலைகள் அங்கு கற்கும் மாணவர்களின் தாய் மொழியிலேயே இயங்குகின்றன (தகவல்: வழிகாட்டல் புத்தகம், ஒன்று கூடுவோம் இலங்கை அமைப்பு ) இந்நிலை மாற்றப்பட வேண்டும். எமது நாட்டில் உள்ள பெரும் பான்மையான பாடசாலைகளை மும் மொழிப் பாடசாலையாக மாற்ற வேண்டும். இதன் வாயிலாக வெவ்வேறு மொழியை பேசுகின்ற, வெவ்வேறு மத நம்பிக்கையினை கொண்ட மாணவர்கள் ஒன்றாக வாழ, ஏனைய மதத்தவரை புரிந்து கொள்ளக் கூடிய வாய்ப்புகள் அதிகாரிக்கின்றன. இதனால் எதிர் காலத்தில் ஏற்படும் புரிந்துணர்வின்மைகளை, வன்முறைகளை கணிசமாக குறைக்க முடியும்.

நாட்டிலுள்ள மக்கள் ஒற்றுமையாக இருப்பார்களானால் அது தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழிவகுக்கும். அது தேசத்தின் வளர்ச்சிக்கு, அபிவிருத்திக்கு வழிகோலும்.எனவே எமது பன்மைத்துவமிக்க அழகிய இலங்கைத் தீவின் எதிர்கால சுபீட்சத்திற்கான மாற்றத்தை பாடசாலைகளிலிருந்தே ஆரம்பிப்போம்.

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்
@skytamil.lk www.skymediasl.com
மாதமிருமுறை | இதழ் - 8 | 16-30 மே 2021

# மூதூர் மண்ணிலிருந்து
## மாதாந்த சிற்றிதழ் வடிவில் வெளிவருகின்ற
# சஞ்சிகையே முத்திதழ்

இவருடம் ஜனவரியில் வெளியான இதழ் இதுவரை ஐந்து வெளியீடுகளை பிரசுரித்துள்ளது. மூதூர் பிராந்திய இளம் எழுத்தாளர்களையும், இலக்கிய ஆர்வமுள்ளவர்களையும் உள்வாங்கி இலக்கிய பயணத்தில் களம் அமைத்துள்ளது முத்திதழ் சஞ்சிகை குழாம். ஒவ்வொரு இதழும் சுமார் 50க்கு மேற்பட்ட இளம் படைப்பாளர்களை அறிமுகம் செய்வதோடு பிரதானமாக மாணவர் ஆக்கம், கவிதை, கட்டுரை, வரலாறு, ஆளுமை அறிமுகம், செய்தி, சட்டவியல், மருத்துவம், பெண்ணியம், அரசியல் மற்றும் முகநூல் பக்கம் என்று பல்வேறு தளங்களை சார்ந்து ஆக்கங்களை தொகுப்பாக்கம் செய்து அச்சிட்டு வெளிவருகின்றது.

மூதூர் பிரதேச செயலக பிரிவை அடித்தளமாகக் கொண்டு விநியோகம் செய்யப்பட்டு வெளிவரும் இவ்விதழ் பல்லின சமூகத்தையும் பிரதிபலிக்கும் வகையில் முஸ்லிம்கள், இந்துக்கள், கிருஸ்தவர்கள் என்று தமிழ் பேசும் சொந்தங்களை இலக்கியத்தினூடாக ஒருபுள்ளியில் இணைக்க வித்திட்டுள்ளது எனலாம்.

எழுத்துத்துறையில் தங்களின் ஆற்றல்களை மேம்படுத்த முயலும் பல இளம் தலைமுறையை சார்ந்த இலக்கிய ஆர்வலர்களுக்கு முத்திதழ் மாத இதழ் பெரும் பாக்கியத்தை அளித்துவருகின்றது. மூதூர் மண்ணிலிருந்து இவ்வாறானதொரு சஞ்சிகை வெளிவந்து தற்போது நாடளாவிய ரீதியாக மூதூரைச் சேர்ந்தவர்களுக்கு அனுப்பப்பட்டு வியாபிக்கின்றமை இக்குறுகிய காலத்தில் சாதனை என்றுதான் கூறியாகவேண்டும்.

அதுமட்டுமன்றி இலாபநோக்கற்ற இச்சஞ்சிகை வெளியீடு மூதூர் மண்ணில் பலரது ஆதரவையும் அங்கீகாரத்தையும் பெற்றுவிட்டது. அடுத்த முயற்சியாக மாகாணம் தழுவிய ரீதியில் ஆக்கங்களை உள்ளீர்ப்பு செய்து வெளியீடு அச்சிட முத்திதழ் ஆசிரியர் குலாம் முயற்சிசெய்து வருகின்றது.

முத்திதழ் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் மூதூர் ஜே.எம்.ஐ என்ற புனைப்பெயர்கொண்ட சமூக ஆர்வலரும், சுயாதீன ஊடகவியலாளரும், எழுத்தாளருமான ஜுனைட் முஹமட் இஹ்ஷான் அவர்களோடு துணை ஆசிரியரும் சஞ்சிகையின் பணிப்பாளருமான காதர் முகமட் அஸ்மி ஆகிய இருவரின் முயற்சியினூடாக இச்சிற்றிதழ் அச்சிடப்பட்டு வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

முதுமை ஊர் என்ற மூதூர் மண்ணிலிருந்து இலக்கிய வெளியீடாக இவ்விதழ் வெளிவருகின்றமை உண்மையில் பாராட்டத்தக்கதோடு இது மேலும் முன்னோக்கி வெற்றிகரமாக முன்னோக்கி நகர எமது துணிந்தெழு மின்னிதழ் சார்பிலான பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நீங்களும் இச்சஞ்சிகை பிரதியை பெற்றுக்கொள்ள விரும்பினால் 075755057, 0771020030 என்ற இலக்கங்களை தொடர்புகொள்ள முடியும்.



முத்திதழ் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் மூதூர் ஜே.எம்.ஐ என்ற புனைப்பெயர்கொண்ட சமூக ஆர்வலரும், சுயாதீன ஊடகவியலாளரும், எழுத்தாளருமான **ஜுனைட் முஹமட் இஹ்ஷான்**






துணை ஆசிரியரும் சஞ்சிகையின் பணிப்பாளருமான **காதர் முகமட் அஸ்மி**







# குழந்தைகளிடம் பாகுபாடு காட்டவேண்டாம் பெற்றோர்களே!

இன்று அதிகமான பெற்றோர்கள் விடும் தவறுகளில் மிகப்பயங்கரமான ஒன்றே பிள்ளைகளுக்கு மத்தியில் பாகுபாடு காட்டுவதாகும். இதனை சர்வசாதாரணமாக காணக்கூடியதைப்பார்க்கலாம்.

பொதுவாக எல்லா பெற்றோர்களுமே பிள்ளைகளிடம் பாசமாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் பாசத்தை பொழிவதில் அவர்கள் கடைப்பிடிக்கும் அணுகுமுறை பிள்ளைகளின் நடவடிக்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்திவிடுகிறது. சில பிள்ளைகள் பெற்றோர்களிடமிருந்து அந்நியமாகிவிடும் நிலைமைக்கு தள்ளப்பட்டு விடுகிறார்கள். 'எவ்வளவோ பாசத்தை கொட்டினாலும் என் குழந்தை என்னிடம் நெருங்கி பழகுவதில்லை' என்று குறைப்பட்டுக்கொள்வார்கள்.

அதற்கு என்ன காரணம் என்று யோசித்துப் பார்க்க வேண்டும். குழந்தைகள் கேட்பதை எல்லாம் வாங்கிக் கொடுப்பதாலோ, அவர்களின் தேவைகளை நிறைவேற்றி வைப்பதாலோ மட்டும் பாசமான பெற்றோர்களாகிவிட முடியாது. பெற்றோர் மட்டும் ஒருதலைப்பட்சமாக அன்பை பொழிவதில் அர்த்தமில்லை.

நீ தான் எனக்குப் பிடித்தவன். நீ தான் அறிவாளி. அவன் முட்டாள் என்பதைப் போன்ற ஏற்றத்தாழ்வுகளை காட்டும் வார்த்தைகளை குழந்தைகளிடத்தில் விதைப்பது அநியாயம். இதை நபி (ஸல்) அவர்கள் தடைசெய்துள்ளார்கள்.

நுஃமான் பின் பஷீர் (ரலி) அவர்கள் மிம்பரின் மீது நின்று கொண்டு, "என் தந்தை அன்பளிப்பு ஒன்றை எனக்குக் கொடுத்தார். என் தாயார் அம்ரா பின்த்து ரவாஹா (ரலி) அவர்கள் என் தந்தையிடம், "நீங்கள் இதற்கு அல்லாஹ்வின் தூதரை சாட்சியாக ஆக்காதவரை நான் இதை ஒப்புக் கொள்ள மாட்டேன்" என்று கூறினார்கள். என் தந்தை அல்லாஹ்வின் தூதரிடம் சென்று, "அல்லாஹ்வின் தூதரே! நான் அம்ரா பின்த்து ரவாஹாவின் வாயிலாக, எனக்குப் பிறந்த என் மகனுக்கு அன்பளிப்பு ஒன்றைக் கொடுத்தேன் அவள் (என் மனைவி) தங்களை சாட்சியாக ஆக்கும் படி எனக்குக் கட்டளையிட்டாள்" என்று கூறினார்.

அதற்கு நபி (ஸல்) அவர்கள், "உங்கள் மற்ற பிள்ளைகளுக்கும் இதே போன்று கொடுத்துள்ளீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு என் தந்தை, "இல்லை" என்று பதிலளித்தார். அப்போது நபி (ஸல்) அவர்கள், "அவ்வாறெனில் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். உங்கள் பிள்ளைகளிடையே நீதி செலுத்துங்கள்" என்று கூறினார்கள். இதைக் கேட்ட என் தந்தை உடனே திரும்பி வந்து, தனது அன்பளிப்பை ரத்து செய்தார்.

அறி : ஆமிர் பின் ஷர்ஹபீல் (ரஹ்),

நூல் : புகாரி (2587)

அதேபோல் தங்களுடைய தேவைகள் எதுவாக இருந்தாலும் தயக்கமின்றி சொல்வதற்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும். அவர்கள் தங்கள் கருத்துக்களை சொல்வதற்கு முன்பாகவே, 'அது உனக்கு சரிப்பட்டு வராது. நீ செய்யும் காரியம் எனக்கு பிடிக்கவில்லை' என்று கறாராக பேசி அவர்கள் மனதை நோகடித்துவிடக்கூடாது. அவர்களின் செயல்பாடுகள் தவறானதாக இருந்தால் பக்குவமாக எடுத்து சொல்லி புரிய வைக்க வேண்டும்.

அதேபோல் எந்த வயதினரிடமும் அன்புடன் பழகுவதற்கு பாகுபாடு காண்பிக்கக்கூடாது. சிறுவயதில் இருந்தே குழந்தைகளிடம் மனம் விட்டு விவாதிப்பதை பழக்கமாக்கிக்கொண்டால் அவர்கள் சரியான முடிவு எடுப்பதற்கு அடித்தளம் அமைக்கப்பட்டுவிடும். அவர்கள் தவறான முடிவுகள் எடுப்பது தவிர்க்கப்பட்டு விடும். எதுவாக இருந்தாலும் நன்கு ஆலோசித்து சுயமாக இறுதி முடிவு எடுக்கும் பக்குவம் கொண்டவர்களாக விளங்குவார்கள்.

எனவே அல்லாஹ் தந்த மிகப்பெறும் அருட்கொடையான குழந்தைகளை நாங்களே எமக்கான சோதனைகளாக ஆக்கிக்கொள்ளாமல் பாதுகாப்போம்

**இன்ஷா அல்லாஹ்.**

**பஸ்லான் ஹாஷிம் - (பன்னவ)**
**இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்.**

துணிந்தெழு
வரலாறு படைக்க இருக்கும் வைர மங்கையர்
@skytamil.lk www.skymediasl.com
மாதமிருமுறை | இதழ் - 8 | 16-30 மே 2021



# தெளிவு...

விலை உயர்ந்த கட்டிலின் மீது பளபளவென்ற போர்வை கண்களை வெட்ட அதிலே குப்புற படுத்தவாறே தன் உயர் ரக தொலைபேசியை தட்டிக் கொண்டிருந்தாள் மஹாறா...
அவளது பேச்சுக்கு மறுபேச்சின்றி தலையசைத்துக் கொண்டிருந்த தொலைபேசியிலிருந்து ஒரு அழைப்பு வரவே தன் இதழ்களை சுழித்தவள் அதனை துண்டிக்க எத்தனித்த தன் கரங்களை சிரமப்பட்டு தடுத்துக் கொண்டாள்...

மறுமுனையில்,
"அஸ்ஸலாமு அலைக்கும் மஹாறா.. வர்ற கிழமை இருக்கிற கட்டுரைப் போட்டிக்கு நீங்க ஆக்கம் எழுதிட்டீங்களா?"

"அ....அது வந்து..ஓ... சாச்சி. இன்னும் ரெண்டு நாளைக்குள்ள முடித்திடுவேன்.."
பல்லை கடித்துக்கொண்டு தொலைபேசி அழைப்பை துண்டித்தவள் மீண்டும் முகநூலில் தன் கவனத்தைத்திருப்பினாள்..

சனி ஞாயிறுகளில் போடப்பட்டிராத நாடகத்தின் தொடரை முழு எதிர்பார்ப்புடன் அப்போதுதான் பதிவிறக்கம் செய்தவளுக்கு கதவு தட்டும் ஓசை மீண்டும் எரிச்சலையூட்ட,

"யாரது?" என்றாள் கோபமாக..

"மகள் மஹாறா.. உம்மம்மா உங்களை பார்க்க வந்திக்கிற. . கீழே வாங்க.."

"சரிமா நான் கொஞ்சம் லேட்டா வாரேன்.."

என்றவள் மீண்டும் படத்தில் மூழ்கிப் போனாள்... மஹாறாவை நினைத்து அவளது தாய்க்கு பெரியதொரு கவலை இருந்துக்கொண்டே வந்தது.. முன்னரெல்லாம் வீட்டுக்கு யார் வந்தாலும் தாயை விட அவளே முன்சென்று கவனிப்பாள்..

ஆனால் இப்போதெல்லாம் யாருடனும் அவள் முந்தியது போல பேசுவதில்லை.. சிறுவயதிலிருந்தே ரிழா-ஆதிராவின் செல்லக்குழந்தையான மஹாறாவிற்கு கஷ்டம் என்றால் என்னவென்று தெரியாமல் வளர்த்தனர் பெற்றோர் இருவரும்... அதனால் மஹாறாவும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தாள்.

அவளுக்கு தந்தையென்றால் கொள்ளை பிரியம்... இருப்பினும் ரிழா தன்னிடம் எவ்வளவுதான் வசதி வாய்ப்புக்களிருந்தும் தன் மகளுக்கு தேவையற்ற சமூகவலைத்தளங்களின் பாதிப்புகள்,அதனுடனான அதிகளவிலான நேர வீண் விரயம் போன்றவை எப்போதுமே அவளை பாதித்து விடக் கூடாது என்பதில் அவரது முழு கவனமும் இருந்தது..

அதனாலோ என்னவோ அவர்களது வீட்டில் ஒரு ஸ்மார்ட் போன் ஒன்றுகூட ஆசைக்கும் இல்லாதிருந்தது.. வசதி வாய்ப்புகள் சிறிதுமற்ற தன் நண்பிகளின் தந்தைமாரிடமெல்லாம் விலை உயர்ந்த தொலைபேசிகள் இருப்பதாகவும் தன்னிடம் மட்டும் அப்படியான ஒன்று கூட இல்லாததையும் பெற்றோரிடம் கூறி அடிக்கடி புலம்பிக் கொள்வாள் மஹாறா...

"தேவை இருந்தா தான் மகள் எதையும் பயன்படுத்தனும்... அதை விட்டுட்டு எதுக்கு நேரத்தை சும்மா வீண்விரயம் செய்யனும்?"
என்ற தந்தையின் பதிலை கேட்டு கேட்டு சலித்துப் போனவள் சிறிது நேரத்தில் அமைதியாகிப் போவாள்..

இவ்வாறான ஒரு கட்டத்தில் தான் கொரோனா எனும் அழையா விருந்தாளி நாட்டுக்குள் புகுந்து ஆட்சி செய்து கொள்ள, பிள்ளைகளின் கற்றல் எல்லாம் தொலைபேசிக்குள் சுருங்கிப் போக, ஸ்மார்ட் ஃபோன் ஒன்றை வாங்கியே தீர வேண்டிய தேவை ரிழாவிற்கு ஏற்பட சில அறிவுரைகளைக் கூறிவிட்டு மஹாறாவிற்கு புது ரக தொலைபேசியொன்றை வழங்கினார் ரிழா...

அன்றிலிருந்து தன்னையே மறந்து தொலைபேசிக்குள் மூழ்கிப் போனாள் மஹாறா... அவளது மொத்த நாளும் தொலைபேசியுடன் மட்டுமே சுருங்கிப் போனது...

ரிழா தன் வேலை நிமித்தமாக வெளியூர் சென்றதனால் அவரால் மகளின் நடவடிக்கைகளை ஊகிக்க முடியவில்லை..
ஆதிராவும் செய்வதறியாது திகைத்தாள்.. நாட்கள் செல்லச் செல்ல இது ஒரு போதை ஆகி விடுமோ எனும் அளவுக்கு மாறியது மஹாறாவின் செயற்பாடுகள்...

அன்றும் வழமைபோல தந்தையின் அழைப்பு வரவே,
முன்னரெல்லாம் மணிக்கணக்கில் பேசுபவள் அன்றைக்கு ஓரிரு நிமிடங்கள் பேசிவிட்டு நகர முற்பட, ரிழாவிற்கு அவளது செயற்பாடுகளில் மாற்றங்கள் விளங்க ஆரம்பித்தன... சில நாட்களாகவே அவர் அவதானித்த அந்த விடயங்களை அன்றைக்கு வெளிப்படையாகவே வினவினார்..

"மகள் நீங்க ஏன் முந்தி மாதிரி இல்ல?"

"அ...அது ஒன்னும் இல்ல வாப்பா..."

அவளது பேசும் முறையை வைத்தே அவளது மனநிலையை புரிந்துகொண்டவருக்கு இத்தனை நாட்களில் தன்னுடைய அன்பு மகளின் உள்ளம் புரிந்து விடாமலா இருக்கப்போகிறது?

"மகள் எங்கட வாழ்க்கையில எதுவுமே ஒரு அளவோடு தான் இருக்கணும்.. எப்போ எங்கட உணர்வுகள் எங்கட சிந்தனைகளை மீறி ஆதிக்கம் செலுத்துமோ அப்ப நாங்க நாங்களாகவே இருக்க மாட்டோம்..


சமூக வலைத்தளங்கள் என்பது எங்கட வாழ்க்கையில ஒரு அங்கம் தான்... ஆனா அதையே எங்கட முழு வாழ்க்கையாகவும் ஆக்கிவிடக்கூடாது..

அதில் முழுசாவே கெடுதிகள் தான் என்று நான் சொல்லவில்லை....ஆனால் தேவைக்கு மட்டும் அதை பயன்படுத்தனும்..
மகள் நீங்க இப்ப பழைய மாதிரி பேசுற இல்ல... அதுட காரணம் நீங்க மனுஷனோட பேசி, சிரிக்கிற நேரத்தை எல்லாம் இந்த போஃன்லயே கழிக்கிறீங்க...
இந்த நிலை மாறனும்.. ஒங்கட ப்ரண்ட்ஸயும் நீங்க தான் மாற்றோனும்.. கொஞ்சம் கொஞ்சமாக இந்த நிலைமையை மாற்ற பாருங்க"

தந்தையின் அன்பான, நிதானமான அறிவுரை
இதுவரை மாசுபட்டிருந்த மஹாறாவின் மூளைக்கு சென்று அம்பாய் தாக்க உண்மையை புரிந்து கொண்டவள் தொலைபேசியை ஒரு பக்கமாய் வைத்துவிட்டு தன் உம்மம்மாவைப் பார்க்க கீழே இறங்கினாள் தன் மனதிலிருந்த பெரியதொரு பாரத்தைக் கீழிறக்கிய மகிழ்வில்....

முற்றும்...

**ஷப்ரா இல்முத்தீன்**
**அட்டாளைச்சேனை..**




உலகின் விசித்திரமான ஆச்சரியமான கூட்டமே இந்த யூதர்கள்.இவர்கள் ஆரம்பத்திலே பெரும் கோழைகள் .ஆரம்ப காலத்தில் மூஸா (அலைஹிஸ்ஸலாம்) போருக்கு அழைத்த போது"நீங்களும் உங்கள் இரட்சகனும் போருக்கு சென்று வாருங்கள் நாங்கள் வெற்றி,தோல்விக்காக காத்திருக்கிறோம்"என்று கூறியவர்களே இந்த யூதர்கள்.ஹிட்லரின் அழிவுக்கு பின்னர் பலஸ்தீன் முஸ்லிம்களிடம் உதவி கேட்டு தங்களுக்கு அடைக்கலம் கேட்டு பெற்றுக்கொண்டவர்கள்தான் இந்த யூதர்கள். இவர்களுக்கு யாரையுமே பிடிக்காது.இவர்கள் ஜீஸஸ் அதாவது ஈஸா(அலைஹிஸ்ஸலாம்)பொய்யன் அவனை நாங்கள் கொலை செய்தோம் என கூறுகின்றனர்.ஆனால் அவர் கொலை செய்யப்படவில்லை.
அவரை அவர்கள் கொலை செய்ய வந்த போது அல்லாஹ் அவர்களை உயர்த்திவிட்டான்.உலக அழிவின் போது ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) பூமிற்கு வருவார்கள்.

மேலும் இவர்கள் கூறுவர் ஜீஸஸ் அதாவது ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) பொய்யன் அவனை நாம் கொலை செய்து விட்டோம்.அவனை இந்த முஹம்மத் (ஸல்லல்லுஹு அலைஹி வஸல்லம்) உண்மை என கூறுகின்றான்.பொய்யனை உண்மை என்று சொல்பவனும் பொய்யன் எனவே இந்த பொய்யன் முஹம்மத் (ஸல்லல்லுஹு அலைஹி வஸல்லம்) அவனையும் கொலை செய்வோம் என கூறினர்.எனவே இவர்களை பொறுத்தவரை இவர்கள் மனித இனத்தின் எதிரிகள்.ஆனால் இவர்களுமோ உலகின் மிகப்பெரிய சக்தியேயாகும்.அதிக மூலைசாலிகளும்,அதிக வியாபாரம் பிஸ்னஸ் என்பதிலும் பிரபல்யமானவர்கள்.ஆனாலும் இவர்கள் ஒரு சிறுபான்மை சமூகமே மேலும் இவர்கள் நாடோடிகளே இவர்களுக்கென ஒரு நாடு கிடையாது.

எனவே 18ம் நூற்றாண்டில் தமக்கென ஓர் நாடு வேண்டும் என பல கூட்டங்களை உருவாக்கினர்.ஒரு யூத சாம்ராச்சியத்தையே உருவாக்கினர்.19ம் நூற்றாண்டில் இது தொடர்பாக பல புத்தகங்களையும் எழுதினர்.19ம் நூற்றாண்டின் இறுதியில் இது தொடர்பாக மாநாடு ஒன்றை நடத்தினர்.அதில் யூத தலைவர்களும் கலந்து கொண்டனர்.அந்த மாநாட்டில் அனைவரும் சேர்ந்து தமக்கென யூத சாம்ராஜ்யத்தை உருவாக்க வேண்டும் என தீர்மானம் எடுத்தனர்.அதற்கான இடம் எது என இடத்தையும் அடையாளப்படுத்தினர் இந்த யூதர்கள்.அவர்களின் தலைநகரமுமோ பலஸ்தீன் ஆகும்.அதனை மையமாக வைத்தே ஓர் யூத சாம்ராஜ்யத்தை சிரியா,லெபனான், ஜோர்தான்,எகிப்தின் சில பகுதிகள்,மக்கா,மதீனா உள்ளடங்களாக உருவாக்க திட்டமிட்டனர்.

ஆனால் இதனை முஸ்லிம் இளைஞர்கள் விடமாட்டார்கள்.ஏனெனின் அவர்கள் இந்த இடங்களை நேசிக்கின்றனர்.எனவே யூதர்கள் மேலும் திட்டம் தீட்டினர் முஸ்லிம் இளைஞர்களின் மார்க்க சிந்தனை இல்லாதவர்களாகவும் சமுதாய சிந்தனை இல்லாதவர்களாகவும் உருவாக்க வேண்டும் என்று இதன் பின் அவர்களை மாற்றியமைக்க பல திட்டங்களை செய்து அதனை வெற்றிகரமாக செய்து முடித்தனர்.அவர்களின் சில திட்டங்களே இந்த சமூக வலைத்தளங்கள், விளையாட்டு கேம்(game),சினிமா, நடிகை, நடிகர்கள் இது போன்றவைகள்...1897 ல் இந்த சதித்திட்டங்கள் நடை முறைப்படுத்தப்பட்டன.

அதன் பின் அவர்களின் பணவலிமையாலும், திறமைகளாலும் இஸ்ரேல் என்ற நாட்டை பலஸ்தீனுக்குள் கொண்டு வந்தனர்.மேலும் பலஸ்தீன் முழுவதும் தம் ஆதிக்கத்தின் கீழ் வர வேண்டும் என்பவற்காக முஸ்லிம்களை அடித்து விரட்டினர் அன்றிலிருந்து இஸ்ரேலிய யூதர்களுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே போராட்டம் நடந்து கொண்டே இருக்கின்றது. இது பலஸ்தீன் மக்களின் வெறுமனே போராட்டம் அல்ல தங்கள் சுதந்திரத்திற்காகவும்,இறை இல்லத்தை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கிலும், லாயிலாஹ இல்லல்லாஹ் என்ற வார்த்தையை சுதந்திரமாக உச்சரிக்க வேண்டும் என்பதற்காகவும் செய்யப்படுகின்ற போராட்டம்.இதற்காக மரணிப்பவர்கள் அனைவரும் ஷஹீத்களே.என்றாலும் வெற்றி என்றோ ஓர் நாள் முஸ்லிம்கள் பக்கமே.......



துணிந்தெழு
இதழ்களை
Whatsapp
மூலம்
பெற்றுக்கொள்ள
CLICK HERE




White Rose
BRIDAL GALLERY
0771491470 | 0754141704




100%
Faby's
Instant Refreshment
Premium Quality
KARAK TEA
Faby's Marketing Lanka
Tel: +94 6722 23257, Mob: +94 7635 03828, +94 777 528242
539/1A, Mashoor Maulana Road, Maruthamunai-03
Faby's Products
www.fabysmarketinglanka.com

# அனைத்து பதிப்புகளும் டிஜிட்டல்
## தொழில்நுட்பத்தில் உங்கள் கைகளில்...






sky தமிழ் NEWS

தனித்துவமே நமது அடையாளம்



www.news.skymediasl.com
இணையதளத்திற்கு
பிரவேசியுங்கள்

@skytamil.lk

**துணிந்தெழு இதழில் உங்கள்**
**விளம்பரங்களைப் பிரசுரிக்க**
**தொடர்புகளுக்கு**

**077 639 11 88**
**077 247 1464**

9 772792 102002